சமயங்கள் - ஓர் அறிமுகம்.

எட்வர்ட் ரமணி

கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Published by

TAMIL THOLOGICAL BOOK CLUB,
C/o Tamilnadu Theological Seminary,
Arasaradi, Madurai - 10.

First Published 1982

Printed at

Printing Institute Annexe, (U. Y. P. A)
Tamil Nadu Theological Seminary,
Arasaradi, Madurai-10.

அறிமுகம்

சமயங்களின் அடிப்படையை ஆயும்பொழுது அவை வழிபாடு, கோட்பாடு, பண்பாடு என்ற மூன்று மையங்களைக் கொண்டிருப்பதாகக் கூறுவார் பி.டி. தேவானந்தன் அவர்கள். இவற்றில் சிறப்புப் பெற்றது பண்பாடு. வழிபாடும், கோட்பாடும், பண்பாட்டின் அடிப்படையிலே அமைகின்றன என்பதை சமயங்களை ஆயும் பொழுது நாம் கண்டு கொள்ளலாம். பண்பாடும், வழிபாடும் கோட்பாட்டைத் தவிர்க்க முடியாது. சமயங்களில் மெய்யுணர்வு நிலை, பிரிவுக்குழு நிலை (Sectarian) பாமர நிலை (Popular) ஆகிய மூன்று நிலைகள் உண்டு என்பர் சிலர். இதனையும் சமயங்களை ஆயும் பொழுது கண்டுணர்ந்து கொள்ளலாம்.

சமயங்களை ஆய்வது அச்சமயங்களின் சிறப்பியல்புகளை அறிந்துக் கொள்ளவும், அச்சமயச் சிறப்புக்களை அடிப்படையாக வைத்து சமய மக்களோடு உரையாடல் நிகழ்த்தவும் பயன்படுகிறது. ஒரு சமயத்தைச் சார்ந்தவர்கள் மற்ற சமயங்களையும், மற்ற சமய மக்களையும் பகைமை உணர்வுடன் நோக்குவது சிறப்பாகாது. நாம் அனைவரும் மனித குலத்தின் பிரதிநிதிகள், நண்பர்கள், என்ற அடிப்படையில் தான் நோக்குதல் வேண்டும். கிறிஸ்தவர்கள் மற்ற சமயங்களை இருளாகக் கருதி தவிர்த்தல் கூடாது. கிறிஸ்த சமயம் மற்ற சமயங்களின் மகுடம் அல்லது மற்றைய சமயங்கள் கூறும் கருத்துக்களனைத்தும் கிறிஸ்தவ சமயத்திலிருக்கின்றது என்று கூறுவதும் சிறப்புடையது ஆகாது. பேராயர் அப்பாசாமி. திரு. பணிக்கர்போன்றோர் மற்ற சமயங்களில் மறைந்திருந்து செயல்படும் கிறிஸ்துவைக் கண்டனர். கிறிஸ்துவின் ஒளிச்சிதறல்கள் எல்லாசமயங்களிலும் இருக்கின்றது. இதனை ஆய்ந்து அறிந்து கொள்வதே கிறிஸ்தவர்களின் கடமை.

இந்தக் குறிப்பேட்டை உதவியாகக் கொண்டு சமயங்களைப் பயிலும் மாணவர்கள், இச்சமயங்களில் மறைந்து கிடக்கும் உண்மைகளை அறிந்து சமயங்களை மதிப்பது அவசியம். இக் குறிப்பேட்டையே முடிவதானதாகக் கொண்டு விடாமல் துணைப் புத்தகங்களையும் முடிந்த வரைப் படிப்பது சாலச் சிறந்தது.

இந்நூலைப் படித்து, ஆலோசனைகள் வழங்கிய பேராயர் செல்வமணி அவர்கட்கும்; இதை வெளியிட அனுமதி அளித்த அருட்திரு அறிவர். ஞான இராபின்சன் அவர்கட்கும்; இந்நூலை எழுதி முடிக்க ஆர்வ மூட்டிய எனது துணைவி திருமதி. மல்லிகா ரமணிக்கும்; இதை வெளியிட்ட கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழுவுக்கும், வெளியிட உதவி செய்த அருட்திரு C. R W. டேவிட் அவர்கட்கும் எனது உளமார்ந்த நன்றி.

அரசரடி.
10.5.82.

அருட்திரு. எட்வர்ட் ரமணி

பொருளடக்கம்

		பக்கம்
	அறிமுகம்	
1.	இந்து சமயம்	1
2.	புத்த சமயம்	44
3.	சமண சமயம்	58
4.	இஸ்லாம் சமயம்	81
5.	சீக்கிய சமயம்	91
6.	சாதுஸ்திரிய சமயம்	100

இந்து சமயம்

பழம்பெரும் சமயங்களுள் சிறப்புப் பெற்றது இந்து சமயம் ஆகும். அறிவர். மகாதேவன் அவர்கள் "இந்து" என்னும் சொல் "சிந்து" என்னும் ஆற்றின் பெயர்மறுவு என்பர். இந்துசமயம் ஒரு குறிப்பிட்ட கொள்கையையோ, கோட்பாட்டையோ குறிக்காது. பலவகைப்பட்ட கோட்பாடுகள் ஒழுக்க விதிகள் சமயக் கருத்துக்கள் அடங்கிய ஒரு சமயக் களஞ்சியமே இந்து சமயம் ஆகும். முதல் முதலில் இந்து என்ற சொல்லால் இந்திய மக்களைக் குறித்தோர் பாரசீகர்கள் எனினும் பிற் காலத்தில் முகமதியரின் ஆட்சிக் காலத்தில்தான் இத்தொடர் பரவலாக வழக்கில் வந்தது. இந்து சமயத்தின் ஆதிப்பெயர்கள் 'சனாதன தருமம்' (நிலைபேறுடைய நெறி), 'வைதீக தருமம்' (பழங்கால நெறி) என்பதாகும். இதனைப் பொதுவாகச் சமயம் என்ற சொல்லினால் அழைப்பதற்குத் தயங்குவர் அறிஞர். இந் நெறியைச் சமயக் களஞ்சியம் என்று அழைப்பதே சால்ச் சிறப் புடைத்து.

திருமறைகள்

இந்து சமயத்தின் திருமறைகளை இரண்டாகப் பகுக்கலாம். முதல்தர அல்லது அடிப்படை ஆதாரமாக விளங்குபவன வேதங் களும், உபநிடதங்களும் ஆகும். இவற்றைச் 'சுருதி' என்று அழைப்பர். இதன் பொருள் இறைவனிடத்தில் இருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதாகும். இரண்டாம் தர ஆதா ரமாக விளங்குபவை 'சுமிர்தி' ஆகும். இவற்றை நினைவுப்படுத்திக் கொள்ளப்பட்ட நூல்கள் என்பர். இத்திருமறைகளின் அடிப் படையில் நாம் இந்துசமயத்தின் கருத்துக்களை ஆராயலாம்.

வேதங்கள் (2000 – 600 B C)

'வித்' என்ற அடிச் சொல்லில் இருந்து பிறக்கின்றது வேதம் என்ற சொல். அறிவு, ஞானம், என்றப் பொருட்களை யுடையது. இச்சொல் கி. மு. 1200க்கும் கி. மு. 600க்கும் உள்ள

இடைப்பட்ட காலத்திலே இவைகள் எழுந்தன என்பர் அறிவர். வேதங்கள் நான்கு. அவை,ரிக் வேதம்,யஜீர்வேதம்,சாம வேதம், அதர்வண வேதமாகும். ஒவ்வொரு வேதங்களும் மந்திரம், பிராமணம், ஆரண்யம், உபநிடதம் என நான்கு பகுதிகளையு டையது. வேதங்கள் வாய்வழிப் பாரம்பரியங்களாக இருந்து பின்பு தொகுக்கப்பட்டது என்பர். ரிக் வேதம் 10 மண்டலங் களையுடையது. இதில் 1028 பாடல்களும் (11 துணைப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளது) 10,552 கவிகளும் (80 துணைக்கவிகளும் சேர்க்கப்பட்டுள்ளது) அடங்கியுள்ளது. யஜுர் வேதம் 40 அதி காரங்களையுடையது. இதில் 1975 கவிகளும் சில உரைநடைப் பகுதிகளும் உள்ளன. சாம வேதத்தில் 1875 கவிகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அமைந்துள்ளது. அதர்வண வேதம் 730 பாமாலைகளை 20 காண்டங்களாகத் தருகிறது. இதில் 5978 கவிகளும் சில உரைநடைப் பகுதிகளும் உள்ளது. வேதங்க ளில் மிகச் சிறப்புடையது ரிக் வேதமே ஆகும். மற்ற வேதங்கள் ரிக் வேதத்தை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளது. 104 கவிகளைத் தவிர சாம வேதம் முழுவதும் ரிக்வேதத்தினின்றே தொகுக்கப்பட்டுள்ளது. அதர்வண வேதத்தில் 16விழுக்காடும், யஜுர் வேதத்தில் 36விழுக்காடும் ரிக் வேதப் பாடல்களைக் காணலாம்.

ரிக்வேதத்தில் படைப்புப்பற்றியக் கருத்துக்கள்:

ரிக் வேதக் காலத்தில் வேள்வி, விழா எடுத்தல் இவ் விரண்டும் ஒரு மனிதனின் கடமையாகக் கருதப்பட்டது. இவை யிரண்டும் படைப்பின் தலைவனுக்கு நன்றிசெலுத்தும் வகையிலே நடந்தது. வேதங்களில் படைப்பைப் பற்றி பல்வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளது. இவை கருத்துச் சிதறல்களாக அமைந்திருக் கின்றனவே தவிர ஒரு முழுமையான கோட்பாடாக வேதங்களில் காணப்படுவதில்லை. இனி படைப்புப் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் பாடல்களை சிந்திப்போம்.

புருஷ சூக்தம் 10:90

'இந்த உலகத்தை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டி ருக்கின்ற புருஷா என்னும் ஆதிபெரும் உருவம் ஆயிரம் தலை களும், ஆயிரம் கண்களும், ஆயிரம் பாதங்களும் உடையதாய் இருக்கிறது. இவ்வுலகம் முழுவதுமே புருஷா வாக இருக்கிறது

இருந்ததும், இருப்பதும் இருக்கப்போவதுமாக அவன் இருக்கின்றான். எல்லா உயிரினங்களும் அவனுடைய கால்பங்கில் அடங்கும். எஞ்சிய மூன்று பங்கு, நிலைபேறுடைய விண்ணகத்திலுள்ளது. இவ்வகையாக ரிக் வேதம் படைப்பின் தலைவனை மனுஉருவேற்பியல் மூலம் விளக்க முற்படுகிறது. இந்த சூக்தத்தில் படைப்பு ஒரு யாகமாக நடந்ததாக விவரிக்கப்படுகின்றது. ஆதி புருஷா பலியிடப்பட்டபோது, அவ்வேள்வியினின்று வழிந்த நெய்யை திரட்டி எடுத்தார்கள். அதுவே பறவைகளாகவும் விலங்குகளாகவும் படைக்கப்பட்டன. இவ்வேள்வியினின்று ரிக், யஜுர், சாம வேதங்கள் தோன்றின. ஆதிப்புருஷாவின் வாயினின்று ஆசாரியனும் (பிராமணன்) கைகளில் இருந்து போர்வீரனும் (ஷத்திரியன்) தொடைகளில் இருந்து வைசியனும், பாதங்களில் இருந்து சூத்திரனும் தோன்றினன். புருஷாவின் மனதினின்று சந்திரனும், கண்களிலிருந்து சூரியனும் பிறந்தது. இவ் வகையாக அனைத்திற்கும் மூல காரணம் புருஷன் என்று இப்பாடல் எடுத்தியம்புகிறது.

ஹிரண்ய கர்ப்பப்பாடல்: — இப்பாடல் ஒன்றுமே தோன்றியில்லாத சுத்த நிலையில் பொன்முட்டை விரிவடைந்ததாகவும், உள்ளவை அனைத்துக்கும் ஒரே ஆண்டவன் பிறந்ததாகவும் கூறுகிறது. அவனே படைப்பு அனைத்திற்கும் காரணம் என்று கூறுகின்றது.

நாசதீயப்பாடல்: — **(ரிக்வேதம் 10:129:)** இப்பாடல் இறைவனுக்குப் பெயர் கொடுக்க முற்படாது 'அது' என்றே அழைக்கின்றது. மற்றப்பாடல்களைப்போன்று மனுஉருவேற்பியல் மூலமும் விளக்க முற்படுவதில்லை. 'இறப்போ இறவாமையோ அப்போது இல்லை. பகல் இரவு வேறுபாடு இல்லாத காலம் 'அது' தன் உள் சக்தியால் சுவாசித்தது .... எவற்றையும் பிறப்பிக்கும் சக்தியையும் வெறுமையில் மூடப்பட்டுக் கிடந்தது. தன்னுடைய சொந்த தவத்தால் அதுபிறந்தது.

இவற்றைத்தவிர படைப்புப்பற்றிய பல்வேறு குறிப்புக்களையும் ரிக் வேதத்தில் காணலாம்.

"எவன் ஒரே இறைவனாக
தந்தையாக, படைப்பாளனாக
யாவும் அறிந்தோனாக

இருக்கின்ருனே
பல பேர்களோடு
பல கடவுளர்களாக விளங்குகின்ருனே
அவனையே நீ யார் என்று
மற்றவர்கள் கேட்கிருர்கள்'' (10:82).

''விண்ணையும் மண்ணையும் இசையமைக்க, என்ன மரத்தைப் பயன் படுத்தினன், எத்தகைய இசையுள்ள மரம் கிட்டிற்று? அனைத்துப் பொருட்களையும் படைக்கும் போது எங்கே நின்றுக் கொண்டு அனைத்தையும் படைத்தான்? என வினவுங்கள்''. ''விஸ்வக் கருமனே பூமியும் வானமும் வணங்க, உயர்த்திப் படைக்கும் பலிகளை உமக்கே கொண்டு வர நம்மைச் சுற்றியுள்ள பிற மனிதர்கள் விழைகின்றனர். நமக்கு பெருந்தன்மை வாய்ந்த முற்போக்கு காப்பாளர் இருக்கிருர்'' (10:81).

''பிராமனஸ்பதி கொல்லனைப் போன்று வெடித்து, உருகி
இவ்வுயிரினங்கள் அனைத்தையும் படைத்தான்
கடவுளின் தொடக்க காலத்தில் இருத்தல் நிலை
இல்லா நிலையினின்று
இருத்தல் நிலை குதித்தெழுந்தது''.

''வெறுமையினின்றே இருத்தல் நிலை உருவாயிற்று.
அடிவானங்கள் பிறந்தன. உற்பத்தி ஆற்றலில் இருந்தே
எழுந்தது. உற்பத்தி ஆற்றலால் பூமியும் பூமியின்
விளிம்புகள்
பூமியிலிருந்தும் பிறந்தன'' (10:72).

இப்படைப்புப் பாடல்கள் அனைத்தும், படைத்தவன் யார், படைப்பின் இரகசியம் என்ன என்ற வினவிற்கு, தங்களால் இயன்ற வரையில் தங்கள் சூழலில் இருந்து விடை காண முயற்சித் திருக்கின்றன என்ருல் மிகையாகாது. ஒரு வேளை இந்நூற்ருண்டில் வாழும் மக்களுக்கு இப்படைப்புப் பாடல்கள் பொருள் உள்ளவையாக இல்லாமல் இருக்கலாம். ஆயினும் இப்பாடல்கள் ஒரு குறிப்பிட்டக்கால சூழலுக்குப் பொருளுடையதாக இருந்தது என்பதை நாம் மறுக்க இயலாது.

ரிக் வேத காலத்தின் சமயக் கருத்துக்கள்:

ரிக் வேதத்தில் பல இறைக் கோட்பாடு, ஓரிறைக் கோட்பாடு, ஒருமைக் கோட்பாடு என்ற மூன்று வகை நிலைகளிலிருந்து இறைவனை அறிந்துக் கொள்ள முற்பட்டனர். இம் மூன்றினையும் வளர்ச்சி நிலைகளாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வேத காலத்தின் துவக்கத்தில் சமயம் இயற்கையோடியைந்த சமயமாகவே இருந்தது. மக்கள் தாங்கள் அஞ்சிய இயற்கைச் சக்திகளுக்கு மதிப்புக் கொடுத்து அவைகளுக்குப் பலி செலுத்தினர். இதன் மூலம் அவர்கள் அச்சக்திகளிடமிருந்து நன்மை பெற விரும்பினர். தங்கள் பலிகளின் மூலம் கடவுளைத் திருப்திப்படுத்தி அவரிடமிருந்து நன்மைகளை, தெய்வங்களைக் கட்டுப் படுத்தி வாங்கி விடலாம் என்று நினைத்தனர். ஆகையினால் இக்கடவுளர்கள் ஒரு சில குறிப்பிட்ட செய்கைகளில் மட்டுமே தெய்வத் தன்மைப் பெற்றதாகவும், மற்ற வகைகளில் அவை மனிதனுகவும் கருதப்பட்டது. இச்சமயத்தில் அக்கினி, இந்திரன், வருணன் போன்ற தெய்வங்கள் சிறப்புப் பெற்றது.

ரிக் வேதத்தின் பலபாடல்கள் அக்கினி தெய்வத்திற்காகப் பாடப்பட்டது. சிறப்பாக 9 ஆம் புத்தகம் முழுவதும் அவருக்குச்சாத்தப்பட்டது. அக்கினியை நெருப்பு, தந்தை, நண்பன், விருந்தாளி சகோதரன், முனிவன், ஆசாரியன், ஒளிக்குஒளி, அகத்தில் வசிக்கும் அகம், போன்ற பல்வேறு சொற்றொடர்களால் குறித்தனர். இல்லத்தில் இருக்கும் நெருப்பு (தீ) மனைவிக்குக் கணவன், வீட்டிற்குத் தலைவன், வீட்டிற்கு நண்பன், வீட்டிற்கு விருந்தாளி என்றுபலவாறு அழைக்கப்பட்டது. அக்கினி கடவுளுக்கும்மனிதர்களுக்கும் சமரசம் செய்பவன். இவனுக்குத் தாடியும், கூர்மையான பற்களும் உண்டு என்று கூறப்பட்டது.

வருணன் ஆகாயவிரிவின் கடவுள். மித்திரா என்று சொல்லப்பட்ட மற்றொருதெய்வம் இவர் தோழன். வருணனும் மித்திராவும் இரவும் பகலுமாகக் கருதப்பட்டார்கள். வருணன் தீமை செய்பவர்களைத் தண்டிப்பவன். இவன் அறநெறிக் கடவுள். சூரியன் இவனது கண்கள். ஆகாய விரிவு, இவனது ஆடை. புயல் இவனது மூச்சு.

இந்திரன் வாயுமண்டல நிகழ்ச்சிக்குத் தேவன். இவனை போர்க்கடவுள் என்றும் மழையை அருள்பவன் என்றும் குறிப்பிடுவர். இவன் உள்ளங்களில் நல்ல எண்ணங்களை தோற்றுவிப்பவன். இவன் பலசாலி(ரிக்1:129:10), பராக்கிரமசாலி (ரிக்1:127:9), மிகவும் வல்லமை உள்ளவன் (ரிக் 3:49:2), தலைவனுக்குரியதன்மையுடையவன் (ரிக்4:22:2)வெற்றிவீரன் (ரிக்1:11:1),என்பர். இவன் அன்புடையவன், தந்தைப்பற்றுடையவன். அருகிலிருந்து நன்மை பயப்பவன்.

இவ்வகையாக மக்கள்பலவகையான தெய்வங்களை வணங்கியும்,அத்தொழுகை அவர்களுக்கு அமைதி தரவில்லை. பலகடவுளர்கள்,அவர்களின் தெய்வத்தன்மைகள், ஒன்றின் மேல் ஒன்று சார்ந்தவையாக இருந்தன. தாஸ்குப்தா அவர்கள், புயல், மழை, இடி போன்ற இயற்கைச்சக்திகள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையது போல, அவைகள் இணைத்துக் கூறப்பட்ட கடவுளர்களும் ஒரேபண்புகளே கொண்டிருந்தன. அவர்களுக்கு ஒரே சிறப்புப்பட்டம் பயன் படுத்தப்பட்டது. ஒருசிலகுறிப்பிட்ட பண்புகளில் மாத்திரமே ஒருகடவுள் மற்றக்கடவுளர்களிடமிருந்து மாறுபட்டு இருந்தனர்" எனக் கூறுகிறார். இக்காலத்தில் ஒரு குறிப்பிட்டசமயத்தில் ஒரு கடவுள் மற்றக்கடவுளைக் காட்டிலும் சிறப்பிடம் பெற்றார். இக்கொள்கையினை ஹீனோதீயிசம், என்று மாக்ஸ்முல்லர் அவர்கள் அழைப்பர். பிரகஸ்பதி, பிரஜாபதி, ஹிரண்யகர்பாபோன்ற தெய்வங்கள் சிறப்புப்பெற்றன.

ரிக்வேதத்தில் ஓரிறைக் கோட்பாடு ஒருமைக்கோட்பாட்டோடு இயைந்திருப்பதைக் காணலாம். உலக முழுமைக்கும் மூல ஆதாரம் எதுஎன்று கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்பட்டது. நாசதீயப்பாடல்கள் இவ்வொருமைக் கோட்பாட்டை விவரிக்கின்றது.

ஒரே உண்மைப் பொருள் ரிக் வேதத்தில் 'யுக்தா' என்றும் யஜுர் வேதத்தில் 'அக்கினி' என்றும், சாம வேதத்தில் 'மகா விரதா' என்றும் வணங்கப்பட்டது'. "ஆவியின் வல்லமையோடு எல்லோரும் ஒன்று சேர்ந்து வானத்தின் கடவுளிடம் வாருங்கள் அவன் ஒருவனே (சாம. 10. 121:110). ஓ அக்கினியே நீ இந்திரன், நீ விஷ்ணு, நீ மித்திரன், நீ வருணன், நீ பாரதி, நீ சரஸ்வதி (ரிக்2:1)."

இவை தவிர்த்து 'ரிதா' என்ற அடிப்படை விதி ஒன்று இவ்வுலகை ஆள்வதான கருத்து ரிக்வேதத்தில் வருகின்றன. 'ரிதா' காலந்தோறும் வருகின்ற ஒழுங்கு முறை. இயற்கை விதி, சமூக விதி, 'ரிதா' தருமன் என்றழைக்கப்படுகிறது (ரிக் 2:13:7). 'ரிதா' வைக்கடைப்பிடித்து நல்ல எதிர்காலத்தை அனுபவியுங்கள் என அதர்வண வேதம் கூறுகிறது (14:1:31). ரிக்வேதம் 'ரிதா' வின் மூலமும் தொழுகையின் மூலமும் ஆஸ்தியை அடையலாம் என்றியம்புகிறது (10:31:2).

வேதங்களின் பிரிவுகளான மந்திரங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் இவற்றைக் குறித்து சிறிது சிந்திப்போம். மந்திரங்கள், பாடல் வடிவில் உள்ளன. ஒருதெய்வக்கோட்பாடு, ஒருமைக் கோட்பாடு போன்ற, பலவகை கோட்பாட்டினை மந்திரங்கள் வாயிலாக அறிகின்றோம். பிராமணங்கள் உரைநடை வடிவிலமைந்திருக்கின்றன. வழிபாட்டு விளக்கங்கள் இறையியல் சிந்தனைகள் இவற்றினைத் தருகிறது. எவ்வகையில் வேள்விகள் நடத்தப்பட வேண்டும், சடங்குகள் ஆசாரங்கள் கடைப்பிடிக்கப் பட வேண்டும் என்றெடுத்தியம்புகிறது. ஆரண்யங்கள் உரை நடை வடிவிலமைந்துள்ளது. துறவு நெறி, தியானம், இவற்றைப் பற்றி விளக்கங்கள் தருகின்றது. ஆரண்யங்கள் அங்கதங்களின் வாயிலாகவும், தியானத்தின் வாயிலாகவும், உண்மைப்பொருளை யடையலாம் என்று இயம்புவது தான் பிராமணங்களில் இருந்து, இதனை வேறுபடுத்திக் காட்டுகின்று. உபநிடதங்களில் கூறப் படும்மறுபிறவிக்கொள்கை ஆரண்யங்களில்காணப்படுவது இல்லை வேள்விகள் மந்திரங்களைப் போன்றுப் பயன் தருவதாகக் கருதப் பட்டது. பிராமணங்கள் நல்ல செய்கைகள் நன்மையையும், தீயசெயல்கள் தண்டனையையும் கொண்டு வரும் என்று கூறுகிறது. 'விதி' கோட்பாடு பிராமணங்களில் சிறப்புப் பெறுகிறது.

உபநிடதங்கள்

உபநிடதங்கள் வேதத்தின் இறுதியாக அமைந்திருப்ப தினால் 'வேதாந்தா' (வேதத்தின் இறுதி) என்றழைக்கப்படும். ஷோபன்ஹார் என்பார் "ஆன்மாவின் அடித்தளத்தைத் தொட்டெழுப்பும் ஆற்றலுடைய இந்நூலுக்கு இணையாக வேறெந்த நூலும் இல்லை" என்பார். உபநிடதங்கள் உரைநடை வாயிலாக அமைந்துள்ளது. சற்றேறக்குறைய நூற்றெட்டுஉபநிடத நூல்கள்

உள்ளன. அவற்றில் 13 உபநிடதங்கள் சிறப்புப்பெறுகிறது. கி.மு.1000 — கி.மு. 400க்கு மிடையே எழுந்தவை முந்திய உபநிடதங்கள் என்றும் கி.மு. 400 — 300க்குமிடையே தோன்றியவற்றை பிந்திய உபநிடதங்கள் என்றும் கூறுவர். 'உபநிஷத்' (உப+நி+ஷத்) அருகில் ஈடுபாட்டுடன் அமர்தல் என்றுபொருள் படும். உபநிடதத் தத்துவங்களை ஆசிரியர் அருகில் அமர்ந்து கற்றலையே இது குறிக்கும்.

உபநிடதங்களின் மையப்பொருள் 'அகம் உணர்தலே'. இதனைப் பல சூத்திரங்களின் வாயிலாக உபநிடதங்கள் எடுத்தியம்புகிறது. **'அகம்பிரம்மாஸ்மி'** (பிரகதாரண்யக 1:4:10) **தத்துவமசி'** (சாந்தோகிய 4 8:7), **ஐயமாத்மிக பிரம்மா** (மாண், டூக்கியது) இவைகளே அந்த சூத்திரங்கள் ஆகும். அகத்தில் உறையும் ஆன்மாவும், அண்ட சராசரங்களை ஆளும் பிரம்மாவும் ஒன்று என்பதே குறிக்கோள். உபநிடதத்தில் இரண்டு வேறுபட்ட கொள்கைகள் இணைந்து இருப்பதாக அறிவர் கருதுகின்றனர். அவையாவன 'பிரபஞ்சக் குறிக்கோள்', 'பிரபஞ்சமில் குறிக்கோள்' (சப்பிரபஞ்சவாதம், நிஷ்பிரபஞ்சவாதம்).

சாந்தோகிய உபநிடதம்(3:14) **'தஜ்ஜலான்'** (தத்+ஜ்+லி+ஆன்)என்பது, உலகத்தை தோற்றுவிப்பது, தன்னுள் ஒடுக்குவது, தாங்குவது, என்று பொருள்படும் கருத்தின் மூலம் சப்பிரபஞ்ச வாதத்தை விவரிக்கின்றது. 'என் அகம் அரிசியை விட அல்லது வாற்கோதுமையை விட அல்லது கடுகை விட அல்லது தினையைவிட அல்லது தினையின் பருப்பை விட சிறியதாக என் நெஞ்சில்உள்ளது. என் அகம்உலகத்தை விட விண்வெளிஉலகை விட வானுலகை விட, இவ்வுலகங்கள் அனைததையும் விட பெரியதாக என் நெஞ்சில் உள்ளது. இது பிரம்மம் நான் இங்கிருந்து செல்லும் போது அது ஆவேனுக''.

பிரகதாரண்யக உபநிடதம் (3:8) நிஷ்பிரபஞ்சவாதத்தை விளக்குகின்றது. "ஓ, கார்கியே, இது அழிவற்றது, ஞானிகள் போற்றுவது, பருமையன்று, நுண்மையன்று, குட்டையன்று, நெட்டையன்று, சிலப்பன்று, ஒட்டுவதன்று, நிழலற்றது, இருளற்றது, காற்றற்றது, இடமற்றது, தொடர்பற்றது, சுவையற்றது, மணமற்றது. பார்வையற்றது, காதற்றது, பேச்சற்றது, மனமற்றது, ஒளியற்றது, மூக்கற்றது, வாயற்றது, உருவமற்றது, உள்ளோ

புறமோ அற்றது. அதனை உண்பது ஒன்றுமில்லை. அது உண்பது ஒன்றுமில்லை'' அது வெறும் பாழை அல்ல பரம் பொருளின் வெற்று நிலை யல்ல இல் பொருள் அல்ல, அப்படி இருப்பினும் உலகத்தை தோற்றுவித்திருக்க முடியாது. இவ்வகையாக 'எதிர் மறை வருணனை' மூலம் பரம் பொருளை விளக்க முற்படுவதை யும் உபநிடதத்தில் காணலாம். இக்கோட்பாட்டை 'நேத்தி நேத்தி' (Neti Neti) கோட்பாடு என்பர்.

இந்த இரண்டு அடிப்படைக் கோட்பாடுகளை யொட்டி, உபநிடதங்கள் பரம் பொருளை சகுண பிரம்மன் என்றும் நிர்குண பிரம்மன் என்றும் விவரிக்கின்றது. பரம் பொருள் சத்து, சித்து, ஆனந்தம், என்ற பண்புகளையுடையவன் என்றும்; இப்பண்பு கள் இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பவை, ஆகையினால் அவற்றைப் பாகுபடுத்திப் பார்க்க முடியாது, என்ற இரண்டு எதிர் மாறான கருத்துக்களை உபநிடதங்கள் கூறுகிறது. இந்த சப்பிரபஞ்சவாத, நிஷ்பிரபஞ்சவாதக் கருத்துக்களைப் பின்னால் வந்த ஆச்சாரிகளும் ஏற்றுக்கொண்டனர். சப்பிரபஞ்சவாதக் கொள்கையை ராமானுஜரும், மத்துவரும் ஏற்றனர். சங்கரர் நிஷ்பிரபஞ்சவாதத்தினடிப்படையில்தம் கொள்கைகளை நிறுவினார்.

படைப்புப் பற்றிய கருத்துக்கள்

கட உபநிடதம்

''உலகங்களின் தோற்றம் எனும் படைப்புத்தீயைப் பற்றி யும், அவ்வேள்வித்தீயின் பலிபீடம் பற்றியும், அது எத்தனை செங்கற்களால் கட்டப்படவேண்டும் என்பது பற்றியும், அவை எவ்வாறு வைக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் (நசிகேத னுக்கு) அவனுக்கு இமயன் விளக்கினான்''. (1 : 15) ''மனிதன் அப் பெரும் வார்த்தையை அறியும் போது பிரம்ம உலகில் இருக் கின்றான்'' (1 : 17). மனிதனிடம் உள்ள ஜீவனுக்கப்பால், பிரபஞ்சத்தின் உறுதிப் பொருள் இருக்கின்றது.

''படைப்புக் கடவுள் பொறிகளைப் புறத்தே செல்லும் படியாகப் படைத்தார். புறத்தே உள்ளப் பொருள் உலகிற்கே அவை ஏகுகின்றன''. (4 : 1)

"தண்ணீரெல்லாம் தோன்றுவதற்கு முன்னர் ஆதியில் தன் எண்ணத் தீயிலினின்று பிறந்தவரும், இதயத்தில் நுழைந்து, மூலகங்களோடுறைபவனுமான படைப்பின் தேவன்— இது உண்மையில் அதுவே'' (4 : 6).

''பிரபஞ்சம் முழுவதும், அவனிடமிருந்தே எழுகின்றது'' (6:2). கட உபநிடதம் படைப்புப் பற்றி மேற்கூறியவாறு கூறுகின்றது.

பிரசன உபநிடதம்:-

முதற்கேள்வி கபந்தி கத்யாயன முனிவரை அணுகி, ''குருவே படைப்பில் உள்ள உயிர்கள் யாவையும் எங்கிருந்து எழுலன?'' எனக் கேட்டார்.

முனிவர், ''ஆதியில் படைப்பின் தலைவர், படைத்தல் எனும் இன்பத்தை அவாவி, தியானத்தில் ஆழ்ந்தார், அதன் விளைவாக ரயியும் பிராணனும் — பொருளும் உயிரும் எழுந்தன. என் பொருட்டு இவை இரண்டும் உயிர்களை உற்பத்தி செய் யும்'' என்று அவர் திருவுள்ளம் நினைத்தது.

வருடத்தின் காலம் படைப்புக் கடவுள் தான். இது இரண்டு பாதைகளையுடையது. ஒன்று தென்பாதை மற்றொன்று வடபாதை.

மாதம் உண்மையில் படைப்பின் தலைமை தான்!

பகலும் இரவும் படைப்புத் தலைவரே!

உணவு உண்மையில் படைப்புத் தலைவனே!

உணவிலிருந்தே வித்து உற்பத்திச் செய்யப்படுகிறது. இதனின்றே உயிர்களெல்லாம் பிறக்கின்றன.

படைப்புத் தலைவனின் சட்டத்திற்குக் கீழ்படிவோர்கள் தாமும் படைப் போர்களாகின்றனர்.

ஆகவே பிரசன உபநிடதம் படைப்புப் பற்றி இவ்வாறு கூறுகிறது.

முண்டக உபநிடதம்:

"பிரமா தேவர்களின் தோற்றத்திற்கு முன்னரே இருந்தார். அனைத்தையும் படைப்பவர் அவர்" (1 : 1 : 1).

உயர் ஞானமுடைய முனிவர்கள் அவனையே (பிரம்மனையே) படைப்பனைத்திற்கும், ஊற்றுக்கண்ணாய் காணுகின்றனர். சிலந்தி ஒன்று நூலை வெளித்தள்ளியும் உள்ளிழுத்தும் கொள்வதைப் போல, மண்ணிலிருந்து செடிகள் முளைப்பதைப் போல, மனித உடம்பிலிருந்து மயிர்கள் எழுவதைப் போல, படைப்பு முழுவதும் அழிவில்லாப்பரம் பொருளினின்றே எழுகிறது (1 : 6).

அந்த பரம் பொருளினின்றே பிரம்மா படைப்புக் கடவுள் எழுகின்றார்.

"படைப்பு உலகங்களைக் கண்டு இறையன்பர் துறவு எய்துவராக. படைப்புக்கு அப்பாலுள்ள பரம்பொருளைச் செயலால் எய்த முடியாது................." (2 : 12).

இதுவே உண்மை; எரியும் நெருப்பினின்றும் ஆயிரமாயிரம் பொறிகள் கிளம்புகின்றன. அதுபோல படைப்புக் கடவுளிடம் இருந்து எண்ணில்லா உயிர்கள் எழுகின்றன. மீண்டும் அவனிடமே திரும்புகின்றன (2 : 1 : 7).

எல்லா உயிரும் மனமும், இன்றும் எல்லா உயிரின் பொறிகளும் அவனிடமிருந்தே தோன்றுகின்றன. அவனிடமிருந்தே வான் வெளியும், ஒளியும், காற்றும், நெருப்பும், நீரும், எழுகின்றன. அவனது உடலின் தலையே நெருப்பு. அவனது கண்களே சூரிய சந்திரர். அவனது காதுகளே வான் வெளிகள். அவனது சொற்களே புனித வேதங்கள். அவனது மூச்சே வீசும் காற்று. அவனது இதயமே இம்முழுப்பிரபஞ்சம். அவனது பாத பீடமே இம்மண்ணுலகம். அவனே அனைத்துள்ளும் கோயில் கொண்டு வாழும் பரம்பொருள் - நெருப்பனைத்துக்கும் சூரியனே மூலம், அத்தகு சூரியன் அவனிடமிருந்தே எழுகின்றான். அவனிடமிருந்தே சந்திரன் எழுகின்றான். சந்திரனிடமிருந்தே மழையும் இவ்வுலகில் மண்ணில் வளரும் எல்லாப் பயிர்களும் எழுகின்றன. அவனிடம் இருந்தே மானிடன் எழுகின்றான். மானிடன் வித்தினைப் பெண்ணிடம் தருகின்றான். இவ்வாறே எண்ணற்ற கோடி உயிர்வகைகள் பரம்பொருளினின்றும் எழுகின்றன (2:1–5).

ரிக், யஜுர், சாமம், அதர்வணம் பாடல்கள் யாவும் சடங்குகள், வேள்விகள், படையல்கள், கொடைகள், வேள்விப் படைப்போர், உலகங்கள், தேவர், கற்றவர், மனிதர். ஆடு, மாடு, பறவை, உள்மூச்சு, வெளிமூச்சு, அரிசி. யவம், தவம், நம்பிக்கை, உண்மை, கற்பு, சட்டம், ஏழு பிரான்கள், ஏழு சுடர்கள், எரி பொருள் ஏழு படையல்கள், பிராணன்களின் ஏழு உலகங்கள். பெருங்கடல்கள், மலைகள், ஆறுகள், பயிர்கள் ஆகிய யாவும் அவனிடமிருந்தே- பிரம்மனிடம்- பிறக்கின்றன (21: 6 - 10).

"படைப்பனைத்திலும் கொழுந்து விட்டெரியும் உயிராக ஞானியர் மோன வியப்பில் அவனைக் காண்கின்றனர்"............
(3 : 1 : 4)

சாந்தோக்ய உபநிடதம்

எங்கிருந் திவ்வுல கெல்லாம் எழுந்தன?
வான் வெளியினின்றே அவை எழுந்தன. எல்லா உயிரும் வான் வெளியினின்றே எழுந்தன. வான் வெளிக்கே அவை மீண்டும் திரும்புவன. வான் வெளியே உண்மையில் அவற்றின் தொடக்கம். வான் வெளியே அவற்றின் இறுதி முடிவு (1 : 9 : 1).

"பிரஜாபதி, அனைத்தும் படைக்கும் கடவுள் தனது படைப்பு உலகங்களின் மீது அமர்ந்து உயிர்தரும் பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்தார் .. .." (2 : 23 – 2).

குழந்தாய்! சிருஷ்டிக்கு முன் இது ஒன்றேயாக இரண்டற்ற தாய், ஸத்தாக இருந்தது. சிலர் இது அ'ஸத்'தாகவே ஆதியில் இருந்தது. இந்த அஸத்திலிருந்து சத்துண்டாயிற்று என்று கூறுவர். அதுஎங்ஙனம் கூடும்? அஸததினின்று 'ஸத்' எப்படித் தோன்றும்? குழந்தாய் இது ஸததாகவே தான் சிருஷ்டிக்கு முன்பு இருந்தது. ஒன்றாக, இரண்டற்றதாக ஒன்றுமில்லாமையில் இருந்து தோன்ற வில்லை. அது கடவுளிடம் இருந்து தோன்றியது இரண்டாவது கடவுளிடமே சரண்புகும்.

இது எல்லாம் பிரம்மமே 'தத்' என்னும் பிரம்மத்தின்று உண்டாகி (தல்லம்) அதிலேயே முடிவில் லயித்து. இடையில் அதிலேயே உயிர்பெற்றிருப்பதால் இவ்வுலகு பிரம்மமே என்று மன அமைதியுடன் உபாசிக்க வேண்டும். மனிதன்

நம்பிக்கை வடிவினை இவ்வுலகில் மனிதன் எவ்வண்ணம் நம்பிக்கையுடையவனாகின்றானோ அவ்வண்ணமே இங்கிருந்து சென்ற பின்னும் ஆகிறான் (3 : 14 :1).

பிருஹத் ஆரண்யக உபநிடதம்......

இந்த அண்டம் ஒரு மூன்றின் தொகுப்பால் நிலை பெற்றிருக்கிறது. இது பெயர், வடிவம், செயல் என்பவற்றால் ஆனது. எல்லாப் பெயர்களுக்கும் ஊற்றுக் கண் சொல்லே. கண் தான் எல்லா உருவங்களுக்கும் மூலம். உடலே எல்லாச் செயல்களுக்கும் மூலம். இவையடங்கியதே மூலம். இவை மூன்றும் ஒன்றே. ஆத்மன் என்பதாகும்; 2. 1. "...... மெல்லிய நூலிழைகள் ஒரு எட்டுக்கால் பூச்சியினின்று தோன்றுவது போலவும், நெருப்பினின்று சிறு பொறிகள் எழுவதைப் போலவும், ஆத்மாவினின்றும், மனிதனும் இலங்கும் பரம்பொருளினின்றும், உயிராற்றல்கள் யாவும், உலகங்கள் யாவும் எழுகின்றன. இன்றும் தேவர் அனைவரும் எழுகின்றனர். இன்றும் எல்லா உயிர்களும் எழுகின்றன ...." (1-20).

தைத்திரிய உபநிடதம்:—

"...... இன்பத்தினின்றே உயிரெல்லாம் எழுகின்றன. இன்பத்திலே அவையனைத்தும் வாழ்கின்றன. இனபத்திற்கே அவையனைத்தும் திரும்புகின்றன -......"(3: 1-6)

பிருகு என்பவர் பிரம்மத்தைப் பற்றித் தமக்குப் போதிக்க வேண்டும் என்று தம் தந்தை வருணரைக் கேட்டார். அதற்கு அவர் எதனிடமிருந்து எல்லாப் பொருள்களும் எழுந்தனவோ எதனால் யாவும் வாழுகின்றனவோ எதைக் கடைசியில் அவை அடைகின்றனவோ அது பிருமம் என்றுக் கூறி அவ்வுண்மைப் பொருளைப் போதித்தார்.

ஐதரேய உபநிடதம்:—

படைப்புக்கு முன்னர் இருந்ததெல்லாம் ஆத்மன்தான். வேறு ஒன்றும் இல்லை. அப்பொழுது, "நான் உலகங்களைப் படைப்பேனாகவும்" என ஆத்மன் நினைத்தான். வானத்திற்கு மேல் அதனால் தாங்கப்பட்டிருக்கும். "அம்பஸ்" வானமாகிய

''மரீச்சி'' அழியும் உலகமாகிய பூமி அல்ல. ''மர'' ஞாலத்திற்கு கீழிருக்கும் உலகமாகிய ''ஆப''— ஆகிய இவ்வுலகங்களை அவர் உண்டாக்கினர்.

''இதோ உலகங்கள் இங்கே உள. அவற்றின் காப்பாளர் களை இனி படைப்பேனுகவும்'' என அவர் நினைத்தார். அதுகாலை அவர் அவற்றின் காப்பாளர்களைப் படைத்தார்.

1. 1. 1-3 ''இதோ இங்கே இந்த உலகங்களையும் இவ்வுல கங்களின் காப்பாளர்களையும் படைத்திட்டேன் இனி காப்பாளர் களுக்கு உணவைப் படைப்பேனுகவும்.'' அவ்வமயம் அவர் அவைகளுக்கு உணவைப் படைத்தார் 1. 3. 1-2.

கைவல்ய உபநிடதம்:

மரணத்தின் பின் மீண்டும் அவன் பிறக்கின்ருன். அவனது புதுப்பிறவியில் சூழ்நிலைகள் அவனது கடந்த பிறவிச் செயல்களாலும், ஏற்படுத்திக் கொண்ட பழக்கங்களாலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

.... உயிரும் பொறிகளும் இன்னும் மண்ணும், காற் றும், நீரும் நெருப்பும், வானும் தோன்றுவன. எல்லா உயிர் நிலைக்கும் பின்னணியாய் உள்ளே பேருண்மை அவனே எனக் கூறுகிறது.

''என்னிடமிருந்தே அனைத்தும் எழுவன என்னில் தான் அனைத்தும் இருப்பன. என்னிடத்தே அனைத்தும் திரும்புவன - நானே பிரம்மன் - ஒப்பில்லா ஒருவன் எனக்கூறுகின்றது.''

சுபால உபநிடதம்:

உலகின் அடிப்படையும் நாராயணன் அதைத் தாங்கு வோனும் நாராயணனே. இப்பிரபஞ்சத்தில் காண்பது எதுவெனி னும் அது படைப்பின் தொடக்கத்தில் இருந்ததில்லை. படைப் பனைத்தின் முதல் ஆதாரம் ஒரே தெய்வீக நாராயணன் மட் டுமே.

இதனைப் போன்ற பல் வேறு படைப்புப் பற்றிய கருத்துக் களை உபநிடதங்களில் காணலாம். மேற்கோளாக ''ஆத்மன்

நீரிலிருந்து உண்டானது" (கத 4 : 6); "உண்மையாகவே இவையெல்லாம் வான வெளியிலிருந்து தோன்றியது" (சாந்தோகிய 1 : 8 : 9); 'உலகம் வெறுமையினின்று தோன்றியது' (தைத்திரிய 2 : 7); அட்சரத்திலிருந்து (அழிக்கவே முடியாத ஒன்றிலிருந்து) அனைத்தும் படைக்கப்பட்டது. (பிரகதாரண்யக 3 : 8 : 39 காணலாம்). இக்கருத்துக்கள் அனைத்தும் படைப்புப்பற்றிய ஒரு முழுமையான கோட்பாட்டைக் கூருது கருத்துச் சிதறல்களாகவே அமைந்துள்ளது. உலகம் படைக்கப்பட்டது எவ்வாறு என்ற வினைவிற்கு முனிவர்களின் பல்வேறு பதில்களாக இவை அமைகின்றது.

சில சிறப்புக் கருத்துக்கள்:

உபநிடதங்கள் உண்மையான பிராமணநிலை குலத்தில் அல்ல உண்மையை கடைப்பிடிப்பதில்தான் அமைகிறது என்று போதிக்கின்றது. இதனைத் தவருன முறையில் பணி செய்யும் ஒருவனுக்குப் பிறந்த ஒருவனுக்கு பிரம்ம அறிவை முனிவர் ஒருவர், உண்மை தெரிந்த பின்னும் கற்றுக் கொடுப்பதில் இருந்தும் அறிய முடிகின்றது (சத்திய காம ஜபலா— சாந்தோகிய (4:1:4).

பிரகதாரண்யக உபநிடதம், ஆசைப்படாதவன், ஆசை இல்லாதவன், ஆசையிலிருந்து விடுபட்டவன், ஆசை பூர்த்தி செய்யப்பட்டவன், அவனுக்கு அகமே அவனுடைய ஆசை. அவன் பிரம்மனாய் இருப்பதனால் பிரம்மனுக்குத் திரும்புகின்றான் என்று கூறுகிறது.

தைத்திரிய உபநிடதம், ஐந்து வகையான கோசங்களைப் பற்றிக் கூறி இன்ப நிலையில் இறைவனோடு இணைவது எப்படி? என்று போதிக்கின்றது (2:1-5).

அன்னமயம் — உடல் (Anna maya)
பிராண மயம் — உயிர்ப்புநிலை (Prana maya)
மனோ மயம் — உணர்வுநிலை (Mano maya)
விஞ்ஞான மயம் — தன்னுணர்வுநிலை (Viganan maya)
ஆனந்த மயம் — இன்பநிலை (Ananda maya)

மாண்டூக்கிய உபநிடதம், உணர்வுநிலை, கனவுநிலை, கனவிலி உறக்கநிலை, ஆகிய மூன்று நிலைகளை எடுத்து இயம்பி

துரிய நிலையில் பிரம்மனோடு இணைவதைப்பற்றிக் கூறுகிறது. முதல் மூன்று நிலைகள் 'ஓம்' என்ற மந்திரத்தின் 3 அட்சரங்களை (அ, உ, அம்) ஒத்து இருக்கிறது என்றுகூறுகிறது.

உபநிடதங்கள் மீட்பிற்கு மூன்று வகையான பாதைகளைக் குறித்து விவரிக்கின்றது. அவை: அறிவு, பக்தி, கிரியை இதனை யடைய மூன்று படிநிலைகளையும் எடுத்தியம்புகிறது. அவை,

ஸ்ரவனம் — உபநிடதங்களைப் படித்தல் (Srvana)
மனனம் — உபநிடதங்களை ஆய்தல் (Manana)
நிதிதியாசனம்–சூத்திரங்களைத் தியானித்தல் (Nidhiyasana.)

மறுபிறவி பற்றியக் குறிப்புக்களும் உபநிடதங்களில் காணப்படுகின்றது. சாந்தோகியத்தில், "கதிர்மணிகள் போன்று மனிதர் உலர்ந்தழிகின்றனர் ஆயின், அம்மணிகள் போன்றே மீண்டும் பிறக்கின்றனர்." எவர்கள் நல்வாழ்க்கை வாழ்ந்தனரோ அவர்கள் நற்பிறவி எடுப்பார்கள். அதாவது, பிராமணனாகவோ, சத்ரியனாகவோ, வைசியனாகவோ பிறப்பர். தீய வழியில் நடந்தோர் பன்றியாகவோ, நாயாகவோ, சண்டாளனாகவோ பிறப்பர் என்று கூறப்படுகின்றது (5 10:7). ஆய்வுக் காலம் 600 BC- 300 AD.

சூத்திரங்கள் (Sutras)

குறுகிய சொல்லினால் பெருகிய பொருள்களைக் கூறும் நூல்களே சூத்திரங்கள் எனப்படும். இவைகள் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் பொதுவாக வேதங்கள் என்றழைப்பர்

அவையாவன :

கல்பா —சடங்குகளைப்பற்றி ஆய்கின்றது (Kalpa)
சிக்ஷா —ஒலியியலைப்பற்றிக் கூறுகிறது (siksa)
சண்டாஸ் —செய்யுளமைப்பியல் (Chandas)
வியாகரணம் —இலக்கணம் (Vyakarama)
நிருக்டா —சொல்லாக்க விளக்கம் (Nirukta)
ஜ்யோ சியா —வான சாஸ்திரம் (Fyotisa)

இவற்றில் கல்ப சூத்திரம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவற்றை மூன்று வகையாகப் பகுத்துக் காணலாம்.

(அ) சிரௌதம் (Strauta) : இது பலிக்குரிய பதினன்கு வகை சடங்குகளைப் பற்றிக் கூறுகிறது. இவற்றில் ஏழு சடங்குகள் பலியுணவு, நைவேத்தியங்கள் பற்றியும் மற்ற ஏழு சடங்குகள் சோம பலிகளைப் பற்றியும் கூறுகின்றது. இதன் விதிமுறைகளைப் பிராமணங்களில் காணலாம்.

ஒவ்வொரு வேதத்திலும் ஒவ்வொரு கிளைக்கும் பல சௌத நூல்கள் உண்டு. ரிக் வேதத்திற்கு ஆச்வலாயனரும், சாங்காயனரும், இயற்றிய சிரௌத சூத்திரங்களும், சாம வேதத்திற்கு லாட்டியானரும், திராஹ்யாயனரும், இயற்றிய சிரௌத நூல்களும் ஜைமினிய சிரௌத சூத்திரமும் இருக்கின்றன. யஜுர் தைத்திரீய கிளைக்கு போதாயனர் ஆபஸ்தம்பர் பாரத்வாஜர் முதலிய முனிவர்கள் இயற்றிய சிரௌத சூத்திரங்களும் உள்ளன. அதர்வண வேதத்திற்கும் வைதான திரைத சூத்திரம் இருக்கின்றது. பிராமணங்களுக்கும் கற்ப சூத்திரங்களுக்கும் உள்ள நெருங்கிய உறவை இவை வெளிப்படுத்துகின்றன.

(ஆ) கிருகியம் (Grhya): இச்சூத்திரங்கள் மனிதன் பிறந்தது முதல் அவன் இறக்கும் வரை உள்ள சடங்குகளைப் பற்றிக் கூறுகிறது. இவை இல்லங்களில் அனுசரிக்கப்பட வேண்டிய ஆசரிக்கப்பட வேண்டியக் கடமைகள். சிறப்பாக இவைகள் திருமணம் புரிந்தவர்கள் செய்ய வேண்டிய ஐந்து வகையான பலிகளைப் பற்றிக் கூறுகிறது'

1. பிரம்ம யக்னம் (Brahma Yajna) — வேத மந்திரங்களுடன் பலிசெலுத்துதல்
2. தேவ யக்னம் (Deva Yajna) — நெய் வார்த்துப் பலி செலுத்துதல்
3. பிதுர் யக்னம் (Pitur Yajna) — இறந்தவர்களின் பெயரால் அளிப்பது
4. பூத யக்னம் (Bhuta Yajna) — பறவை, விலங்கினங்களுக்கு அளிப்பது
5. மானசீய யக்னம் (Manasya Yajna) — மனிதர்களுக்கு அளிப்பது

ஒவ்வொரு வேதத்திலும் ஒவ்வொரு கிளைக்கும் பல கிருஷ்ய சூத்திரங்கள் உண்டு. ரிக் வேதத்திற்கு ஆச்வலாயன கிருஷ்ய சூத்திரமும்,யஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்ப கிருஷ்யசூத்திரங்களும் சாம வேதத்தைச் சேர்ந்த ஜைமினிய கிருஷ்யசூத்திரமும் அதர்வண வேதத்தைச் சேர்ந்த கௌசிக கிருஷ்யசூத்திரமும் உள்ளன.

(இ) தருமம் :— (Dharma) இவைகள் சட்டப் புத்தகங்கள், சமுதாய நலனைக்கருதி அமைக்கப்பட்ட கடமைகள். இங்கு தருமம் என்று சொல்வது சமுதாய தருமத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. மனுதர்ம சாஸ்திரம் இவற்றில் சிறப்புடைத்து. மனுதர்ம சாஸ்திரம் பிராமணனின் பிறப்பு திருச்சட்டங்களின் அவதாரமே என்று கூறுகிறது. மேலும் குலங்களின் அடிப்படையில் அவைகள் செய்ய வேண்டியத் தொழிலை கீழ்கண்டவாறு பகுக்கின்றது.

பிராமணன் — வேதங்களைப் படித்தல், பிறருக்கும் தனக்கும் பலி செலுத்துதல், பிச்சையிடுதலும் ,பெற்றுக் கொள்ளுதலும்.

சத்ரியன் — மக்களைப் பாதுகாத்தல், பலிசெலுத்துவதற்கு கொடுத்தல், வேதங்களைப் படித்தல், சிற்றின்ப மகிழ்ச்சியிலிருந்து விலகியிருத்தல்

வைசியன் — ஆடு, மாடு, பசுக்களைக் காத்தல், பரிசு கொடுத்தல், வேதங்களைப் படித்தல், வியாபாரம் செய்தல், கடன் கொடுத்தல், விவசாயம் செய்தல்.

சூத்திரர் — மற்றவர்களுக்குப் பணி புரிவது (புத்தகம் 1 : 88 - 91).

பிராமணர்கள், சத்ரியர்கள். வைசீயர்கள் ‘மறுபடியும் பிறந்தவர்கள்’ என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் பலி செலுத்தாமல் முடிவான விடுதலையை அடைய முடியாது. சண்டாளர்களும், சுவாபகர்களும் கிராமத்திற்கு வெளியே வசிக்க வேண்டும். இவர்கள் இறந்தவர்களின் உடையை அணிந்து, உடைந்த பாத்திரத்தில் உணவு சமைத்து, இரும்பாலான அணிகளை மட்டுமே அணிபவர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்கு நிலையான இருப்பிடம் கூடாது.

இக்காலத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை பெண்கள் சிறுவயதில் தகப்பனுக்கும், வாலிபத்தில் கணவனுக்கும், கைம்மையின் போது மகனுக்கும் கீழ்படிதல் வேண்டும். அவர்களுக்கு எந்நிலையிலும் சுயாதீனம் கொடுக்கப்படவில்லை. ஆயினும் பெண்கள் மதிக்கப்படும்போது கடவுளர்கள் சந்தோசப்படுவர் என்ற ஒரு குறிப்பையும் மனுதர்ம சாஸ்திரத்தில் நாம் காணுகிறோம்.

இதிகாசங்கள்

ஆரிய சமுதாயத்திற்குள் பல புது உட்குழுக்கள் தோன்ற ஆரம்பித்தன. இதனல் பல புது சமயக்கருத்துக்கள் வளம் பெற ஆரம்பித்தன. பல கடவுளர்கள், மக்கள் முன்பு நிறுத்தப்பட்டனர். உபநிடதக் காலத் தத்துவ விளக்கங்கள் எளிய கதை வாயிலாக மக்களுக்கு எடுத்துக் கூறத் தோன்றியதையே இதிகாசங்கள் எனலாம். இராமாயணம், மகாபாரதம் இவ்வகையைச் சார்ந்தவை.

இராமாயணம்

உலக இலக்கியங்களில் சிறப்பானதாகக் கருதப்படும் மகா காவியங்களில் இது ஒன்று. வால்மீகி என்பவரால் எழுதப்பட்டது. இதில் ஏழு காண்டங்களும், 500 சருக்கங்களும், 24,000 சுலோகங்களும் உள்ளன. யாக்கோபி என்பார் இந்நூலில் ஆரம்பத்தில் 600 சுலோகங்களே இருந்தன என்றும், மற்றவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட இடைச் செருகல்கள் எனவும் கூறுகின்றார். சிலர் இரண்டாம் தொகுதி முதல் ஆரும் தொகுதி வரைதான் பழையது எனவும்; முதலாம், ஏழாம் தொகுதிகள் பிற்சேர்க்கை எனவும் கூறுவர். வின்டர்னிட்ஸ் என்பவர் இராமனைப் பற்றிய வழக்கிலிருந்த பழம் பாடல்கள் பிற்காலத்தில் பல்வேறு கிராமங்களிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்டு தொகுக்கப்பட்டது என்பர். பிரம்மனே நேரில் வந்து இராமனின் சரித்திரத்தினை சந்தமமைத்து, சுலோகமாகப் பாடுக என உத்திரவிட்டதினுல் வால்மீகி இக்காவியத்தை எழுதினர் என பாலகாண்டத்தின் முதல் நான்கு சருக்கங்கள் கூறுகின்றன.

பௌத்தத்தின் தோற்றத்திற்கு பின்பே தான் இது எழுதப் பட்டிருக்க வேண்டும் எனவும்; மகாபாரதம் தோன்றிய காலத் திற்கு பின்பு தான் இது எழுந்திருக்க வேண்டும் எனவும் கூறுவர்.

டுல்கே என்பவர் மூல ராமாயணம் கி. மு. 300 ஆம் ஆண்ட ளவில் இயற்றப்பட்டிருக்கலாம் என்கிறார்.

சிலர் இக்காவியம் கி. மு. முதல் நூற்றாண்டில் உருவாக்கி யிருக்க வேண்டும் என்கின்றனர். கி. மு. 150இல் எழுதப்பட்ட பதஞ்சலியின் மகாபாஷியம் பற்றிக் குறிப்பு உத்தரகாண்டத்தில் வருவதால் அதற்குப் பின்பே இக்காவியம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்.

சமஸ்கிருத இலக்கியத்தில் பல்வேறு வகைப்பட்ட இராமா யணங்கள் உள்ளன. அவை அற்புத இராமாயணம், அத்யாத்ம இராமாயணம், ஆனந்த இராமாயணம், வாசிஷ்ட இராமாயணம், சேஷ இராமாயணம், பௌத்த இராமாயணம். ஜைன இராமாய ணம் ஆகும்.

இராமாயணம் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

i பால கண்டம் — ராகுவின் வழியில் வந்த ராமனின் பால பருவம் விவரிக்கப்பட்டுள்ளது.

ii அயோத்தியா காண்டம் — அயோத்தியின் சம்பவங்கள் ஜனகனின் மகளான சீதை யை இராமன் மணத்தல்.

iii ஆரண்ய காண்டம் — காட்டுப் பகுதிக் காட்சிகள், ராமன் சீதையுடனும், தன் தம்பி லட்சுமணனுடனும் வாழுதல். சீதை இராவணனால் தூக்கிச் செல்லப்படுதல்.

IV கிஷ்கிந்தா காண்டம் — சுக்ரீவன் இருப்பிடத்தில் இராமன் தங்குதல்.

V சுந்தர காண்டம் — வானர சேனைகளால் பாலம் அமைத்து, இராமன் இலங்கை செல்லல்.

VI யுத்த காண்டம் — போரிடும் பகுதி, இராவணன் மடிதல் சீதையை மீட்டல், அயோத்திக்குத் திரும்புதல்.

VII உத்ர காண்டம் — சீதையை மீண்டும் இராமன் காட்டிற்கு அனுப்புதல், அங்கே ஆண் மக்கள் இருவர் பிறத்தல், இராமன் அவர்களை ஏற்றுக் கொள்ளல், சீதையுடன் மீண்டும் கூடி வாழுதல், சீதை பூமாதேவியால் எடுத்துக் கொள்ளப்படல்.

சிறப்புக் கருத்துக்கள் : பல இறைக்கோட்பாடு இங்குக் கூறப்படுகின்றது. வேதங்களில் கூறப்பட்ட கடவுளைத் தவிர குபேரன், கார்த்திகேயன், சாமன், கங்கா, லஷ்மி, உமா, போன்றவர்கள் புதியதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். மிருகவடிவுடைய சேஷா என்ற பாம்பும், ஜாம்பவான் என்ற கரடியும், அனுமன் என்ற வானரமும், ஜடாயு என்ற கழுகும், நந்தி எனும் ஏறும், தெய்வத்தன்மை பொருந்தியவையாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பால்களையும் விளக்க வந்த இக்காப்பியம் அறத்திற்கே சிறப்பிடம் அளிக்கிறது. இராமன் காமத்தை விரும்பாததால், லட்சிய புருடனாகக் கருதப் பட்டான். ஆனால் இராவணன் காமத்தையே விரும்பி வேறு சிந்தனையுடையவனாக இருந்தான். இச்சிந்தையை மாற்ற இறைவனால் மட்டுமே முடியும் எனக் காட்ட திருமாலே மனிதனாக வந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. மனிதனுடன் மனிதனாக வாழ்ந்தாலும், இராமன் தருமத்தைக் கைவிடாது மற்றவர்களுக்கு வழி காட்டி ஆகின்றான். ஆகையினால் இராமனைப் பின் பற்றுவதே தருமம் என்றனர். சீதை லட்சுமணனிடம் வைத்த அன்பு உயர்ந்து நிற்கிறது. இந்த அன்பே தருமத்தின் அறன்.

விதி, குடும்பம், வீரம், இவைகள் குறித்தும் கூறப்பட்டுள்ளது. இறைவழி பாட்டில் வேள்வி சிறப்பிடம் பெறுகிறது.

கர்மம், புனர் ஜென்மம் பற்றிய கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகிறது. புத்தர் நாத்திகர் என்று அயோத்தியா காண் டத்தில் குறிப்பிடப்படுகிறது.

மகாபாரதம்

வியாச முனிவரால் எழுதப்பட்டது. இதனை இந்துசமயத் தவர் ஐந்தாம் வேதமாகக் கொள்வர். உலகில் எழுதப்பட்டுள்ள கவிதைகளில் இது மிகவும் நீண்டது என்பர். இது தொண்ணு ரூாயிரம் ஈரடிப்பாக்களால் ஆன நூலாகும். இதில் பல்வேறு வகைப்பட்டக் கருத்துக்கள் கூறப்படுவதால் இது தொகுக்கப் பட்ட நூல் என்றும், இதனைப் பல ஆசிரியர்கள் எழுதி இருக்க வேண்டும் என்றும், பதிப்பித்தவர்களும் பலராக இருக்க வேண் டும் எனவும் கருதப்படுகிறது. இக்காவியம் கி.பி.200க்கும் கி.பி. 300க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்திருக்க வேண்டும் என் பா. இதில் பதினெட்டு பருவங்கள் உள்ளது. பத்தொன்பதாவது பருவம் பிற்சேர்க்கை எனக் கருதப்படுகிறது.

சிறப்புக் கருத்துக்கள்:- பிரம்மன், விஷ்ணு, ருத்திரன், ஆகிய மூவரும் சேர்ந்து 'தத்தாத்திரேயர்' என்று அழைக்கப்படுகின்றூர். இதன் பொருள் மூவரைத் தன்னுள் கொண்டவன் என்பதாம். இக்காலத்தில் முருகனை சிவனின் குழந்தையாக வழிபட்டனர். மேலும் இக்காலத்தில் துர்கா தேவி வழிபாடும், கிராம தேவதை வழிபாடும் இருந்தது. இயற்கைச் சக்திகள் மானிட வடிவைப் பெற்றன.

தூய வாழ்வுக்கான வழி முறைகள் கூறப்பட்டன. நன்னெறியால் சொர்க்கம் கிட்டும் எனவும்; தீயநெறியால் நரகம் கிட்டும் எனவும். கொஞ்சம் புண்ணியம் செய்தோர் முதலாவது சொர்க்கமும் பின்பு நரகமும் அடைவார் எனவும்; சிறிது பாவம் செய்தோர் முதலில் நரகமும் பின்னர் சொர்க்கமும் அடைவார் எனவும் கூறப்பட்டுள்ளது. புண்ணிய பாவ பலன்களை அனுபவித்த பின்பு மறுபிறப்பு எய்துவாரெனவும்; அப்பிறப்பு மானிட பிறப் பாகத்தான் இருக்கும் என்று கூற இயலாது எனக் கருதப்பட்டது.

எல்லாவழிகளும் இறுதியில் இறைவனையடைந்து பேரின் பம் பெறுவதற்கான வழிகளே. பரம் பொருள் ஒன்றே; அது அழியாதது, உலகம் அதினின்று தோன்றி அதிலே உய்வது,

திரும்பவும் அதிலேயே கலப்பது. உலகத்திலிருந்து பரம் பொரு ளுண்டானதால், இரண்டும் ஒன்றே. புருஷனும் பிரகிருதியும் பிரம்மனின் இரு தோற்ற நிலைகளாகவும், உலகம் பிரம்மனி லிருந்து உருவெடுத்து வருகின்றது என்ற கருத்தும் உள்ளது. அடியார்களுடன் தொடர்பு கொள்ளும் இறைவன் சிவன், விஷ்ணு, கிருஷ்ணன் என, பல பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளான். மகா பாரத சமயத்தின் சாரம் பக்தி எனலாம். அறக்கருத்துக்கள் காணப்படுகின்றது. ஆயினும் அவை இன்ப நாட்டத்தை இலக் காகக் கொண்டவை ஆகும். இன்பமும் துன்பமும் கலந்தே உள் ளன என வனபருவத்தில் கூறப்பட்டுள்ளது. அதிகப் பொறுமை யும் கூடாது, அதிகக் கோபமும் கூடாது என்று மகாபாரதம் கூறுகிறது.

சமுதாயம் குலத் தருமத்தை அடிப்படையாகக் கொண்டு செயலாற்ற வேண்டும் என்ற குறிப்பை இங்கு காணலாம். பெண்கள் திருமறையைப் படிக்கவும், திருத்தலங்களுக்குப்பயணம் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர். புருஷார்த்தாக்கள் சிறப் பிடம் பெறுகிறது. இவற்றுள் சமுதாய ஒற்றுமையை தருமமும் வளர்த்து விடுகிறது என்பர். மறுமைப்பற்றிய பல குறிப்புக்கள் இங்கு உள்ளன.

பகவத்கீதை:— இந்து சமயத்தின் அடிப்படை நூல்களான. **'பிரன்தான – திரியேயயம்'** எனற மூன்று நூல்களில் ஒன்று பகவத் கீதை. இதனைத் தெய்வீகப்பாடல் என்று சுட்டுவர். இது மகா பாரதத்தில் பீஷ்ம பருவத்தில் 25முதல் 42வரை வரும் அதிகாரங் களால் ஆனது. தன் தாயாதிகளான கௌரவர்களோடு போரி டத் தயங்கும் பாண்டவர்களுள் முதன்மையான அர்ச்சுனனுக்கு அவன் தன்குலத்தருமப்படி கடமை ஆற்ற வேண்டும் என்று கிருஷ்ண பரமாத்மா கூறும் உபதேசமாக இது அமைந்துள்ளது. இதில் காணப்படும் தத்துவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இது பிற்சேர்க்கையாக இருக்கலாம் என்பர் அறிவர். பகவத்கீதையில் முதல் அதிகாரத்தையும், இறுதி அதிகாரத்தை யும், தவிர்த்து பார்க்கின் கிருஷ்ணனை ஒரு சாதாரண மனிதனைச் சித்தரித்து இருப்பதைக் காணலாம் என்பர் சிலர். ஆனால் இக் கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதை பதினோரும் அத்தி யாயத்திலேயே விஷ்வரூப தரிசனம் வருவதைச் சுட்டிக்காட்டி

மறுப்பர் சிலர். பகவத்கீதை 700 பாடல்களால் ஆனது எனவும் அதில் 575 பாடல்கள் கிருஷ்ணன் கூறுவதாக அமைந்துள்ளது எனவும் கூறுவர் சிலர்.

பகவத்கீதை கிருஷ்ணன், பிரம்மன் என்று குறிப்பிடுகிறது (10:12). இவன் உலகத்தைப் படைத்தவன் (9.10,10:15-) — உலக னைத்திற்கும் ஈசன் (5:29). சர்வ லோக மகேஸ்வரா என்று கீதை அழைக்கின்றது. இறைவன் உலகத்தைத் தாங்குபவன் (3:15,4.24 6:28,8:8). பிறவாதவன், எங்கும் நிறைபொருள், ஆதிதேவன், உயிர் களின் ஆதி, இடை, இறுதி, (10:12,10:20); யோகத்தைக் கற்பித்த வன் (4:1-4); எல்லாத்தொழுகைக்கும் காரணர் (9:13).

இறைவனோடு ஒன்றுபடுதல் மீட்பு என்று பகவத் கீதை இயம்புகின்றது. இந்நிலையே 'சமாதிஷ்ட சதித்த பிரக்ஞா' (2:54) என்று அழைக்கப்படுகிறது. கீதையின் எல்லா அதிகாரங்களி லும் 'யோகம்' என்றழைக்கப்படுகின்றது. கிருஷ்ணன் அர்ச்சுனனை யோகியாக அழைக்கிறன் (2:50). கிருஷ்ணனில் மட்டுமே மீட்பு உண்டு (18:66). கிருஷ்ணனிடம் வருதல் (8:7,8:15); கிருஷ்ணனை அடைதல் (8:14,7:23); கிருஷ்ணனை அறிந்து கொள்ளுதல் (5:29, 7:1); அவனில் மூழ்குவது (7:18, 13:18); அவனில் ஒன்ற வது (4:10,6:28) போன்ற கருத்துக்களை இதில் காணலாம். மீட்பு என்பது கர்ம சம்சார சுழற்சியிலிருந்து விடுபடல். இவ் விடுதலை இறைவனோடு ஒன்றுபடுதலின் மூலமே கிட்டும் (18:66).

பென்ஜமின் வாக்கர் "கீதையைப் பார்ப்பதிலும், அதை விளக்குவதிலும் பலர் தங்கள் வாழ்க்கையையே செலவிட்டிருக் கின்றனர். சங்கரர், இராமானுஜர், மத்துவர், வல்லபர், முதலி யோர்களும் பிற் காலத்தவர்களான திலகர், அரவிந்தர், காந்தி, ராஜகோபாலாச்சாரியர் போன்றவர்களாகும். இவர்களுக்குள்ளே கீதையின் முக்கிய சாரம் பற்றிய கருத்து வேறுபாடு உண்டு. மத சம்பந்தப்பட்ட பல கருத்துக்களைத் தன்னுள் அடக்கி வைத் திருப்பதனுலும் பலர் தங்களின் தியானம் மூலமாகவும், ஞானம் மூலமாகவும், வழிபடுவதின் மூலமாகவும் கீதையைக் காணுவதி னுலும் கருத்து வேறுபாடுகள் எழ வழி உண்டு. சிலர் தருமத்தைக் குறித்த கருத்துக்கள், சிறப்பாக குலப் பணிகளில் குறிக்கப்பட் டிருப்பதாகக் கருதுவர். பலன் கருதாது செய்யும் தொழிலைத்தான் இது குறிக்கிறது" என்று கூறுகின்றார். பகவத் கீதை சிறப்பாக

மூன்று வகையான மீட்பின் வழிகளைப் பற்றி எடுத்தியம்புகிறது எனலாம்.[1]

(i) **ஞானமார்க்கம்:-** பகவத் கீதையில் மிகவும் சிறப்பித்துக் கூறப்படுவது ஞான மார்க்கமே, "எல்லாவற்றையும் தெரிந்த அறிவே ஞானம் என்று உபநிடதம் கூறுகிறது. இனி அறிவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்படுவதை ஞானம் என்று கீதை கூறுகிறது". [2]. "ஞானம் என்பது யக்ஞா, ஒரு தியாக பலியாகக் கருதப்பட்டது. பின்னர், ஞானமுள்ளவன் ஞானமில்லாதவன் பற்றிக் கூறுகிறது. வீணான எண்ணம், வீணான நடக்கைகள், வீணான அறிவு முதலியவை ஞானமில்லாதவன் குணங்களாகக் கூறப்படுகின்றது. ஞானம் என்பது ஒரு தீப்பொறி. எவ்வளவு பெரிய மரங்களையும் சுட்டு சாம்பலாக்கும் சக்திப் படைத்தது. அந்நெருப்பு சுத்தமாக்குகிறது. அதைப்போன்று சுத்தமாக்கும் பொருள் இல்லை எனலாம். கீதை இதயத்திலிருக்கும், அநியமான சந்தேகங்கள் முதலியவற்றை வெட்டியெறியும் கத்தியாகவும் ஞானத்தை உருவாக்குகின்றது.

"பாவததைக் கடந்து செல்ல உதவும் படகு ஞானம்".[3]. "எல்லா ஞானமும் கடவுளின் ஞானமே. விஞ்ஞானி ஞானம் ரஜஸ், ஆவிக்குரிய ஞானம் சாத்வம், அர்ச்சுனன் தன் சரீர பார்வையால் பார்க்கும் போது உண்மை தெரியவில்லை. ஆனால் ஞானக் கண்களால் பார்க்கும்போது உண்மை தெரிகிறது". (விஷ்பரூப தரிசனம் 11ஆம் அதிகாரம்) [4]. "ஆன்மா இறைவன்பால் சம்பூரணமாய்த் திரும்ப கீதையின் ஞானத் தொகுப்பு ராஜரீகமான ஒரு அஸ்திவாரமாகும். இறைவனை இவ்வாறு சம்பூரணமாய் அறிவதானது அவனை ஆத்மனிலும், வெளிப்பாடுயாவற்றிலும், எல்லா வெளிப் பாட்டிற்கும் அப்பாலுள்ள ஏகபரம் பொருளாகவும் ஒருங்கே அறிவதாகும். ஆயினும், அவனை இவ்விதமாக அறிவதும் கூட போதாது. இந்த அறிவுடன் உள்ளமும், ஆன்மாவும் அவன்பால்

---

1. பென்ஜமின் வாக்கர்,- Hindu World Page 135
2. Anjilevel V. Mathew- The message of the Gita p. 66-67.
3. Ibid p.69-70.
4. Dr. Radha Krishnan S.- Indian Philosophy p.555.

மிகத் தீவிரமாக எழுச்சிப்பெற வேண்டும். மேலும், இந்த எழுச்சியானது, ஒரு முனைப்பட்ட எல்லாவற்றையும் தழுவும் படியான அன்பையும், ஆராதனையையும், ஆர்வத்தையும் தூண்டிவிட வேண்டும். ஞானம் ஆர்வத்துடன் தோழமை பூணவேண்டும். மேல்நோக்கிய எழுச்சியினால் அது உயிர்ப்படையவேண்டும். அவ்விதமின்றி அது உண்மையான ஞானமாகாது".[1] "உன் உயிருடன் அறிவதே உண்மையான ஞானமாகும். உன்னுயிர் ஞானியின் பரிசுத்தத்தை அடையும் போது, அது காண்பதைத் தழுவ எழுகின்றது. அதை உடைமைப் படுத்திக் கொள்ள ஆர்வங் கொள்ளுகின்றது"[2] என்பார் அரவிந்தர்.

(ii)**பக்தி யோகம்:** கண்ணன் பக்தி யோகம் பற்றி 12ஆம் அதிகாரத்தில் எடுத்தியம்புகின்றார். நம்பிக்கையுடையோரும் தியானத்தில் ஈடுபடுவோரும் சம நிலை நின்று உயிர்களிடம் அன்பு கொள்ளுவோரும் தன்னை வந்தடைவதாக இங்கு கண்ணன் சுட்டுகின்றார். தன்னை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் நெறி மீட்பிற்கு வழிநடத்தும். அதில் வெற்றிபெறமுடியவில்லை எனில் யோகத்தில் ஈடுபடவேண்டும். அதுவும் இயலவில்லை எனில் இறைவன் பொருட்டு அனைத்துத் தொழில்களையும் செய்தல் வேண்டும். அதுவும் வாய்க்கவில்லை எனில் சரணாகதி அடைவது சிறப்புடைத்து.

மனிதனது உணர்ச்சி வசப்படும் தன்மையினை சரியான செயல்களில் கொண்டுவரும் சட்டமாக பக்தி மார்க்கம் குறிப்பிடப் படுகின்றது. அறிவு, செய்கை இவற்றினின்று இந்த உணர்ச்சி நிலை வேறுபட்டு நிற்கிறது. இந்நிலை தனி மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள உயிருள்ள உறவாகும். பக்தியானது இயற்கையாகவே இறைவனின் பால் உருவாகும் அன்பாகும்.

கீதையின் கூற்றின்படி பக்தியானது இறைவனின் மேல், பரமாத்மாவின் மேல் பற்றுறுதி கொள்வதும், அவனில் அன்பு கூறுவதும் அவனிடத்தில் பக்தி செலுத்தி அவனுள் ஒன்றாக கலந்துவிடும் நிலையாகும். இப்படி அவனோடு ஒன்றாகவந்து அடைபவன் யார் என்றால், "எங்கும் சமபுத்தியுள்ளவர்களாய்

---

1. ஸ்ரீ அரவிந்தர்: பகவத்கீதை பேருரைகள் 2 ஆம் புத்தகம். p. 84.
2. Ibid

ஐம்புலன்களை, அதன் ஆசைகளை நன்கு அடக்கி சொல்லுக் கடங்காததும், கட்புலனுகாததும், மனதுக்கெட்டாததும், எங்கும் நிறைந்ததும், மாருததும், நிலைத்ததும், நகராததும், அழியாதது மாகியபிரம்மத்தை உபாசிக்கிறவர்கள் தாம்'' (12:34). இவ்வாறு உபாசிக்குப்பக்தர்களை, இறைவன் பிறப்பு,இறப்பு ஆகிய சம்சார பெருங்கடலிலின்று விரைவில் கரையேற்றுகிருர். அதுமட்டு மல்லாது, இவ்வாறு இறைவனிடத்தே மனத்தைவைதது, இறை வனிடத்தில் புத்தியைச் செலுத்தினுல், அவனில் வசிப்பதை உள்ளத்தில் உணரமுடியும். ஐம்புலன்களின் ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் இருந்தால் மட்டுமே இறைவனிடம் முழுபக்தி செலுத்தமுடியும்.

இவ்வாறு முழு சித்தத்தை இறைவன் பால் செலுத்த முடியாவிடில் அப்பியாசத்தால் அவனை அடைய விரும்ப வேண்டும். மனம், உறுதியாக இறைவன் பால் நிலைத்து நின்று விடுமானுல் அது முதிர்ந்த பக்தியாகின்றது. அப்படி மனது உறுதியாக நிலைக்காவிடில் பழக்கத்தால் மனத்தை ஒழுங்கு படுத்த வேண்டும். முழு ஆன்மாவிற்கும் கீதை பக்தியை வலி யுறுத்துகின்றது. ஜீவாத்மா பரமாத்மாவுடன் எப்போதும் எல்லை யற்ற அறிவில் ஒன்றி அவனுடைய உறவில் கலந்து அன்பு செலுத்தல் வேண்டும், பரமாத்மனை சரண் புகுந்து அவனில் வாழ்ந்து அவன் இயல்பை தன்னியல்பாக்கி அன்பில் திகழ வேண்டும் என்ற முக்தியை கீதை போதிக்கின்றது. ஒருவன் தன் மனதை அடக்கியாளும் பயிற்சியில் வல்லமை இல்லாவிட்டால் இறைவன் பொருட்டு கருமம் செய்வதைக் குறிக்கோளாக கொள்ள வேண்டும். இப்படியும் கரும பலனை இறைவன் பால் தியாகம் செய்யும் போது சாந்தி கிட்டுகின்றது.

இறைவனின் பால் பக்தி செலுத்தும் பக்தனின் பேரியல்புகள்

அ) உயிர்கள் அனைத்திடத்தும், வெறுப்பின்றி நட்பும், கருணையும் உடையனவாய், பெருமை அகங்காரம் அற்று, இன்ப துன்பங்களை சமமாகக் கருதி பொறுமையோடு கூட எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பவன் யோகியாய் தன்னடக்கம் உடைய வனுய் திட நிச்சயம் உடையவனுய், இறைவனிடத்து மனத்தை செலுத்துபவனுய் இருப்பான் *(12: 13—14).*

ஆ) பக்தன் ஒருவனது வாழ்வு உலகுக்கு ஒரு நாளும் இன்னல் விளைவிப்பது இல்லை. உடல் வாழ்வில் தனக்கு எவ்வித துன்பங்கள் கேடுகள் வந்தாலும் அவைகளால் அவன் சலன மடைவதில்லை. கோபம், களிப்பு, அச்சம், கலகம் இவைகளி லிருந்து விடுபட்டு வருகிறான். எப்படியெனில் உறுதியான மனதே துன்பம், துக்கம், இன்பம் இவைகளை சமனாகப் பார்க் கிறது. கோபத்துக்கூட்படாத மனது வலிவுப் பெற்று இன்ப துன்பங்களை நிகராகக்கருதுகிறது.

இ) ஐம்புலன்களின் வாயிலாக வரும் இன்பங்களில் ஆசையற்றவனாகவும், வேண்டுதலில்லாதவனாகவும் பக்தன் இருக்கின்றான். எனவே ஆசைகளை அகற்றுமளவு தூயவனாகிறான். இதனால் செயலில் சமார்த்திய முண்டாகிறது. நிறைகோல் போன்று ஓரம் சாராது எல்லோருக்கும் பொதுவாக நடந்து கொள்வான். இவ்வாறு நேர்மையாக நடப்பவனுக்கு மனத் துயரம் ஒரு நாளும் வருவதில்லை. உண்மையான பக்தன் காமிய கருமங்களைத் துறந்தவனாய் இறைவனிடத்திலிருந்து எதையும் எதிர் நோக்குவதில்லையாதலால் அவன் பகவானுக்கு பிரிய முள்ளவனாவான்.

ஈ) உண்மை பக்தன், எல்லோரும் இறைவனின் குழந்தை கள் என்று காண்பதினால், எல்லோரிடமும் பகை, நட்பு என்ற வேறுபாடின்றிப் பழகிமானத்தையும் அவமானத்தையும்நிகராக்கி, குளிர், வெப்பம், இன்ப, துன்பம் இவைகளை ஒப்பாக்கி பற்றற்ற வனாக இருக்கின்றான். இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒன் றாகக் கருதிக் கிடைப்பதில் நிறைவுகண்டு தனக்கென நிரந்தர இடத்தை நாடித் தேடாமல் உறுதியான உள்ளம் கொண்டவனாக இருப்பான். இவன் தான், இறைவனுக்கு, இனி தானவனாக இருப்பான். இந்த பக்தன் மாறுபடுகிற உலகில் மாறுபடாத கடவுள் நாட்டத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பதினால், அவன் நிலையான ஒரு மன நோக்குடையவனாய் ஆகிறான். இறைவன் புகழ் தவிர வேறு ஒன்றையும் பேசா திருப்பதாலும் மௌனியாக இருக்கின்றான்.

முழுமையாக தன்னையும், தனது எல்லாப் பணிகளையும் இறைவனுக்கு ஒப்படைக்கிறவனே உண்மை பக்தன். எல்லா

விதக் காரியங்களுக்கும் சிரத்தை முக்கியமானது. பக்தன்மார் தருமத்திலிருந்து வழி விலகி செல்லுதல் கூடாது.

(iii) **கர்ம யோகம்**:- கர்மம் என்ருல், செயல் படுவது அல்லது, செயல் என்று பொருள் படும். கீதை மனிதர்களைச் செயலாக்கம் உள்ளவர்களாக இருக்க அழைக்கிறது. இந்திய நாட்டின் விடுதலை வீரராகிய பாலகங்காதர திலகர் பகவத் கீதை கர்ம யோகத்தைப் பற்றியே போதிக்கின்றது என்பார். கீதையின் மையப்பொருளாகிய 'நிஷ்காமிய கர்மா', 'லோக்க சம்ரட்சண', இவ்விரண்டு கருத்துக்களும் மனிதனை பலன் கருதாது செயல்கள் புரியும்படியும், அச்செயல்கள் உலகத்தின் நன்மைக்காக அமைய வேண்டும் என்றும் கூறுகின்றது. இதனடிப்படையிலே குருக்ஷேத்ரயுத்தம், தருமயுத்தம் என்றழைக்கப் படுகின்றது. அர்ச்சுனன், அவன் குலத்தொழிலாகிய போர்த் தொழிலைச் செய்யும் படியாக அழைக்கப்படுகின்ருன். அவன் செய்யும் செயலில் வெற்றி தோல்விகளை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் படியாக ஏவப்படுகின்ருன். அவன் செய்யும் போரின் மூலம் அதர்மம் அழிந்து தருமம் நிலைநாட்டப் படும் என்று கருதப்பட்டது.

கர்மயோகம் ஒரு இடைநிலை நெறியாகும். (துறவு நல்கும் மனப்பான்மைக்கும் செயலின் சிறப்பிற்கும்) கீதையின் அறவுரை செயலைத் துறப்பது அன்று', செயலில் துறவு என்பதாகவே உள்ளது. செயல்களைத் தியாகம் செய்வது அல்லது செயல்களின் பலனைத் தியாகம் செய்வது. செயலில் சுயாதீனமே தவிரச் செயலிலிருந்து விடுபட்டு சுயாதீனமாயிருப்பது அல்ல.

கண்ணன் அர்ச்சுனனுக்கு கர்ம யோகம் பற்றிக் கூறுகிருன்.

(அ) ஒரு மனப்பட்டு செயலாற்ற வேண்டும்.

(ஆ) பற்றுகள் யாவற்றையும் விட்டுவிட வேண்டும்.

(இ) வெற்றி தோல்விகளை ஒன்ருகப் பாவித்தல் வேண்டும்.

(ஈ) ஆசைகளினின்று விடுபட்டு ஞானம் என்னும் தீயில் புடமிடப்பட்டுள்ளவனே ஞானியாவான்.

(உ) தன் நலம் தவிர்த்து சேவையில் ஈடுபடுதல், உள்ளத் தூய்மையில் புலனடக்கம். தன் ஆன்மாவைப் போல பிற ஆன்மாவையும் கருதுபவன் கர்மத்தில் ஈடுபடுதல் வேண்டும்.

சிறப்புக் கருத்துக்கள்:- கீதை மூன்று வகையான குணங்களைப் பற்றிக் கூறுகின்றது. சத்துவ குணம் (அமைதி சாந்தம்), ரஜசகுணம் (அமைதியற்ற நிலை), தமசகுணம் (சோம்பலான நிலை). மூன்றாவது நிலைக்கு காமம், குரோதம், லாபம் என்ற மூன்று வாயிலகளுண்டு. இம்மூன்று குணங்களும் எல்லா மனிதரிடத்திலும் காணப்படுகிறது.கீதை இக்குணங்களின் தன்மையை குலங்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறது. பிராமணர்களிடத்தில் சத்துவகுணமும், சத்ரியர்களிடத்தில் ரஜசகுணமும், சூத்திரர்களிடத்தில் தமச குணமும் மிகையாக இருக்குமென்றுக் கூறுகிறது.

ஆன்மாவின் நன்னடத்தைக் குணங்களைப் பொறுத்து அமைகிறது என்று கீதை கருதுகின்றது. இதனடிப்படையில் பலி (17:17-19) தானம் (17:20-22) தபம் இவற்றைப் பற்றிப் பேசுகின்றது. மேற்கோளாக; சாத்வீக தபம் சுயக்கட்டுப் பாட்டிற்காகச் செய்யும் தபம் என்றும்; ரஜசதபம் தற்புகழ்ச்சிக்காகச் செய்யப்படும் தபம் என்றும்; தமச தபம் அறிவீனம், முட்டாள்தனம் இவற்றினடிப்படையில் செய்யப்படும் தபம் என்றும் பகவத்கீதை கூறுகின்றது.

கீதையின் கோட்பாடாகிய **'சுவாபவ தர்மம்'** செயல்கள், குலங்கள், குணங்கள், இவை ஒன்றோடு ஒன்று இணைந்தது. குலங்கள், பண்புகளில் செயல்களினடிப்படையில் தோன்றியது (4:13). அவரவர்கள் தங்கள் தங்கள் குலத்தொழிலை செய்வதே உயரிய இலக்கு (18:23). இத்தொழில்கள் அவரவர்கள் சுவாபத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. கீதை இவ்வாறு வருணாசிரம தருமத்தை நிலைநாட்டுகின்றது (18: 42-44).

புராணங்கள் (300—1200 A D.)

புராணம் என்றால் பழமை என்று பொருள். எது தொன்று தொட்டு வருகின்றதோ அது புராணம் என்று வாயு புராணம் கூறுகிறது. ஒரு கருத்தை வலியுறுத்தவோ அல்லது ஒரு உண்மையைக் கற்பிக்கும் பொருட்டோ இவை தோன்றின. இவை உண்மையாகவும் இருக்கலாம், கதையாகவும் இருக்கலாம். போர் நேரிடும் பொழுது தோல்வியுற்ற நாட்டைச் சேர்ந்த மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டு வாடினர். நம்பிக்கை இழந்த அம்மக்களுக்கு, நம்பிக்கையூட்டும் வகையில் பாவம், மரணம்,

புண்ணியம், மோட்சம், நரகம் தெய்வ நம்பிக்கை போன்ற கருத்துக்களை வலியுறுத்துவதற்காக புராணங்கள் எழுந்தன என்பர். இவை பலரால் எழுதப்பட்டவை. எக்காலத்தைச் சார்ந்தவை என்று வரையறுத்துக் கூற இயலாது. ஆனல், புராணங்கள் யாவும் **பஞ்ச இலக்கணத்தின்** படி அமைபவை. அவை முறையே, உலகத் தோற்றம், ஒழுக்கம், மனுவந்தரம், முனிமரபு, அரச மரபு, என்பன. புராணங்களை மகாப்புராணங்கள் என்றும், உபபுராணங்கள் என்றும் இரண்டாகப் பகுக்கலாம். ஒவ்வொரு வகையிலும் பதினெட்டு புராணங்கள் உள்ளன. மேற்கோளாக சிலவற்றைக் காணலாம்.

1. விஷ்ணு புராணங்கள் ஆறு — விஷ்ணு புராணம், நாரத புராணம், பாகவதபுராணம், கருடபுராணம், பத்மபுராணம், வராக புராணம்.

2. சிவ புராணங்கள் ஆறு — மட்சிய, கூர்ம, லிங்க, வாயு, ஸ்கந்த, அக்கினி புராணங்கள்

3. பிரம்ம புராணம் ஆறு — பிரம்ம புராணம், பிரம்மானந்த புராணம், பிசம்மவைவஸ்த புராணம், மார்கண்டேய புராணம், பவிஷிய புராணம், வாமன புராணம்.

சிறப்புக் கருத்துக்கள்:— புராணங்களின் காலத்தில்தான் பக்திச் சமயங்கள் சிறப்புப்பெற்றன. பிரம்மன், விஷ்ணு, சிவன், மூவரையும், ஒருவராகக் குறிக்கும் திருமூர்த்திகள் கருதது முழுமைபெறுகிறது. சமய, சிறப்பு அடையாளங்கள், முக்கியத்துவம் பெற்றன. பக்தி தொழுகை முதலிடம் பெற்றன. பாகவதபுராணம், கீழ்க் கண்டவற்றை பக்தியின் படிகளாகவே கூறுகின்றது.

சரவணம் (Saravana) — இறைவனின் நாமத்தை அல்லது சரித்திரத்தைக் கேட்பது.

கீர்த்தனம் (Kirtana) — அவன் பெயரை உச்சரிப்பது.

சமாரணம் (Smarana) — அவனை ஞாபகப்படுத்திக் கொள்ளல்.

பாதசேவனம் (Padasevana) — இறைவனின் பாதங்களுக்கு சேவை செய்தல்.

அர்ச்சனை (Archana) — தொழுதல்

வந்தனம் (Vandana) — வணங்குதல்

தாஸ்யம் (Daya) — இறைவனுக்கு அடிமையாய் இருத்தல்.

சாக்கியம் (Sacya) — நட்புறவுக் கொள்ளல்

ஆன்மநிவேதனம் — தன்னை ஈதல்
(Anma Nivedana)

புராணங்களின் காலத்தில் சிறப்புப் பெற்றச் சமயங்கள் மூன்றாகும். அவையாவன, வைணவம், சைவம், சாக்தம் ஆகும். இவைமுறையே திருமாலை, சிவனை, சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு இயங்கின. ஆழ்வார்கள் வைணவத்தையும், நாயன்மார்கள் சைவத்தையும் பரப்பினர் (குறிப்பு: பார்க்க: பக்திநெறி)

ஆழ்வார்கள் கூறும் தத்துவங்கள் மூன்று. அவை சித்து, அசித்து, ஈசுவரன் இவை மூன்றும் தனித்தனி இயல்புடையன. வெவ்வேறு பொருள்கள் என்றும் அழிவில்லாதவை. இவைமூன்றும் எக்காலத்திலும் சேர்ந்தே இருக்கின்றன. இறைவன்; சித்து, அசித்து இரண்டினுள்ளும் **அந்தர்யாமியாக** இருக்கின்றான்.

சைவசமய உண்மைகளை பன்னிரெண்டு தமிழ் சாத்திரங் களில் அமைத்துள்ளார். மெய் கண்டார் என்பார் இதனை சிவஞானபோதம் என்பார். சைவமரபின்படி 'இயங்கும் உயிர் அனைத்தும் ஈசன் கோயில்'. ஈசன் வழிபாடு; ஆலயவழிபாடு, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதாகிய உயிர் வழிபாடு என இருவகைப்படும். ஆலயமும், உயிரும் முறையே படமாடும் கோயில் என்றும், நடமாடும் கோயில் என்றும் அழைப்பார் திருமூலர். 'அன்பேசிவம்' உயிர்களுக்குள் உயர்வு தாழ்வு. சாதிபேதம் இல்லை என்பதனை நாயன் மார்கள் வரலாறு எடுத்தியம்புகின்றது. (பார்க்க: சைவசிந்தாத்தம்)

தரிசனங்கள்

இக்காலத்தில் தத்துவங்கள் சிறப்பிக்கப்பட்டு, கோட்பாடு களாக முழுமையடைந்தன. இவற்றில் சிறப்புப் பெற்றவை ஆறுவகையான தத்துவங்களாகும். இவற்றைப் பொதுவாக 'சத்தரிசனங்கள்' என்பர். இவை மெய்ப்பொருள் அறிவை விளக்க முற்படுகின்றன. இவைகள் யாவும் சூத்திரவடிவிலமைந்துள்ளது.

நியாயம் வைசேடிகம்:— பொதுவாக இவையிரண்டையும் இணைத்துக் கூறுவது மரபு. நியாயம் கௌதமராலும், வைசேடிகம் கண்டராலும் நிறுவப்பெற்றது. இவையிரண்டும் திரவியங்களின் உண்மையை ஆய்ந்து, பகுத்து அவற்றினடிப்படையில் உலகின் உண்மையைவிளக்கமுற்படுகின்றன. இவையிரண்டிலும்கடவுளைப் பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. கடவுளின் வெளிப்பாட்டை ஏற்றுக் கொள்ளாமலே முற்றிலும் அறிவின் துணைக்கொண்டு உண்மையை நிறுவும் போக்கை இங்கு காணுகின்றோம். குருவின் துணைகொண்டு அறிவுத் தெளிவு பெற்று ஆன்ம பந்தங்களிலிருந்து விடுபடலாம் என்றும், அதுவே மோட்சம் என்றும் கூறுகிறது.

சாங்கியம்-யோகம்:— பொதுவாக இவ் விரண்டையும் இணைத்துக்கூறுவர். சாங்கியம் புருடன், பிரகிருதி, இவற்றின் சேர்க்கையால் இருபத்துநான்கு தத்துவங்கள் இவ்வுலகில் தோன்றின என்றும் இது ஒரு வளர்ச்சி நிலை என்றும் கூறுவர். இந்த இருபத்து நான்கு தத்துவங்களைக் கீழே காணலாம்.

1. பிருகிருதி (Prakrti)
2. புத்தி (மகத்) (Buddhi)
3. அகங்கார (Ahamkara)

ரஜஸ் (Rajas)

சாத்வீகம் (Satva) — தமஸ் (Tamas)

4. மனம் (Manas)

5-9, ஞானேந்திரயங்கள் (Ganandriyas)

10-14: கர் மந்திரியங்கள் (Karmandriyas)

15-19: தன் மாத்திரங்கள் (Tanmatras)

20-24: மகாபூதங்கள் (Mahabhutas)

சாங்கியம் உலகைப் படைத்தவர் யாரென்பதைப் பற்றிக் கூறுமலேயே சத்காரிய வாதவழியில் படைப்பை நிறுவுகிறது. கர்மக் கொள்கையை சாங்கியம் ஏற்றுக் கொள்ளுகிறது.

யோகக் கொள்கையை நிறுவியவர் பதஞ்சலி முனிவர் ஆவார். இதனை பதஞ்சலி அவர்கள் **‘சித்த விருத்தி நிரோதா’**,

எண்ண அலைகளை ஒருமுகப் படுத்துதல் என்பார். இதற்கு வழியாக எட்டுப் படிகள் விவரிக்கப்படுகின்றது.

1. யம (Yama) — மற்றவர்களைத் துன்பப்படுத்துதல், பொய்மை, திருட்டு, பேராசை இவற்றிலிருந்து விலகுதல்.

2 நியம (Niyama) — அகச்சுத்தம், புறச்சுத்தம் இவற்றை விளக்கும். நிறைவான மகிழ்ச்சி, கல்வி, தவம், கடவுள் மேல் ஒருமுகச் சிந்தனை இவற்றை வளர்த்தல்.

3. ஆசனம் (Asna) — உடற்பயிற்சி நிலைகளைப் பற்றிக்கூறுவது

4. பிராணயாமம் (Prajnayama) — மூச்சினைக் கட்டுப்படுத்தி ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் விடுதல்.

5. பிரத்யாஹாரம் (Pratyahara) — மனதை புலன் நுகர்வு பொருள்களிலிருந்து திருப்புதல்.

6. தாரணம் (Dharana) — கவனித்தல், ஒருமுகப் படுத்துதல்.

7. தியானம் (Dhyna) — தியானித்தல்

8. சமாதி (Samadhi) — மூழ்குதல், இந்நிலையில் அகங்கார நினைவு அழிந்து கைவல்யம் கிட்டுகிறது.

யோகத்திலும் கடவுளுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்படவில்லை. கடவுளை உயர்ந்த புருடனாகவும் நிறைவாளராகவும், கிலேசங்கள் அற்றவராகவும் கூறுகிறது. உலகிலுள்ள யாவும் நிறைவற்றவை யாதலால் கடவுள் நிறைவுள்ளவர் என்ற வாதம் மட்டுமே காணப்படுகின்றது.

பூர்வ மீமாம்சம்: இக் கொள்கையை நிறுவியவர் ஜைமினி ஆவார். இதற்கு தருமமீமாம்சை என்ற பெயருண்டு. வேதங்களினடிப்படையில் ஒழுக்கத்தையும், தருமத்தையும் நிலை நாட்டுகிறது. ஒருவன் தனக்கு, தன் குடும்பம், உற்றார் உறவினர், நாட்டிற்கு ஆற்ற வேண்டியக் கடப்பாடுகளை வலியுறுத்துகிறது. வேதங்கள் சிறப்பிக்கும் வேள்விமுறையை ஏற்றுக் கொள்கிறது. புருஷார்த்தாக்கள் சிறப்புப் பெறுகிறது. கருமங்களை மூன்றாகப் பகுத்து ஆய்கின்றது.

அ) நித்திய கருமங்கள் (Nitya Karma) — தவருது காலை மாலை ஆற்ற வேண்டிய கருமங்கள், வாழ் நாள் தோறும் கடைப்பிடிக்க வேண்டியவை.

ஆ) நைமித்திய கருமங்கள் (Naimitya Karma) — வரையறை செய்யப்பட்ட கருமங்கள்.

இ) காமிய கருமங்கள் (KamyaKarma) — விரும்பிச் செய்ய வேண்டியவை. பலன்களை விரும்புவோர் செய்ய வேண்டியவை. கண்டிப்பாக ஆற்ற வேண்டும் என்ற கடப்பாடில்லை. இதனைச் செய்வதற்குப் பெற்ருேர்கள் துணை புரிகின்றனர்.

இக்கருமங்களைப் பற்றின்றி ஆற்றினல் மனம் தூய்மை பெறும். தருமங்கள் ஆன்மீக விடுதலைக்குக் காரணமாகிறது.

வேதாந்தம்;— வேதத்தின் இறுதிப் பகுதியாகிய உபநிடதங்களையடிப்படையாகக் கொண்டு எழுந்த மூன்று தத்துவங்களை இது குறிக்கும். சங்கரர், ராமானுஜர்.மத்துவர்,இத்தத்துவங்களை விளக்க முற்படுகின்றனர்.

சங்கரர்:—(A. D. 788-820) உபநிடதத்தின் நிஷ்பிரபஞ்ச வாதத்தை அடிப்படையாகக் கொண்டு கடவுள் ஆன்மா உலகம் இவற்றை விளக்க முற்படுகிருர். உண்மைப் பொருள் ஒன்றே. அதுபிரம்மன் அல்லது ஆத்மன் எனப்படும். சத்து, சித்து, ஆனந்தமாகிய பிரம்மனை பண்புகளால் விளக்க இயலாது. ஆகையால் எதிர்மறை வருணனை சிறப்பிக்கப்படுகிறது. உலகம், அகம், பண்புகளுள்ள கடவுள் இவையாவும், மாயையின் தோற்றமே. பண்புகளுள்ள கடவுளை சங்கரர் ஈஸ்வரன் என்று குறிப்பிடுகின்ருர். ஈஸ்வரன் தொழுகைக்கு காரணன்; இவ்வுலகத்தில் நடைபெறும் காரியங்கள் விவர்த்த வாதத்தின் அடிப்படையில் (காரண காரியம்) நடைபெறுகின்றது. காரண காரியத்திலும் முன்இருப்புநிலையுடையது. தொடர்ந்து செல்லக் கூடியது. காரணம் உண்மைப் பொருள், காரியம் தோற்றம். காரண காரியமிரண்டும் ஒரே காசின் இரண்டு பக்கங்கள் போன்றது.

மாயை 'மா' என்ற வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. இதன் பொருள் 'அளவு' ஆகும். அளவிடப்பட முடியாத பிரம்மன், மாயையினல் அளவிடப்பட்டது போன்று தோன்று

கின்ருன். மாயை உண்மையைப் போன்ற தோற்றத்தையளிக்கின்றது. மாயை இரண்டு வித தீமைகளைச் செய்கின்றது.

1. ஒரு பொருளின் உண்மையான தோற்றத்தை மூடுகின்றது. (**'ஆவரண சக்தி'**) (Avrana Ṣakti)

2. பொய்யை உண்மை போன்றுத் தோன்றச் செய்வது (**விக்ஷேப சக்தி**) (Viksepa sakti). மேற்கோளாக இருளில் தூண்பேய் போன்று காட்சி அளிக்கிறது. தூணை மறைப்பது ஆவரணசக்தி என்றும், தூணைப்பேயாக காட்சியளிக்கும்படி செய்வது விக்ஷேப சக்தியென்றும் கூறலாம். உண்மையான அறிவு மாயையை விலக்குகின்றது. உண்மையான அறிவின் மூலம் ஜீவாத்மா, பரமாத்மாவோடு இணையலாம். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றே. சங்கரர் உண்மையின் மூன்றுவகையான நிலைகளைப்பற்றிக் கூறுகிருர். **பரமார்திக்கநிலை**: முடிவான உண்மை; **வியவகாரிக்கநிலை** ... சார்புப்படுத்தப்பட்ட உண்மை; **பிரார்த்திஹாசிக்கநிலை**... கனவுகளும் மாயையும நிறைந்த உலகம். அறிவின் வழி மூலமே மட்டும் மீட்புக்கிட்டும் என்று சங்கரர் கூறுகின்ருர். ஒருவன் இவ்வுலகிலிருக்கும் போதே இம்மீட்பை அடையலாம் அந்நிலைக்கு 'ஜீவன் முக்தி' என்று பெயர். மோட்சம் என்று சொல்வது ஒரு இடமில்லை ஒருநிலை. சங்கரரின் தத்துவம் **அத்துவைதம்** என்றழைக்கப்படுகிறது. இதன் பொருள் இரண்டல்லது (அ + துவைதம்).

ராமானுஜர்:— (AD1017-1137) உள்பொருள் இருமையற்ற பரம்பொருள் என்கிருர். ஈஸ்வரன், சித், அசித், மூன்றும் உண்மைப் பொருட்களே. ஈஸ்வரன் மட்டுமே தனி உண்மை. சித்தும், அசித்தும், ஈஸ்வரனை ச் சார்ந்த உண்மைப் பொருள்கள். ஈஸ்வரன் ஆள் தன்மையுடைய கடவுள். (**சகுண பிரம்மன்**) சத்து. சித்து, ஆனந்தம், இவைகள் இறைவனுடைய பண்புகள். அகம், இறைவனின் பகுதி இறைவனின்று வேறுபட்டது. ஈஸ்வரன் முழுமையென்ருல், அகம் அவனுடைய பகுதியாகும்; ஈஸ்வரன் ஆதாரம் என்று சொன்னுல் அகம் ஆதரிக்கப்படுபவை, ஈஸ்வரன் முடிவு என்ருல் அகம்கருவி,

ராமானுஜர், அகம், உலகம் இவை ஈஸ்வரனினுன்று வேறுபட்டது என்கின்ருர். ஆயினும் இந்த உலகு, அகம், ஈஸ்வரன், மூன்றும் சேர்ந்து ஒரு பொருள். இதனைக்குறிக்க, **'அப்பிரதக்சித்தி'** என்ற சொல்லைப் பயன் படுத்துகிருர். இதன் பொருள் பிரிக்கமுடியாதது என்பதாகும்.

பக்தி வழியே மீட்படைவதற்குச் சிறந்த வழி. தொழுபவனுக்கு பற்றுறுதி அவசியம். இறையருளும் அவசியம். திருமாலே முழு முதற் கடவுள். லட்சுமிக்கே முதன் முதலாக அவனுடைய கிருபை கிட்டிற்று. மனிதருக்கும் கடவுளுக்குமிடையே மத்தியஸ்தர் லட்சுமியே. அவளின் மூலமே அருள் மற்றவர்களுக்குக் கிட்டுகிறது. **பிரபத்தி** அல்லது **சரணாகதி** சிறந்தது. பிரபத்தி என்பது துளசி இலைகளைக் கடவுளுக்குப் படைப்பது, அரியின் நாமத்தை உச்சரிப்பது, அவன் குறிகளை உடலிலிட்டுக் கொள்வது, ஓம் நமோ நாராயணா என்ற மந்திரத்தை உச்சரிப்பது. இறைவனுக்கு விருப்பமானவற்றை விழைதல்; இறைவனுக்கு விருப்பமில்லாதவற்றைக் களைதல்; இறைவன் காப்பான் என்ற தளரா நம்பிக்கை; இறைவன் காவலை வேண்டி நிற்றல்; இறைப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தல்; தான் ஒன்றுமில்லையென்றெண்ணுதல்; இவையே பிரபக்தியாகும். ராமானுஜரின் தத்துவத்திற்கு **விசிட்டாத்வைதம்** என்று பெயர்.

மத்துவர்:- இவர் போதித்தது **துவைதம்**. துவைதவாதம் இயற்கையாகவே இரு கூறுகளாக அமைந்திருக்கின்றது. — **சுதந்திரம்**, தனித்தியங்கவல்லது; **பரதந்திரம்**, மற்றொன்றைச் சார்ந்து நிற்கும் இயல்புடையது. மத்துவர் இறைவனை சகுண பிரம்மனாக, பண்புகளுள்ளவராகக் கருதுகிறார். கடவுள், உலகம், அகம், மூன்றும் உண்மைப் பொருள்கள். மூன்றும் தனித்தியங்கும் தன்மையுடையது. ஆனால் பரம்பொருளுக்கு மட்டுமே சுதந்திரத் தன்மையுண்டு. மற்றவை அனைத்தும் பரதந்திர இயல்புடையது. உயர் பரம் பொருள் விஷ்ணு. கிருபை மூலமே மோட்சம் கிட்டும். இறைவன் உலகத்திற்கு ஆதாரம்.

மத்துவர் ஐவகை வேறுபாடுகளை விளக்குகிறார்: கடவுளுக்கும் ஆன்மாவிற்குமுள்ள வேறுபாடு, கடவுளுக்கும் சடப்பொருளுக்குமுள்ள வேறுபாடு, ஒரு ஆன்மாவிற்கும் மற்ற ஆன்மாவிற்குமுள்ள வேறுபாடு, ஆன்மாவிற்கும் சடப்பொருளுக்குமுள்ள வேறுபாடு. சடப்பொருளுக்கும், சடப்பொருளுக்குமுள்ள வேறுபாடு. ஆன்மாக்கள் பலவகைப்படும். ஒன்று மற்றொன்றைப் போலிருப்பது இல்லை. ஆன்மாக்கள் மூன்றுவகைப்படும். **நித்திய ஆன்மா** — எப்போதும் விடுதலை பெற்றவை; **முக்த ஆன்மா** –பிறப்பினின்று விடுதலை பெற்றவை; **பாத ஆன்மா** எப்பொழுதும் அடிமையானவை. இவை இரண்டு வகைப்படும். முக்தி பெற உரிமை

பெற்றவை. முக்தி பெற முடியாதவை. முக்தி பெற முடியாதவை பிறவியில் என்றும் உழல்பவை யென்றும், நரகத்திற்கென குறிக் கப்பட்டவை என்றும் இருவகைப்படும். பக்திவழியே மீட்பிற்குச் சிறந்தவழி என்பது மத்துவர் கருத்து.

பக்திநெறி:—

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மகல்வித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவாறுர்பெறுவார் அச்சோவே

என்கிறார் மாணிக்கவாசகர். இப்பாடல் பக்திஎன்ற சொல்லின் உண்மைப்பொருளை உணர்த்துவதாய் இருக்கின்றது. பக்திஎன்ற சொல்'**பஜ்**' எனும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது. அதன் பொருள் சேவை செய்வதாகும். பக்தியென்பது உணர்ச்சி வசப் படுவது அன்று. அன்பில் ஊறித்திளைக்கும் மாண்பு நெறி. ஆழ் வார்களும் நாயன்மார்களும் இப்பக்தி நெறிக்கு மேற்கோளாக வாழ்ந்து காட்டினர். பக்திக்கு செல்வம், குலம், இடம், தடை இல்லை. பக்திக்கு நேரம், காலமும்இல்லை. பக்தியென்பது ஆசாரங் களின் வழியாகத்தான் இருக்கவேண்டும்என்பதும் அவசியம் அல்ல. இறைவனின் அன்பில் ஆழ்ந்த, அமிழ்ந்த. ஆழ்வார் களும், நாயன்மார்களும் இதற்குச் சான்று. பக்தி இயக்கங்கள் வைதீக இந்துக்களுக்கும், புத்த, சமண சமயங்களுக்கும் ஒரு சவால் என்று சொல்லலாம். சடங்குகள் சமயத்திற்கு, தேவை தான். ஆனல் அவை ஒரு தடைக்கல்லாக மாறிவிடக்கூடாது. குலத்தினடிப்படையில் பாகுபாடு செய்வது மனிதனை மனிதனுக மதிக்காது அவமதிப்பதாகும். நாயன்மாரகளை நோக்கின் சம்பந்தர், திருமூலர் போன்ற பிராமண நாயன்மார்களும் உண்டு; அப்பர், வாயிலார், சாக்கியர் போன்ற வேளாள நாயன்மாரு முண்டு. பறையர் நந்தனும், இடையர் ஆனயரும், குயவர் திரு நீலகண்டரும், வேடர்கண்ணப்பரும், நாயன்மார்கள் தாம். இவர்களைத் தவிர்த்து எறிபத்தர் போன்ற மரபு குறிக்கப்படாத நாயன்மார்களும் உண்டு. தொண்டரடிப்பொடி ஆழ்வாரும், குலம் சமயத்திற்கு தடைகல் அல்ல என்கின்றார். திருப்பாண் ஆழ்வார்கீழ்குடியைச் சார்ந்தவர். எச்சாதியினரையும், இறை வனின் அன்பு ஆட்கொள்ளும் என்பதற்கு இவர்களே சான்று.

ஆழ்வார்களும், நாயன்மார்களும், கடவுளிடம் காட்டும் பக்தியில் ஒரு திருப்பு முனையை உண்டுபண்ணினர் என்றால் அது மிகையாகாது. ஒருவேலையாள் தனது எஜமானருக்குக் காட்டும் அன்பைப் போன்றோ (தாஸ்ய); ஒருநண்பன் தனது நண்பனுக்குக் காட்டும் அன்பைப்போன்றோ (சாக்ய); ஒரு குழந்தை பெற்றோரிடம் காட்டுமன்பைப் போன்றோ (சக்சந்த); மனைவி கணவனிடம் காட்டும் பரிவுபோன்றோ (காண்ட); காதலி காதலனிடம் காட்டும் பரிவுபோன்றோ (ரதி), பல்வகையில் அன்பை வெளிப்படுத்தினர். இறைவனிடம் கொண்டிருக்கும் அன்பு இப்படித்தானிருக்க வேண்டுமென்பது அவசியமில்லையே. பக்திநெறியில் ஆழமும் நுட்பமும் நிறைந்த காதலுணர்ச்சிகளை இறைவன்பால் வெளிப்படுத்தினர்.

பக்தர்கள் நாள் தோறும் செய்ய வேண்டிய சரியைகள் பஞ்சகலை என்று ஆகமங்கள் கூறுகின்றன அவையாவன:

1. அபிகமன—நாள்தோறும் முதலில் செய்யவேண்டியவை, நீராடுதல், காலைப் பிரார்த்தனை

2. உபாதனம்—உடலைக்காப்பதற்கு வேண்டிய அளவு உணவோ, பொருளோ தேடும் தொழில், தேவைக்கதிக மானவற்றை வைத்துக்கொள்ள மறுத்தல்.

3. இஜ்யம்:- வீட்டுக் கோயிலில் பிரதிஷ்டை செய்துள்ள விஷ்ணு விக்ரகத்தை நாள் தோறும் சடங்கு முறை வழுவாது வணங்குதல்.

4. சுவாந்தியானம்:- வைணவ, வேத சாத்திரங்களை பக்தி சிரத்தையுடன் ஆராய்தல்

5. யோகம்:-என் நேரமும் இறைவனை தியானம் செய்தல்

ஆழ்வார்கள் பன்னிருவரும், நாயன்மார்கள் அறுபத்தி மூவரும் தமிழ் நாட்டில் ஒரு புது சகாப்தத்தையே உண்டு பண்ணினர் என்றால் மிகையாகாது. அவர்கள் இறைவனுக்கு மாலை முதலியவையணிவித்து மகிழ்தல் முதற்கொண்டு, சமயத் தொடர்புடைய, சமூக செயல்களிலும் ஈடுபட்டனர். (உ-ம்) குளம் வெட்டுதல்.

சைவசித்தாந்தம்

தென்னாட்டு சைவதத்துவமே சைவ சித்தாந்தம் எனப்பட்டது. நம்பியாண்டார் நம்பி சைவ சித்தாந்த விதி முறைகள் பற்றிய நூலைத் தொகுத்தார். சைவசித்தாந்தத்தின் மையப் பொருள்: "சிவமே உயர்ந்த உட்பொருள்; ஜீவன் தன்மையில் சிவத்தைப் போன்றது; ஆனல், அதில் ஒன்று பட்டதன்று; இறைவன் (பதி) ஆன்மா (பசு) தளை (பாசம்) என்ற மூன்று பதார்த்தங்களும் உலகினையமைக்கும் முப்பத்தாறு தத்துவங்களும் உண்மையில் உள்ளவை."

சிவன் உண்டாக்கப் படாதவன். எல்லா ஆற்றலும் நிறைந்தவன், எல்லாம் அறிந்தவன், உயர்வானவன், தூய்மையானவன், தளைகளிற் சிக்காதவன், சக்தியின் மூலமாக பிரபஞ்சமுண்டாவதற்கு முதற் கண் காரணன், படைத்தல், காத்தல், அழித்தல், மறைதல், அருளல், எல்லாம் அவன் தொழில்கள். பதி, பசு, பாசம், மூன்றும் உண்மைப் பொருள்கள். 'பதி' தனிப் பொருள், நிற்குணன், நிர்மலன், இரண்டுமல்லன். 'பதி' எட்டு குணங்களுடையவன்: தன்வயத்தவனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை அறிவினன் ஆதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடமை, முடிவிலாற்றலுடமை, வரம்பிலின்பமுடைமை ஆகியவையாகும்.

பசு ஆன்மாக்களின் கூட்டத்தைக் குறிப்பிடுகிறது. அவை அறுதியாயுள்ளவை; எண்ணிலடங்காதவை; பசுபதியைப் போன்று உண்மை சத்துப் பொருளுமல்ல. பாசத்தைப் போன்ற அசத்துப் பொருளுமல்ல. ஆயின் அவை 'சார்ந்த தன் வண்ணமாதல்' தன்மையுடையவை. பதியைச் சார்ந்து நிற்கும் போது சத்தாகவும், பாசப் பிணிப்பில் அசத்தாகவும், இருப்பதனுல் அவை சத சத்து எனப்படும். ஆணவம், கன்மம், மாயை. இம்மூன்று மலங்களும் பசுவைப் பாசத்தோடு பிணைக்கின்றன. இவற்றிேனுடு மாயேயம், திரோதாயி, ஆகியவையும் மலங்களாக எண்ணப்படுகிறது மாயையினின்று 36 தத்துவங்கள் தோன்றுகின்றன. அவற்றை ஆன்ம தத்துவங்கள், வித்தியாச தத்துவங்கள் சிவ தத்துவங்கள் என மூவகையாகப் பகுக்கப்படுகிறது. ஆன்மா கன்மத்தின் பிடியைத் தளர்த்தி நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு ஆகிய வேறுபாடுகளைக் கடந்து நிற்கும் நிலை, இருவினை

யொப்பு எனப்படும். சித்தாந்தம் இறைவனை அருள்வடிவினனாக வும், அனைத்து நிகழ்ச்சிகளையும் அருட் செயல்களாகவும் காணுதல் சிறப்புடைத்து. சைவ சித்தாந்தம் முக்தியைப் பற்றி துன்பம் துளியும் இல்லாத எதிர்மறை நிலை மட்டுமின்றி பேரின்பமே மய மான உடன்பாட்டு நிலையும் உளதெனக் கூறுகிறது. இம் முத்தி யிலே ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்த போதும் தன் தனி இயல்பை முற்றாய் இழந்து விடுவதில்லை. ஞானம் மிக அவசியம். இது சன்மார்க்கம் எனப்படும். இதனைப் பின் பற்றுவதால் சலோபம், சாமீபம், சாரூபம், சாயூச்சியம் முதலிய பலன்கள் கிடைக்கும். **சலோபம்,** இறைவனிருக்கு மிடம் அடைதல்; **சாமீபம்,** கடவுளுக்கு அண்மையை அடை தல்; **சாரூபம்,** இறைருபமடைதல்: **சாயூச்சியம்,** இரணடற இறைவனோடு கலத்தல், மலங்கள் நீங்கும் நிலையினை மலபரி பாகம் என்பர் இறைவனது அருளை பெறுவது அவசியம். இறை வனை காண விழையும் ஆன்மா திருவருளை முன்னிட்டு தான் அதனை பின்பற்ற வேண்டும். இவ்வுடலோடு முக்தியையடை யலாம் என்பது சைவசிந்தாந்திகள் கொள்கை. இவ்வகை முக்தி யடைந்தவர்களை சிவன் முத்தர்களென்பார்கள்.

தற்கால சமய இயக்கங்கள்

கிறிஸ்தவ சமயம் இந்தியாவில் பரவிய காலத்தில் இந்து சமயம் தன்னை புதுப்பித்துக் கொண்டது என்பார் சிலர் M. M. தாமஸ் அவர்கள் கிறிஸ்தவ சமய வருகை, கிறிஸ்தவ வளர்ச்சி இவைகளால் இந்து சமயத்தின் தொய்வு நிலை மாறி புனர் ஆக்கமுண்டானது என்கிறார். P. D. தேவானந்தன் அவர்களும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றார். ஆனல் D. S. சர்மா, அறிவர். ராதாகிருஷ்ணன் போன்றவர்கள், உறங்கிக் கொண்டிருந்த இந்து சமயம் விழித்துக்கொண்டது என்பர். எப்படியிருப்பினும் ஆங்கிலேய ஆட்சிக்கல்வி முறை, அருட்செய்திப்பணி, இலக்கியப் பணி, இவைகள் இந்தியாவில் செயல்பட்ட போது இந்து சமயம் தனக்குள்ளே மாறத் தொடங்கியது அல்லது வளர்ச்சியடையத் தொடங்கியது என்றால் மிகையாகாது.

இதன் முன்னணியில் நிற்பவர் ராஜாராம் மோகன் ராய் ஆவர். ஆங்கிலக் கல்வி, ஆங்கிலேயத் தொடர்பு, கிறிஸ்தவ அடிப்படைகளை கற்கும் நாட்டத்தை இவருக்கு உண்டாக்கின

கிறிஸ்தவமும், கிறிஸ்துவின் அறை கூவலும் அவரை பேரள விற்கு கவர்ந்தது. இதன் அடிப்படையில், 'யேசுவின் கொள் கைகள்' என்ற நூலை எழுதினர். மேனாட்டவரின் பண்பு, சமயம் இவற்றில் கண்ட சிறப்பானவைகளை ஏற்க இவர் தயங்கவில்லை. கிறிஸ்துவின் அறநெறிக்கோட்பாடு இவரை பெரிதும் கவர்ந்தது. அடுத்த படியாக கேசுப் சந்திரசென் என்பார் கிறிஸ்துவத்தால் மிகவும் கவரப்பட்டு, இந்து சமயத்தில் பல மாற்றங்களை உரு வாக்க முயன்ருர். இவர்களை நாம் புனராக்க கிளையைச்சார்ந்தவர் களென்றுக் கூறலாம். இவர்கள் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு அடிப்படை இந்திய நாட்டிலிருந்து அல்ல, இந்திய நாட்டிற்கு வெளியேயிருந்து வந்த கருத்து உந்துதல் எனலாம்.

அடுத்தப் படியாக புத்தெழுச்சி கிளையை சார்ந்தவர்கள். மேற்கோளாக சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் ஆரிய சமாஜத்தைக் கூறலாம். இவர் இந்து சமயத்தின் புத்தெழுச் சிக்கு அடிகோலினர். அதே சமயத்தில் ஆங்கில நாட்டு கல்வி அடிப்படையை, தன் சமய நம்பிக்கைக்கு ஆதாரமாகக் கொண் டிருந்தார். இவர் கிறிஸ்தவ சமயத்திலிருந்த கருத்துக்களை ஏற்று இந்து சமயத்தை மாற்றிக் கொள்ளாது, கிறிஸ்தவ சமயத்தை இந்து சமயத்திற்கு ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டார். ஆகை யினல் இவர் இந்து சமயத்தையே உற்றுப்பார்த்து பல சீர்திருத் தங்களை உண்டாக்கினர்.

மூன்ருவது குழுவினர் புத்துணர்ச்சி குழுவினர் எனலாம் இவர்கள் தங்கள் சீரமைப்புகளுக்கு இந்திய நாட்டிலிருந்தும், இந்திய நாட்டிற்கு வெளியே இருந்தும் வந்த கருத்துக்களால் உந்துதல் பெற்ருர்கள். மேற்கோளாக காந்தியடிகள், அரவிந்தர் போன்ரேரைக் குறிப் பிடலாம். நான்காவது குழுவினர் புரட்சியை அடிப்படையாகக் கொண்டு செயல் பட்டனர். மேற்கோளாக திராவிடக்கழகத்தைக் குறிப்பிடலாம். திராவிட கழகம் பிராமணர் களுக்கு கொடுத்து வந்த முக்கியத்துவத்தையும், இந்தி மொழி ஆதிக்கத்தையும், புராண இந்து சமயக் கருத்துக்களையும் எதிர்த் தனர். இந்த புனரமைப்பு இயக்கங்களனைத்தும் சமய மாற்றங் களுக்கு மட்டும் அடிகோலிடாமல் சமுதாய மாற்றங்களுக்கும் உதவியது. ராஜாராம் மோகன் ராய் அவர்கள் 'சதி' என்ற பெண்கள் உடன்கட்டைஏறும் வழக்கத்தை எதிர்த்து போராடி வெற்றி கண்டார். அரவிந்தர் மனிதனின் சிறப்பிடத்தை மா

மனிதன் கோட்பாட்டைக் கொண்டு நிறுவினர். காந்தியடிகளும், பெரியாரும் பெண்களுக்கு சம உரிமை கொடுக்கும் படி போராடினர் இதனைப்படையில் புனரமைப்பு இயக்கங்கள் சமய வாழ்வையும் சமுதாய வாழ்வையும் பாகுபடுத்தவில்லையெனக் காணலாம். சமய வாழ்வு சமுதாய வாழ்வின் சீரமைப்பிற்கும் சமுதாயவாழ்வு சமய வாழ்வி புத்ன்தெழுச்சிக்கும் அவசியம்.

BIBLIOGRAPHY

Das Gupta, S. — A History of Indian Philosophy

Devanandan P D — Resurgent Hinduism.

Farquefar, J. N — Modern Relgious Movement.

Hiriyana, M — Outlines of Indian Philosophy

Hume, R E — Thirteen Principal Upanishads

Macnicol, N — Hindu Scripture

Manuel, Albert — Religion of the Indian People (Tamil) pp1-68

Mahadevan, T.M.P — Outlines of Hinduism

Radha Krishnan, S — The Hindu View of life.
Indian Philosophy

Rajarikam, D — History of Hinduism (Tamil)

Sarma, D. S — Hinduism through the Ages.

புத்த சமயம்

அறிவர், டால்ஸ்டாயை கீழ்த்திசை கலாச்சாரங்களும் கீழை நாடுகளும் வெகுவாகக் கவர்ந்திருந்தது. அதிலும் சிறப் பாக இந்தியாவின் பால் அவர் தனி நாட்டம் கொண்டிருந்தார் என்ருல் மிகையாகாது. இந்திய கலாச்சாரத்தை- இந்தியாவின் இதிகாசப் புராண வேத உபநிஷதங்களை, திருக்குறளை, புத் தரின் போதனைகளை ஒரு மாணுக்கனைப் போன்று சிரத்தையுடன் கற்ருர்.

"பௌத்த மதம் டால்ஸ்டாயை பெரிதும் கவர்ந்துள்ளது. பௌத்த மதத்தில் உள்ள சமத்துவம் குறித்த போதனைகளே, பிரதானமாக டால்ஸ்டாயை ஈர்த்துள்ளன". மனிதகுலம் அனைத் தும் இயற்கைத் தாயின் குழந்தைகளே இயற்கையின் முன் மனிதர் யாவரும் சமம்" என்று பிரகடனம் செய்தார் புத்தர்.

"அரச குலத்தில் பிறந்தவனும் அடிமையாகப் பிறந்தவ னும், வறியவனும் செல்வந்தனும், பிரபுவும் ஆண்டியும், ஒரு சூரியனுக்குக் கீழே தான் வாழ்கின்றனர்" என்றும், "அன்பாய் இரு. பெருந்தன்மையாய் இரு. கடின உழைப்பை மேற்கொள். அறிவுரையும், இயற்கையின் அருளையும் வழிபட்டு ஒழுகு. உன் னைத் தூய்மைப் படுத்திக் கொள். அப்போது நீ ஞானத்தை அடை வாய்" என்றும், அருளிய புத்தரின் பல மகாப்போதனைகள் அவரது சொந்த வாழ்க்கையில் ஆசரிக்சப்பட்டுவந்தன.

மனிதர் அனைவரின் மீதும் ஆதிக்கம் செலுத்தும். சர்வ வல்லமை படைத்த சக்தி ஒன்று இருப்பதைப் பௌத்த மதம் மறுத்தது, டால்ஸ்டாயைக் கவர்த்த மற்ருெரு பிரதான அம்சமாகும். புத்தருக்கு முன் பல நூற்ருண்டுகளாய் இந்தியச் சமூகத்தில் பிராமணப் புரோகிதர்களின் மேலாட்சி நீடித்து, மனி தர்களிடையே சமத்துவம் இன்மையையும், கடவுளின் பெயரால் கொடுமைகள் இழைப்பதையும் போன்ற பழக்கங்கள் நிலவின. அவர்களின் கருத்துப்படி ஏழையும் பணக்காரனும்

எஜமானரும் அடிமையும், சோம்பேறியும் உழைப்பாளியும் கடவுளின் விதிப்படிதான் அவ்வாறு அமைந்து வாழ்கின்றனர் என்பதாய் வகுக்கப்பட்டிருந்தது.

'ஜாதியையும் மனிதர்கள் மத்தியில் பிரிவினையையும் உறுதிப்படுத்துவதற்கு, அவை யாவும் கடவுளிடமிருந்தே தோன்றின' என்று புத்தருக்கு முன்னர் ஒரு கருத்துப் பரப்பப்பட்டு வந்தது. இந்த நம்பிக்கையைப் பௌத்தம் முற்றாக நிராகரித்தது. இதுவே டால்ஸ்டாயை மிக உண்மையாக ஈர்த்த இந்திய ஞானமாகும். ஏனெனில், அக்காலத்தில் கிறிஸ்துவ சமயமும், ஐரோப்பாவின் பிற மதங்களும் - உருவக் கடவுளையும், மாயாவாதத்தையும், அற்புத நிகழ்ச்சிகளையும் பரப்பிக் கொண்டிருந்ததை, டால்ஸ்டாய் மறுத்துப் போராடிக் கொண்டிருந்தார். இறுதியாக டாஸ்ல்டாய் தனது சித்தாந்தத்துக்கு ஒத்ததாயும், ஊற்றமாயும் பௌத்த மத நெறிகள் விளங்குவதைக் கண்டார். இவ்வாறு டால்ஸ்டாயை மயக்கிய புத்த சமயத்தைப்பற்றி நாம் இங்கு அறியலாம்.

"பிராமண சமயம் அதிகாரத்துடன் விளங்குதல் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், பலிகளுக்குச் சிறப்பிடம் நல்கல், வேதத்தின் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளல், சமஸ்கிருத மொழி ஆதிக்கம் வகித்தல், சாதிப் பாகுபாடு கொள்ளல், இவற்றை விரும்பாத சித்தார்த்தர் தன் சமயத்தில் மனிதனுக்கு சிறப்பிடம் கொடுத்தார். மனிதன் தன் முயற்சியால் இறுதி நிலையை அடைய முடியும் என்பதனை போதித்தார். "நீ உருவாக்காமல் சொர்க்கமும் இல்லை; நீ உருவாக்காமல் நரகமும் இல்லை" என்றார். இவர் பிராமண இந்து சமயத்தை எதிர்த்த போதிலும் அறிவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் புத்தரை மிக சிறந்த இந்துவாகவே கருதுகின்றார்". 2

புத்தர் கபிலவஸ்துவில் சுத்தோதனரின் மகனாய் கி.மு 6ஆம் நூற்றாண்டில் சத்திரிய குடும்பத்தில் பிறந்தார். இவர் அவதரித்த ஆண்டு துல்லியமாக இன்னும் தீர்மானிக்கப் பெறவில்லை. பெரும்பாலான ஆசிரியர்கள் கி.மு. 563 என்பர். கி.மு. 573 தான் சரியான ஆண்டு என்பதற்கு புத்தர் வாழ்க்கையின் முக்கிய

2. Dr Radha Krishnan – Buddhism, pp. 83-85.

நிகழ்சிக்களை ஆதாரமாக ப. இராமசாமி என்பார் காட்டுகின்றார். 'புத்தர்தமது இருபத்தொன்பதாவது வயதில் அரண்மனையை விட்டு வெளியேறி துறவு பூண்டார்.

ஆறு ஆண்டுகள் அருந்தவம் புரிந்த பின் முப்பத்தைந்து வயதில் பூரணஞானம் அடைந்தார். அதன் பின் நாற்பத்தைந்து ஆண்டுகள் வட இந்தியாவில் பல தலங்களுக்கு நடந்து சென்று, அவர் தருமபிரசாரம் செய்து வந்து, இறுதியில் 'குசி' நகரில் மகா-பரி- நிருவாணம் அடைந்தார், அவருடைய பிறப்பு, துறவு, மெய்ஞானம், மகா-பரி-நிருவாணம், ஆகிய நான்கில் ஒவ்வொன்றும் வைகாசி மாதம் பூர்ணிமையன்றே ஏற்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. இந்த நான்கு நிகழ்ச்சிகளுக்கும் பொருத்தமான ஆண்டு கி. மு. 573 தான்[3]." ஆனால் இலங்கை ஏடுகள் கி. மு. 624 என்று குறிகின்றன.

புத்தர் அரசனாய் இருந்தும் தனது இருபத்தொன்பதாவது வயதில் பிணி, மூப்பு, சாக்காடு இவை மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை, துன்பம் தருபவை என அறிந்து அதனைத் தவிர்க்க, வழிகண்டு பிடிக்க முற்பட்டார். வேதச்சடங்குகளும், உபநிடதத் தத்துவங்களும் சாதாரண மக்களுக்குப் பொருளற்றதாக இருந்தால் இவற்றிற்கு இடைப்பட்ட மத்தியமார்க்கத்தைப் போதித்தார். ஆகையினால் இவரது போதனைகளை 'மத்திய மார்க்கம்' அல்லது 'மத்தியவழி' என்பர் புத்தர் காட்சி அளவு (Perception) கருது அளவு (Inference) ஆகிய இரண்டினைமட்டும் அறிவு பெறஅளவைகளாக ஏற்றுக் கொண்டார். இதன் அடிப்படையில் வாழ்வினையும், மனிதனையும் ஆய்ந்து தனது அடிப்படைக் கொள்கையினை நிறுவினார்.

அடிப்படைக் கொள்கைகள்:

அனாத்துமக் கொள்கை (நைராத்மியா)

புத்தர் மனிதனை ஆய்ந்து அவனிடத்தில் நிலையான ஒன்று இல்லை, அவன் ஐந்து ஸ்கந்தங்களின் அல்லது திரன்களினலான ஒரு கூட்டுப் பொருள் என்பர். இவை ஐந்தும் தனித்தன்மை உடையவை. இவற்றை நாமம், ரூபம் என்றஇரண்டு தலைப்பு

3. புத்தர் போதனைகள், பக். 1

களுள் அடக்கலாம். ரூபம் அல்லது உருவம் (Matter) என்பது பருமையான வடிவநிலை. இதனுள் நான்கு சடக் கூறுகள் அல்லது பொருட் கூறுகள் அடங்கும். அவை நிலம், நீர், காற்று, நெருப்பு என்பன. நாமம் உள்ளச் சார்புடைய கூறு, நால்வகையுள் அடங்கும்.

அவையாவன:

புலன்உணர்வு அல்லது உணர்ச்சி (வேதனை), காட்சி அல்லது எண்ணம் (சமிக்ஞை), செயல் நிலை அல்லது செயல்புரிவதற்குரிய உளப்பாங்கு (சம்ஸ்காரம்), பகுத்தறிவு அல்லது விஞ்ஞானம். இவ்விஞ்ஞானத்தைக் காரணத் தொடர்ச்சியில் காணப்பெறும் விஞ்ஞானத்தினின்று பிரித்து அறிய வேண்டும். காரணத் தொடர்ச்சி விஞ்ஞானத்தின் மூலக் கூறுகளாக அமைவன. வெவ்வேறு பகுதிகளில் பல உட்பிரிவுகளோடு தோன்றும் ஏறக்குறைய 200 மூலக்கூறுகளாக இவை விரிகின்றன. இவையனைத்தும் நிலையுதல் அற்றவை. உபநிடதத்தில் கூறும் நாம ரூபம் என்னும் உலக இருப்பு, பௌத்த மதத்தில் அனுபவத்தின் தொகுதியை ஐவனத் திரள்களை அல்லது மூலக் கூறுகளின் தொகுதியை உணர்த்தும்."[4] எவ்வகையாகத் தேர் என்பது சக்காம், இருசா, குடம் இவைகளின் கூட்டுப் பொருளோ, அவ்வகையில் மனிதனும் ஒரு கூட்டுப் பொருள். ஆசையின் பயனாகவே இந்த ஐந்து ஸ்தந்தங்களும் கூடுகின்றன. ஆகவே மனிதனுள் நிலையானது ஒன்றும் இல்லை. இதன் அடிப்படையில் புத்தர் ஆன்மா என்று ஒன்று தனிப்பட்டது இல்லை என்கின்றார். அனைத்தும் காரணகாரியராகிய நியதியின்(Cause and effect) படியே நடக்கிறது என்றார், அனைத்தும் பிற சார்பால் தோன்றுவன என்றும் (Dependent Origination) கூறினார்.

ஆன்மா உண்டு என்பதின் அடிப்படையில் 'நான்' என்னும் அகங்காரமே தலையெடுக்கும். ஆன்மா என்பதற்குப் பொருள் இயற்கைத் தன்மை (சுபாவம்) என்பதாகும். பௌத்தர்கள் ஆன்மா சுபாவம் கொண்டதன்று. தன்னைத் தனித்துக் காட்டக் கூடிய இயற்கைத் தன்மை ஏதும் அற்றதாகிய அது உட்பொருள் அன்று என்பர். இவ்விளக்கம் 'புட்கல நைராத்மியம்' எனப்படும். 'யாவும் சித்தமேயன்றி வேறில்லை' என்பது புத்தரின்

---

[4] கீழை மேலை நாடுகளின் மெய்ப் பொருள் இயல் வரலாறு தொகுதி I சர்வபுள்ளி இராதா கிருஷ்ணன், பக் 262

வாக்கு. ஆன்மா என்பதின் அடிப்படையில் தான் துக்கம் எழுகிறது என்பர் பௌத்தர்கள். இசி பட்டணத் துறவியர் ஐவருக்கு புத்தர் வழங்கிய அருளுரையில் இவ்வாறு கூறுகின்றார், "உடல் நித்தியமான ஆன்மா அன்று. காரணம், அது அழிதற்பாலது. அங்ஙனமே, உணர்ச்சி, புலனறிவு, ஞானம் ஆகியவைகளின் கூட்டுப்பொருளும் அன்று ஆன்மா. ஏனெனில் விஞ்ஞானம் அழிவையே நோக்கிச் செல்கின்றது. நம்முடைய உருவம், உணர்ச்சி, புலனறிவு, ஞானம் யாவுமே நிலையானவை அல்ல. ஆகவே, அவை தீயவையும் ஆகும். தீயதும், நிலையற்றதும், அழிதற்பாலதுமான பொருள் ஒன்று ஆன்மாவாக இருக்க முடியாது. ஆகவே. உலகில் உள்ள எதையும் நாம் 'இது அன்று நான்; இது என்னுடையதன்று; இது வன்று என் ஆன்மா'' எனக் கூறுதல் வேண்டும் (மகா வக்கா)''[5]

''பிக்குகளே உடல் ஆன்மா வற்றது. பிக்குகளே உடல் ஆன்மாவாயிருந்தால் இந்த உடல் நோய்க்கு உட்படாது; உடல் சம்பந்தமாக என் உடல் இப்படி இருக்கட்டும், என் உடல் அப்படி இருக்கட்டும் என்று சொல்லக் கூடியதாயிருக்கும். பிக்குகளே, உடல் ஆன்மா அற்றதாக இருப்பதாலேயே உடல் நோய்க்கு உள்ளாகிறது. என் உடல் இப்படி இருக்கட்டும், என் உடல் அப்படி இருக்கட்டும் என்று சொல்ல முடியவில்லை'' [6]

''பேதமையாலும் மயக்கத்தாலுமே மனிதர்கள் தங்கள் ஆன்மாக்கள் தனித்தனியானவை என்றும், (எவ்வித சார்புகளும் இல்லாது, சுயமாக) நித்தியமாய் உள்ளவை என்றும் கனவு காண்கிறார்கள்'' [7]

புத்தர் கரும நியதியை ஏற்றுக் கொள்ளுகிறார். கர்மா கூட்டுப் பொருளின் தன்மையை நிர்ணயிக்கின்றது. 'ஓ பிக்குகளே! இச்சா சக்தியை உபயோகித்தலையே நான் கருமம் என்று அழைக்கின்றேன்' [8] ''இரும்பிலிருந்து துரு தோன்றினாலும் அதை அரித்து

---

5. நம் நாட்டுச் சமயங்கள், ஆல்பர்ட் மனுவேல் பக். 150
6. புத்தர் போதனைகள், வி. இராமசாமி பக். 114
7. Ibid பக். 117
8. Ibid, பக். 122

விடுவது போல; (அறநெறி) பிறழ்ந்தவனை அவனுடைய கருமங்களே தீய கதியில் கொண்டு சேர்க்கின்றன. இயற்கையிலுள்ள மற்றப் பொருட்களைப்போலவே மனிதனின் வாழ்க்கையும் காரண காரிய விதிக்கும் உட்பட்டதாகும். இறந்த காலத்தில் விதைத்ததை இப்போது அறுவடை செய்ய வேண்டும். எதிர் காலத்தில் விளைவது இப்போது விதைப்பதேயாகும்."[9] கரும விதியை மாற்ற இயலாது! இதன் அடிப்படையில் புத்தர் பிறப்பு இருக்கின்றது. பிறப்பவன் இல்லை என்று கூறுகின்றார்.

2. **அநித்திய கொள்கை :-** இவ்வுலகத்தில் உள்ள அனைத்தும் நிலையானது அல்ல. எல்லாம் மாறும் தன்மையுடையன. இவ்வுலக வாழ்வினை புத்தர் ஓடும் ஆற்றிற்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார்.

3. **துக்க கொள்கை :-** புத்தர், மனிதனின் வாழ்க்கை முழுவதுமே துக்கம் நிறைந்தது என்பார். அவன் மூன்று வகையான துக்கங்களினால் ஆட்கொள்ளப்படுகின்றான்.

அ. **துக்க துக்கம்** — உடலினால் ஏற்படும் துன்பம்

ஆ. **விபரிணாம்துக்கம்** — விரும்பியவை கிடைக்காததினால் துக்கம்
—வெறுப்பவை இருப்பதினால் துக்கம்
—இருப்பவை பிரிவதனால் துக்கம்

இ. வாழ்க்கை நிலையானது அல்ல என்பதை அறிந்து கொள்வதினால் ஏற்படும் துக்கம்.

புத்தர் வாழ்க்கையை ஆராய்ந்து நான்கு வகையான அடிப்படை மெய்மைகளைக் கூறுகின்றார். அவையாவன :-

அ. வாழ்க்கை முழுவதும் துக்கமே
ஆ. துக்கம் எழுவது — இயல்பானதல்ல
இ. துக்கத்தை நீக்கலாம்
ஈ. துக்க நிவாரண வழி — அட்டாங்க மார்க்கம் அல்லது மத்திய வழி

II அட்டாங்க மார்க்கம்

துன்பத்தினின்று விடுபட புத்தர் **அட்டாங்க மார்க்கத்தை** அல்லது எட்டுப்படி வழியினைப் போதித்தார். அவையாவன :-

[9]. Ibid பக். 123, 124.

1) **நல்வாய்மை** - நாம் பேசும் சொற்களினுல் பகைமை, பிரிவினை, வெறுப்பு ஏற்படக் கூடாது. பொய், புறங்கூறல், அவதூறு, கோள் இவற்றினைத் தவிர்க்க வேண்டும். வல்மை, சினம், மரியாதையின்மை, கெடுமதி இவை நம் சொற்களில இருக்கக்கூடாது. நம் பேச்சு உண்மையுள்ளதாக, தாழ்மை யுடையதாக, அருளுடையதாக, பொருள் உடையதாக, பயனு டையதாக இருக்க வேண்டும.

2) **நற்செய்கை** - கொலை, களவு, அநீதி, பால் சம்பந்தப் பட்ட தவறுகளைத் தவிர்க்க வேண்டும். நம் செய்கைகள் நீதி யுள்ளதாக, உயர்ந்ததாக, சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

3) **நல் வாழ்க்கை முறை** — நமது வாழ்க்கை முறை நமக்கோ பிறருக்கோ தீங்கு விளைவிக்கும் முறையில் இருக்கக் கூடாது. மதுபானக்கடை, மாமிசக்கடை, விபசாரவிடுதி, படைக் கலங்களை உருவாக்குதல், சூதாட்டம், இவற்றின் வாயிலாக நமக்கு ஊதியம் வருதல் கூடாது.

4) **நல்லெண்ணம்** - புலனுசை, காமம், பொருளாசை, தீமை பயக்கும் பிற எண்ணங்கள் இவற்றினை விலக்க வேண்டும். சுய வெறுப்பு, பற்றின்மை, தீங்கு விளையாமை, அகிம்சை, இவற் றின் வழியில் சிந்தனையை வகைப்படுத்த வேண்டும்.

5) **நல்விளக்கம்** - வாழ்வின் உண்மை நிலையை அறிந்து கொள்ளுதல். — மனிதன் கூட்டுப் பொருள், வாழ்க்கை துன்பம் நிறைந்தது.

6) **நன்முயற்சி** - நான்கு வகையில் செயல்பட வேண்டும்.

அ. தடுத்தல் - தீய செயல்கள், வாழ்க்கை முறைமை, எண்ணம் இவற்றைத் தடுக்க வேண்டும்.

ஆ. விலக்கல் - இவை ஏற்கனவே நம்மிடை இருப்பின் அவற்றை விலக்க வேண்டும்.

இ. வளர்த்தல் - நன்மை பயக்கக் கூடிய செய்கைகள், வாழ்க்கை முறைமை, எண்ணம், இவற்றினை வளர்க்க வேண்டும்.

ஈ. காத்தல் - அவை ஏற்கனவே நம்மிடை இருப்பின் அவற்றைக் காக்க வேண்டும்.

7) **நல் மனநிலை** - மனம் இச்சைக்கு அடிப்படை, ஆகையினால் மனதை தீயவற்றில் செலுத்தாது நன்மையானவற்றில் செலுத்த வேண்டும்.

8) **நற்தியானம்** - நான்கு படிகள் உள்ளது எனலாம்.

அ. தியானத்தின் மூலம் தீய எண்ணங்களை விலக்குதல்

ஆ. ஒரே காரியத்தை மனதில் வைத்து எண்ண அலைகளை அடக்குதல்

இ. மகிழ்ச்சி, மயக்குகின்ற உணர்வுகளைத் தள்ளுதல்

ஈ. மனதை ஒன்று படுத்தி இச்சைகளற்ற நிலைக்கு கொண்டு வருதல்

நிருவான நிலை என்பது இருப்பு இல்லா நிலையை அடைதல். இது ஒன்றுமில்லாமை (Nihilism) அல்ல. இந்நிலையைப் பற்றி ஒன்றும் கூறிவிட முடியாது என்பதே குறிப்பு.

தூய்மையான வழி - அட்டாங்க மார்க்கத்தைக் கடைபிடிப்பவன் நான்கு தூய்மையான வழிகளைக் கடைப்பிடிப்பதின் மூலம் படிப்படியாகத் துன்பத்திற்கு அடிப்படைக் காரணமான பத்து வகையான கட்டுகளில் இன்று விடுபடுகிறான்.

முதல் படியில் தனக்கு நிலையான ஆன்மா உண்டு என்ற நம்பிக்கையில் இருந்தும், புத்தரைக் குறித்த சந்தேகங்களில் இருந்தும், சடங்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் துன்பங்களில் இருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தும் விடுபடுகின்றான். இப் படியைக் கடந்தவன் மனிதனுக அல்லது கடவுளாக மட்டுமே பிறப்பான். கீழ்வகையான மற்ற பிறப்புகளில் இருந்து விடுதலை பெறுகின்றான். இவனுக்கு "ஓடையை வென்றவன்" என்று பெயர்.

இரண்டாவது படியில் அவன் அடுத்த இரண்டு கட்டுக்களில் இருந்து விடுதலைபெற வாய்ப்பு உண்டு. அவன் மறுபடியும் மனிதனுகப் பிறக்க வாய்ப்பு உண்டாகையால், "மறுபடியும் திரும்புபவன்" என்று பெயர் பெறுகின்றான்.

மூன்ருவது படியில் அவன் கீழ்கண்ட இரண்டுபடியிலிருந்து விடுதலை பெற்று "மறுபடியும் திரும்பாதவன்" என்று பெயர் பெறுவான். அக்கட்டுக்களாவன: சரீர இன்பங்கள். - காமம், பொதுவான இன்பத்துய்ப்பு சமூகக்கூட்டு இன்பங்கள். கோபம்.

இப்படியில் உள்ளவர்கள் மறுபடியும் பூமியில் பிறக்க மாட்டார்கள் என்ற உறுதி உண்டு. நான்காவதுபடியில் ஒருவன் முற்றிலும் பூரண விடுதலையைப் பெறுகின்றான். ஒரு மோட்சத்தில் தங்கியிருக்கும் விருப்பம், மேல் மோட்சத்தில் உருவமற்ற வகையில் தங்கியிருக்கவிருப்பம், பெருமை, அமைதியின்மை, அறியாமை இவ்வகையான, பத்துவகைக் கட்டுக்களில் இருந்து விடுபடுபவன், மறுபடியும் பிறப்பதிலிருந்து விடுபட்டு தூயவன் என்றுபெயர் பெறுகின்றான்.

III மொத்த சங்கங்கள்:

முதல் சங்கம்—புத்தர் பரிநிர்வாணம் அடைந்தபின் ராஜகிரிகா என்ற இடத்தில் கூட்டப்பெற்றது. வினயபிடகம், சுத்தபிடகம் ஆகிய திருமறைகள் வாசித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் சங்கம்—வைசாலி என்ற இடத்தில் கூட்டப்பட்டது. சங்கத்தின் அடிப்படைக் கொள்கை குறித்த வாக்குவாதத்தினால் தேரவாதிகள் மகாசங்கிகள் என்றுஇரண்டாகப் பிரிந்தது.

மூன்றாம்சங்கம்—அசோக மன்னனால் பாடலிபுத்திரத்தில் கூட்டப்பட்டது. பிரிவினைகளை ஒன்றுபடுத்த முயற்சிசெய்யப்பட்டது. ஆயினும் கைகூடவில்லை. இச்சங்கத்தில் மூன்றாவது வேதமாகிய அபிதம்மபிடகம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

IV திரிரத்தினங்கள்:

புத்தம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

இதன் பொருள் புத்தருக்குள் அடைக்கலம் புகுகின்றேன் தர்மத்திற்குள் அடைக்கலம் புகுகின்றேன்; சங்கத்திற்குள் அடைக்கலம் புகுகின்றேன் என்பதே. இவையே புத்தசமயத்தின் மூன்று ரத்தினங்களாகக் கருதப்பட்டது.

புத்த சமயம் மனிதன் தனது மீட்பைத் தானே தேடிக் கொள்ள வேண்டும் என்கூறுகின்றது. மீட்பர் ஒருவர்தேவையும் இல்லை. "நீ உருவாக்காமல் சொர்க்கமும் இல்லை நீ உருவாக்காமல் நரகமும் இல்லை" என்கின்றார் புத்தர்.

"உனக்கு நீயே சரணடைந்துவிடு
உனக்கு வெளியே எதையும் சாராதே
உனக்கு நீயே ஒளி
உண்மைக் கொடியை உயர்த்திப்பிடி"

புத்தரின் மையக்கருத்து தருமத்தை நிலைநாட்டுவதே.

"தருமத்தின் கொடி பறக்கட்டும்
தருமத்தின் குரல் ஒலிக்கட்டும்
தருமமுரசம் ஓங்கி அதிரட்டும்
தருமத்தில் நிலைத்திரு, தருமத்தில் நிலைத்திரு"

V. புத்தசமயக் குழுக்கள்

முன்பு கண்டபடி இரண்டாம் சங்ககாலத்தில் புத்த சமயம் இரண்டு குழுவாகப் பிரிந்தது.

1. **தேரவாத (ஹீனயானிகள்)** - இவர்கள் புத்தர் ஒரு மனிதர் என்பார். எல்லா மனிதரும் தன் சொந்த முயற்சியினுல் நிரு வானம் அடைவதற்கு முயற்சி செய்யலாம். ஆயினும் துறவிகள் மட்டுமே நிருவானம் அடைய முடியும் என்பர். எல்லா மனிதரும் நிருவானம் அடைய வேண்டும் என்ற கொள்கையினையுடையவர் திருமறைகள் பாலி மொழியில் மட்டுமே அமைந்திருத்தல் வேண்டும் எனவற்புறுத்தினர். இப்பிரிவு சிறப்பாக இலங்கை, பர்மா, தாய்லாந்து போன்ற இடங்களுக்குப் பரவியது.

2. **மகாயானம் (மகாசங்கிகள்)** புத்தர் தெய்வீக குணங்களு டையவர் என்றும், நிருவானம் பெற புத்தரின் அருள் அவசியம் என்றும், இல்வாழ்வில் இருக்கும் பொழுதே மனிதன் நிருவானம் அடையலாம் என்றும் போதித்தனர். புத்தரை ஒரு மீட்பராகக் கருதினர். போதிசத்துவராக உயரிய நிலையையடைந்தவர், பிறர் அவ் வுயரிய நிலையையடைய உதவி செய்தல் வேண்டும். போதி சத்துவர்கள் தங்கள் பலனை மக்களுக்கு அருளி மீட்க இயலும் என்று கருதினர். போதிசத்துவர்கள் உண்மையாக வாழ்ந்தவர் அல்ல. இவர்கள் புத்தரின் பல அவதாரங்கள் என்ற கருத்தும் உண்டு. அற்புதங்கள் செய்தல், மோட்சம், நரகம் உண்டு என்ற கோட்பாடுகளை வலியுறுத்தினர். சமஸ்கிருதமொழி, தீபத்திய மொழி, ஜப்பானிய மொழி, சீனமொழி ஆகிய எம்மொழியிலும் திருமறைகள் இருக்கலாம் என்று கருதினர். இப்பிரிவு சிறப்பாக இந்தியா, சீக்கிம், நேப்பால் போன்ற நாடுகளில் பரவியது.

3. ஜென்புத்தம் - இப்பிரிவு சீனவில் தொடங்கி ஜப்பானில் பரவி யது. பாரம்பரியங்களின் கருத்துப்படி ஒரு சமயம் புத்தரின் சீடர்கள் அவரிடத்தில் ஒரு பொன் மலரைப் பரிசாகக் கொடுத்து தங்களுக்கு மறை பொருளைக் கற்றுக் கொடுக்கும் படி விரும்பி னாராம். ஆனால் புத்தரோ, அம்மலரைத் தூக்கிப் பிடித்து சிறிது நேரம் உற்றுப் பார்த்தாராம். இதன் மூலம் வார்த்தையினால் அல்ல தியானத்தின் மூலம் மட்டுமே மறைபொருளை அறிய முடி யும் என்று குறிப்பால் உணர்த்தினர் என்று நம்பப் படுகிறது. ஜென்-என்றால் ஆழ்ந்த தியானம் (Contemplation) என்று பொ ருள். இறை இணை உணர்வுநிலை இப்பிரிவினரால் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இக்கொள்கைகள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சீனவில் முது மை பெற்றது. போதி தர்மா என்ற இந்திய இறை இணையாளர் (Mystic) இப்பிரிவின் சிறப்பானவராகக் கருதப் படுகின்றார். இறை உணர்வு திருமறையின் மூலமாகவோ, தத்துவ ஆய்வின் மூலமாகவோ வருவதில்லை. திடீரென்று மின்னலைப் போன்று இந்த ஒளிகிட்டும் என்று கருதப்பட்டது. ஜென் பிக்குகள் எளிய நிலையில் வசிக்கவும் தன் உணவைப் பிச்சையெடுத்து உண்ண வும், வயல்களில் வேலை செய்யவும் கோரப்படுகின்றனர். வார்த்தை அல்ல செயல் முக்கியமாகக் கருதப்பட்டது. புத்தர் தேவாதி தேவன் என்று கூறி அவர் மட்டுமே எல்லாத் தொழு கைக்கும் காரணர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தொழுகை செய்யப்படுகின்றது.

VI பௌத்த நூல்கள்:-

பௌத்தர்கள் நிலைபேறு உடைய ஆகம அளவை ஏற்காது காட்சி அளவையும், கருதல் அளவையும், (பிரத்தியட்சம், அனு மானம்) மட்டுமே ஏற்பர். ஆயினும் புத்தரைப் பின்பற்றிய சீடர் கள் புத்தரின் போதனைகளைத் தொகுத்து அவற்றிற்கு விளக்கம் கொடுத்தனர். இத்தொகுப்பினை "முதியவரின் திருச்சட்டத் தொகுப்பு" என்று அழைப்பர். இதுவே தேரவாதத்தினரின் திரு மறை. மஹாயானத்தினர் புராணக்கதைகளையும், பிறக் கோட்பாடு களையும் சேர்த்து தமது திருமறையை உருவாக்கினர்.

புத்தரின் வாக்குகள் அடங்கிய பாலிமொழியில் எழுதப் பட்ட முக்கூடையை (திரிபிடங்கள்) தேரவாதத்தினர் திருமறை யாகக் கருதினர். இது மூன்று தனிப்பட்ட பகுதிகளையுடையது.

1 **வினயபிடகம்** — பௌத்த வாழ்வியல் ஒழுக்க நெறிகளைக் கூறுவது. பிக்குகள், பிக்குனிகள், வாழ வேண்டிய முறைகளை ஐந்து புத்தகங்களாக எடுத்தியம்புகிறது. காலப் போக்கில் விரிவாக்கப்பட்டு தற்போது இருநூற்றி இருபத்தேழு விதிகளைக் கொண்டுள்ளது

2 **சுத்தப்பிடகம்:**— புத்தரின் அறவுரைகளையும், அருளுரைகளையும் தொகுத்துக் கூறுகின்றது. கி. பி. மூன்றும்நூற்றுண்டில் ஐந்து நியாயங்களாகப் பகுக்கப்பட்டது. அவையாவன:

அ. தீக்க நிகாயம் (நீண்ட சூத்திரங்கள்)

ஆ. மத்திம நிகாயம்

இ. சம்யுத்த நிகாயம் (சூத்திரத் தொகை)

ஈ. அங்கு தர நிகாயம் — எண்ணிக்கை முறையாக அமைக்கப்பட்ட சூத்திரங்கள்

உ. குத்தாக நிகாயம் — எஞ்சியவைகளின் தொகுப்பு

தீக்க நிகாயத்தில் புத்தரின் மகாபரி நிருவான நிகழ்ச்சியும், கடைசி அவருடைய மூன்றுமாத நடபடிகளும் கூறப்பெற்றுள்ளன. சம்யுத்த நிகாயத்தில் புத்தரின் முதல் அருளுரை காணக்கிடக்கின்றது. குத்தாக நிகாயத்தில் தம்மபாதம் (அறநெறி) என்னும் சிறந்த பகுதி உள்ளது. பௌத்த அறவொழுக்கம் பற்றிக் கூறும் சிறந்த பகுதி இதுவே. இதில் 423 அடிகள் உள்ளன. பௌத்தர்கள் இதனை மிகவும் நன்கு மதித்துப் போற்றுகிறார்கள். இக் குத்தாக நிகாயத்தில் புத்தரின் பழம் பிறவிகளைக் கூறும் ஜாதகங்கள் பலவும் உள்ளன. திரிபிடகம் பாலிமொழியில் வரையப்பட்டுள்ளது.

3. **அபிதம்ம பிடகம்:-** புத்த தருமங்களை உரையுடன் தருகின்றது. ஆய்வாளர்களின் கோட்பாடுகளும் அறவியலும் அடங்கியது.

மஹாயானத் திருமறைகள்:- மிக முற்காலத்திய மஹாயானத் திருமறைகள் வட இந்தியாவைச் சார்ந்தது. சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட காலம் கி. பி. 100 முதல் - 800 க்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் தனக்கென்று திருமறைகளைத் தங்கள் தாய் மொழியிலேயே வகுத்திருக்கின்றன. எனினும் இவற்றைப் பொதுவாக மூன்றாகப் பகுக்கலாம்.

அ) வினய பிடகம் — சமய சார்பாளர்களின் கடமைகள்

ஆ) சூத்திரங்கள் — சுத்தப் பிடகங்களுக்கு இணையாக எழுதப்பட்டது.

இ) சாத்திரங்கள் — தத்துவ உரைகள்

பிற்காலத்தில் திருமறைகள் பலவகையாக எழுதப்பட்டு பாமர மக்களிடையே பரவலாக வாசிக்கப்பட்டது. போதி சத்துவர் திரும்பி வருவது பற்றியும், போதி சத்துவர் எல்லாம் வல்ல இறைவன் என்பதும் இவற்றின் சிறப்புக் கருத்துக்கள்.

திரி பிடகங்களுக்கு அடுத்தாற் போல் சிறந்து விளங்குவது 'மிலாந்தரின் கேள்விகள்' என்னும் நூல் ஆகும். இது புத்த கோஷரின் 'விசுத்திமார்க்கம்' என்னும் நூலின் ஒரு பகுதி ஆகும்

மஹாயான பௌத்தத்தின் ஆதார நூல்கள் பல சமஸ்கிருத திபெத்திய, சீன, ஜப்பானிய மொழிகளில் வந்துள்ளன.

VII புத்த சமயம் வலிமை குன்றக் காரணங்கள்:-

இந்தியாவில் முகமதியர்களின் படையெடுப்பினாலும் அவர்களின் ஆட்சியினாலும் புத்த சமயம் தன் வலிமையை இழந்தது. புத்த சமயம் இல்லறத்தோருக்கு சிறந்த இடம் அளிக்காது துறவறத்தை மட்டுமே கருத்தில் கொண்டு செயல் பட்டது, புத்த சமயம் வலிமை இழக்க மற்றொரு காரணமாகும். இவையனைத்திற்கும் மேலாக இந்து சமயம் தன்னுடைய பரந்த பிடியில் புத்த சமயத்தை உள்ளடக்கிக் கொண்டது என்றால் மிகையாகாது.

BIBLIOGRAPHY.

1. Besant, Annie — Seven Great Religions p. 105 - 150.

2. Brow, A. David — A Guide toReligions (TEF) p 122 - 154.

3. Ernest, Robert Hume — The world's Living Religions A Historical Church. pp. 59 - 82.

4. Jaising, Herbert — My Neighbours pp 37 - 45.

5. Macnicol, Nicol — The living Religions of the Indian People. pp. 207 - 259.

6. Manuel D, Albert (Ed)— Religions of the Indian People (Tamil) pp 123 - 159.

7. Washburn Edward Hopkins — The Religions of India pp. 298 - 347.

சமண சமயம்

இந்திய நாட்டு மிகப் பழைய சமயங்களுள் சமண சமயமும் ஒன்ருகும். சமண சமயக் கொள்கைகளை விருஷபதேவர் முதன் முதலில் உலகிலே பரப்பினுர் என்றும், அவருக்குப் பின் வந்த இருபத்து மூன்று சமயக்குரவர்களும் இதனை வலுப்படுத்தினர் எனவும், சமய ஆசியர்கள் கூறுவர். ஆனல், வரலாற்று ஆசிரியர்கள் இதனை ஒப்புக் கொள்வதில்லை. வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி இருபத்து மூன்ருவது தீர்த்தங்கரராகிய பார்சவநாதர் சமணசமயத்தை போதித்தார் என்றும், அவருக்குப் பின்வந்த வர்த்தமான மகாவீரர் இம்மதத்தைச் சீர்திருத்திஞர் என்றும் கூறுவர். முதல் இருபத்திரெண்டு தீர்த்தங்கரர்கள் இயற்கைக்கு மாறுபட்டு அதிக உயரமும் அதற்கேற்ற பருமனும் உடையவராய் இருந்தனர் என்பதும், அவர்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய் உயிர்வாழ்ந்திருந்தனர் எனவும் கூறுவது இவர்களைக் கற்பனைப் பெரியார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கணிப்பதற்கு அடிப்படையாக அமைகின்றது.

சமண சமயத்திற்கு ஜைன மதம், ஆருகத மதம், நிகண்ட மதம், அநேகாந்தவாத மதம், ஸியாத்வாத மதம் என்னும் பல பெயர்கள் உண்டு. இச்சமயம் தோன்றிய காலத்தினைத் திட்டமாகக் கூற இயலவில்லை. டாக்டர். இராதா கிருஷ்ணன் அவர்கள் தனது 'இந்திய தத்துவங்கள்' என்னும் நூலில் 'பாகவதப் புராணம் பகவான் விருஷபதேவர், ஜைன தர்மஸ்தாபகர் என்பதை ஆமோதிக்கிறது யஜுர் வேதம் பகவான் விருஷபநாதர், அஜிதாநாதர், அரிஷ்டநேமி ஆகிய தீர்த்தங்கரர்களின் பெயரைக் கூறுகிறது. வேதங்கள் எழுதப்படுவதற்கு முன்னரே ஜைன தர்மம் இதென்பதில் ஐயமில்லை' என்கிருர். 'டி. எஸ். ஸ்ரீ பால் அவர்களும் சாஸ்திரங்களிலிருந்தும், வியாக்கியானங்களிலிருந்தும் ஜைன தர்மம் அனுதி காலத்தது என்று தெரிய வருகிறது; இவ் விஷயம் விவாதமற்றதாய், மத பேதமில்லாததாய், இருக்கின்ற வரலாற்று பிரமாணங்களும் கிடைக்கின்றன எனக் கூறியுள்ளார்.

ஆகையினால் இச்சமயம் மிகப் பழங் காலத்ததவை எனக் கூற லாம்.

துறவறத்திற்குச் சிறப்புக் கொடுத்தமையினால் சமண சமயம் (ஸ்ரமணர்) எனப் பெயர் பெற்றது என்பர். தீர்த்தங்கரர்கள் புலன் களையும் கர்மங்களையும் வென்றவர் ஆதலின் ஜீனர் என்னும் பெயரும் உண்டு. சமண சமயக் கடவுளுக்கு அருகன் என்னும் பெயரும் உண்டு. ஆகையினால் ஆருகத மதம் எனவும் அழைக்கப் பட்டது. சமணக் கடவுள் பற்றற்றவர்கள் ஆதலின் நிகண்ட மதம் எனவும் அசோக (பிண்டி) மரத்தைச் சமணர்கள் போற்று வதினால் பிண்டியர் எனவும் பெயர் பெற்றனர்.

சமயச் சூழல்

பிராமணர்கள் வருணாச்சிரம தர்மத்தின் அடிப்படையில் மற்றவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள். மற்றவர்களை ஆட்சி செய்த காலம் ஒன்று உண்டு. இக்காலத்தில் மக்கள் வேதங் களின் அடிப்படையில் வாழும் படியாக அழைக்கப்பட்டனர். சமஸ்கிருத மொழி சிறப்புப் பெற்றிருந்தது. வேதகால பலிகளும் சடங்குகளும் மக்களின் வாழ்வில் முக்கிய இடம் பெற்றது. பிரா மணர்கள் அல்லாதவர்களும் சமஸ்கிருத மொழியை அறியாதவர் களும் தங்கள் வாழ்வு சிறப்புப் பெற பலிகளையும், சடங்குகளை யும், கடைப்பிடிக்க வேண்டியிருந்ததால், பிராமணர்களை எதிர் நோக்கியிருந்தமையால் சமயத்தின் பெயரால் ஒடுக்கப்பட்டனர். பிராமணர்கள் சமுதாயத்தின் உயர் மட்டத்தில் இருந்தமையால் பொருளாதாரத்தின் அடிப்படையில் பிராமணர்கள் அல்லாதவர் கள் ஒடுக்கப்பட்டனர். இக்காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடிவெள்ளியாகத் தோன்றிய சமயமே புத்த சமண சமயங் கள் ஆகும்.

கடவுள் இவர்களின் அதிகாரத்தைத் தகர்த்து மனிதனை மையமாகக் கொண்டு எழும்பிய சமயங்கள் இவைகள். இச் சமயங்கள் மனிதன் தன் முயற்சியினால் உயரிய நிலையை அடை யலாம் என்று இயம்பின.

தீர்த்தங்கரர்கள்

தீர்த்தங்கரர்கள் எனில் (தீர்த்தம்+கரர்) புனிதம் செய்ப வர்கள் என்று பெயர். மற்றவர்களைப் புனிதம் செய்யும் பணி

யில் ஈடுபட்டதினுல் இப்பெயர் பெற்றனர். இவர்கள் தெய்வ நீர்மையும் மெய்யுணர்வும் வாய்ந்தவர்கள். 'அவர்கள் உலகப்பற்று அறவே நீத்தொழித்தவர்கள். ஐம்புலன்களை அடக்கி வென்றவர்கள். மெய் ஞானம் எய்தியவர்கள். ஆன்ம ஆற்றலால் எதையும் ஊடுருவிக் காணும் திறன் பெற்றவர்கள். ஆன்ம அறிவொளி வீசும் தன்மையர், அவர்கள் அஞ்ஞான இருளைப் போக்கும் ஒளி விளக்குகள் ஆவர். பிற உயிரினங்கள் படும் துன்பங்களைக் கண்டு மிகவும் இரங்கி அத்துன்பங்களைப் போக்கும் இயல்பினர்.

சமண சமயத்தில் சிறப்புப் பெறும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள்:-

1. விருஷப தேவர் 2 அஜித நாதர் 3 சாம்பவ நாதர் 4 அபிநந்தனர் 5 சமதி நாதர் 6 பதும நாபர் 7 சபார்சவ நாதர் 8. சந்திரபிரமர் 9. புஷ்ப தந்தர் (சவிதி நாதர்) 10. சீதளநாதர் 11. சீறியாம் நாதர் 12. வாசு பூஜ்யர் 13. விமலநாதர் 14. அனந்த நாதர் (அனந்த ஜித் பட்டாரகர்) 15. தருமநாதர் 16. சாந்தி நாதர் 17. குந்து நாதர் (குந்துபட்டாரகர்) 18. அரநாதர் 19. மல்லி-நாதர் 20. முனிசு வர்த்தர் 21. நமி நாதர் (நமி பட்டாரகர்) 22. நேமி நாதர் (அரிஷ்ட நேமி) 23. பார்சுவ நாதர் 24. வர்த்தமான மகா வீரர்.

இருபத்து மூன்ருவது தீர்த்தங்கரராகிய பார்சுவ நாதர் கி. மு. 8-ம் நூற்ருண்டில் இருந்தவர். இவருச்குப் பின்னர் 250 ஆண்டுகளுக்குப் பிறகு வர்த்தமான மகாவீரர் தோன்றினர். இவர் கி. மு. 599 முதல் கி. மு. 527 வரை இருந்தவர். இவருடைய காலத்திலே புத்த சமயத்தைத் தோற்று வித்த கௌதமபுத்தரும் ஆசீவக மதத்தைத் தோற்றுவித்த மர்களியும் இருந்தார்கள். இவ்விரு சமயங்களுக்கும் முற்பட்டது சமணசமயம்.

வர்த்தமான மகா வீரர் மகதநாட்டுக் குண்டலபுரத்தில் சித்தார்த்தர் என்ற அரசருக்கும் விதிரிசலாவிற்கும் மகவாய்த் தோன்றியவர். சிறு வயதிலேயே தெய்வீகப் பற்று மிக்கவர். பெற்ருேரின் வற்புறுத்தலுக்கு இணங்கி தமக்கு விருப்பமின்றியே யசோதை என்ற பெண்மணியைத் திருமணம் புரிந்து கொண்டார். ஒரு பெண் மகவிற்கும் தந்தையானுர். தமது முப்பதாவது வயதில் பெற்ருேர்கள் காலம் சென்ற பின் மனைவி



சமண சமயத்தை விளக்கும் படம்

யையும் மகவையும் விடுத்து துறவறத்தை மேற்கொண்டார் இவர் பதினுன்கு வகையான தவங்களை இயற்றினர் என்றும், இதற்கு பன்னிரண்டு ஆண்டுகள் ஆறு மாதங்கள் பதினுன்கு நாட்களாயின என்றும் கூறுவர். இவர் வைகாசித் திங்கள் பத்தாம் நாளில் ஜிரிம்பாக் என்ற கிராமத்தின் புறத்தே உள்ள ரிஜூபாளக் என்ற ஆற்றின் வடகரையில் செய்த கடுமையான தியானத்தின் மூலமாகக், கேவல ஞான நிலையை எய்தினர். அதற்குப் பின்பு ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் போதித்தார்.

சமண சமயம் பிற்காலத்தில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிவுண்டது. அவை சுவேதாம்பர சமணம் வெண்ணிற ஆடை அணிபவர்கள்; திகம்பர சமணம் ஆகாயத்தை ஆடையாக அணிந்தவர்கள். அதாவது ஆடையின்றி இருப்பவர்; ஸ்தாக கவாசி சமணர், உருவ வழிபாட்டை ஏற்காது சமண ஆகம நூல்களையே தீர்த்தங்கரராகவும், அருகக் கடவுளாகவும் பாவிப்பவர்கள்.

சமண சமயக் கொள்கைகள்

இச்சித்திரம் சமண சமய தத்துவத்தை விளக்குகிறது இந்த சித்திரத்திற்கு ஸ்வஸ்திகம் அல்லது பிறவி சக்கரம் என்றும் பெயர். உயிர்கள் தாம் செய்த பாவப் புண்ணியங்களுக்குத் தக்கபடி தேவ கதி, விலங்கு கதி, நரக கதி. மனிதகதி என்னும் கதிகள் பிறந்து உழல்வதை இது குறிக்கிறது. பிறவிச் சக்கரத்திற்கு மேலே உள்ள மூன்று புள்ளிகள் நல்ஞானம் நற்காட்சி, நல்லொழுக்கம் என்ற மூன்று மணிகளைக் (இரத்தினத்திரியேயம்) குறிக்கின்றது. இதற்கு மேலே உள்ள பிறையும் அதன் மேலுள்ள ஒற்றைப் புள்ளியும் வினைகளை நீக்கி வீடு பேறு அடைந்த உயிரைக் குறிக்கின்றது.

நரக கதி:- பெறுதற்கரிய மனிதப் பிறவியின் கொடும் செயல்களைப் புரியும் உயிர் நரகத்தை எய்தும், தொடர்ந்து கொலைத் தொழிலைச் செய்பவர்களும், கொடுமையான நெஞ்சம் படைத்தவர்களும், இம்மை மறுமை இல்லை என்பவர்களும், நல் வினை தீவினை இல்லை என்பவர்களும், தானம் பயன்தராது என்ப வர்களும் நரகத்துள் செல்வர் என்று சிந்தாமணியும்; உள்ளம் கொடியவர்களும், உயிர்க்கொலை விரும்புபவர்களும், பிறனுடைய

பொருளைக் கவர்ந்து கொள்பவர்களும் நரகத்தை அடைவார்கள் என்று சூளாமணியும் உரைக்கின்றது. நரகத்தை அடைபவர்கள் முடிவில்லா தீயில் கிடந்து வெந்து துன்புறுவர் என்றும், உடம்பு முழுவதும் முட்களால் ஊடுருவப்பெற்றுக் கழுவிலே ஏற்றப் பெறு வர் என்றும் சூளாமணி கூறுகின்றது.

விலங்கு கதி:- சமண சமயம் விலங்கினங்களை ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு உயிர் வரை, ஐந்தாகப் பகுக்கின்றது இவ்விலங்கினங்கள் படும் துன்பங்களை சீவக சிந்தாமணி எடுத் தியம்புகிறது. பரதவத்தோரைப் பழிப்பவர்களும், பிறருக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணுதவர்களும், பரத்தையர்களும் விலங் கினங்களாகப் பிறந்து துன்புறுவர்.

மக்கள் கதி:- மக்கள் பிறவியில் பிணி, மூப்பு, இவற்றில் அடையும் துன்பம் பெரியது. விரும்பிய பொருளைப் பெற முடியா மையினுலும், அன்பு செலுத்துபவர்களைப் பிரிவதனுலும் எய்தும் துன்பம் மிகக் கொடியதாகும்.

தேவ கதி:- நற்காட்சியோடு நல் விரத ஒழுக்கத்திலும் சிறந்து அறம் செய்தவர்களே தேவராகத் தோன்றுவர் என்று சூளாமணி கூறுகிறது. இவர்கள் மற்றொரு தேவருக்கு அடங்கி ஏவல் செய்யும் துன்பம் பெரிது. எனவே எவ்வுடல் எடுப்பினும் துன்பத்தையே தரும் என்பது சமணர்களின் அடிப்படைக் கொள்கை.

எப்பொருளைப் பற்றியும் நமக்குள்ள அறிவு முழுமையானது அல்ல. ஆகையினுல் ஒரு பொருளைப்பற்றிக் குறிப்பிடும் போது அவ்வாறு இருக்கலாம் (சியாத்) எனக் கூறுவதே நன்று என்பர் சமணர்கள். ஒரு பொருளைப்பற்றி இருக்கலாம் என முடியும் கூற் றுக்களை ஏழு பகுதிகளுள் அடக்குவர். இதனை சப்தபங்கி என் பர். எந்த வகை வினுவிற்கும் அளிக்கக் கூடிய பதில் உண்டு; இல்லை; உண்டு, இல்லை; சொல்ல முடியாதது; உண்டு சொல்ல முடியாதது; இல்லை சொல்ல முடியாதது; உண்டு இல்லை சொல்ல முடியாதது என ஏழு வகையாகும்.

சமணர்கள் ஒரு பொருளைப் பற்றி நாம் முழுமையாக அறிந்து கொள்ள விரும்பினுல் அது தான் கொண்டுள்ள குணங் களால் மட்டுமன்றி, கொண்டிராத தன்மைகளையும் ஆய்வது

நன்று என்பர். யானையின் வெவ்வேறு உறுப்புக்களைத் தடவிப் பார்த்து அவ்வுறுப்புக்களின் அடிப்படையில் யானையைக் கணித்த குருடர்களின் நிலையைப் போன்றதே நம்முடைய நிலை. யானையைப் பற்றி முழுமையாக அறிய விரும்பின எல்லாக் குருடர்களின் கூற்றையும் ஏற்றுக்கொண்டு ஆய்வது சிறப்பு. ஆகையினால் சமணர்களை அநேகாந்த வாதிகள் என்பர்.

சமணர்கள் பல வகையான ஞானம் உண்டு என்பர். மனித ஆன்மா தன் ஞான வளர்ச்சிக்குத் தகுந்த வண்ணம் பலவித அறிவு (ஞானம்) அடையும்.

1. ஐம்பொறிகளின் வாயிலாக எழும் நேர்புலக் காட்சி. எண்ணத்தால் தோன்றும் அனுமானம், மதி ஞானம் ஆகும். (எ. கா.) நமக்கு உடல் உண்டு; உயிர் உண்டு என்ற அறிவு.

2. ஆன்றோர் நேரே கண்டுணர்ந்து வழங்கிய பொன்னுரைகள் (ஆப்த வாக்கியங்கள்) சுருதி ஞானம் ஆகும். (எ. கா.) மகாவீரர் அருக நிலை அடைந்தார் என்பது.

3. புலன்களுக்குகெட்டாத கால இடத்தில் உள்ள பொருட்கள், நிகழ்ச்சிகளைத் தெளிவாய்க் காணல் அபதி ஞானம் எல்லாரிடமும் செயலாகாமலிருக்கலாம். ஆனல் இத்தொலைக் காட்சித் திறன் எல்லாரிடமும் உண்டு.

4. வெளியே அல்ல. இன்னெரு ஆளின் மனதில் உள்ளவற்றை உள்ளது போல் தெளிந்துணர்தல் மனப்பரியாய ஞானம். யோகத் தவப் பேற்ருல் இத்திறன் கிட்டும்.

5. முழு விடுதலை பெற்ற ஆன்மா அடையும் . முக்கால உணர்வு வரம்பிலா அறிவு கேவல ஞானம் ஆகும். இவற்றில் முதலிரண்டும் பரோக்க (வேற்றுப் பொருளைச் சார்ந்த) ஞானம், பின் மூன்றும் பிரத்தியட்ச (நேரடி) ஞானம்.

நவபதார்த்தங்கள்

"உயிரும் உயிரல்லதும், புண்ணியம், பாவம், ஊற்றும் செயிர் தீர் செறிப்பும், உதிர்ப்பும், கட்டும், வீடும் உற்ற துயர் தீர்க்கும் தூய நெறியும் சுருக்காய் யுரைப்பன் மயல் தீர்ந்த காட்சி யுடையோய்! இதுகேண் மதித்தே".[1]

1. மேரு மந்திர புராணச் செய்யுள்.

சமண சமயம் ஒன்பது பொருட்களை (நவபதார்த்தம்) தனது அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டிருக்கின்றது.

1. **உயிர்** (ஜீவன்) : உயிர்கள் அநாதியானவை. எண்ணிறந்தவை. அழிவில்லாதவை. நல்வினை தீவினை செய்து அவற்றின் பயனால் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கு நரககதி, விலங்கு கதி, மக்கள் கதி, தேவ கதி எனும் கதிகளில் பிறந்து உழன்று திரிபவை. இரு வினைகளை அறுத்த பின் பேரின்ப வீட்டை அடைவது உயிர்களின் இயல்பு. இரு வினைகளை அறவே அகற்றிய நிலையில் உயிர் தானாகவே அனைத்தையும் உள்ளபடியே அறியும் ஆற்றலைப் பெறுகிறது. இதனைக் கேவல ஞானம் என்பர். உயிர்களின் இயல்பான தன்மை நிறையுடைமை. இவை வரம்பற்ற அறிவு, வரம்பற்ற அமைதி, வரம்பற்ற நம்பிக்கை, வரம்பற்ற ஆற்றல் உடையவை.

உயிர்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூன்றறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர் என ஐந்து வகைப்படும். ஐயறிவுயிர்கள் பகுத்தறிவு உடையவை, பகுத்தறிவு இல்லாதவை என இரண்டாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. உடம்பின் பருமை, சிறுமைக்கு ஏற்ப உயிர் விரிந்து கொடுக்கும் தன்மையினது. மேலும் உயிர்கள் மோட்ச ஜீவன், சம்சார ஜீவன் என இருவகையாகப் பிரிந்து பட்டிருக்கின்றது. அறிவு விளங்கப் பெற்று வினைகளை நீக்கி வீடுபேறு அடையும் தன்மையுள்ள உயிர்கள் மோட்ச ஜீவன் எனவும்; நல்வினை, தீவினைகளில் கட்டுண்டு அவ்வினைப் பயனை அனுபவிக்க விலங்கு, நரக, மக்கள் தேவகதியில் பிறந்து உழல்பவை சம்சார ஜீவன் எனவும் பகுக்கப்பட்டுள்ளது. துறவு பூண்டவர்கள் மட்டுமே வீடு பேற்றை அடைய முடியும்.

2. **உயிரல்லது** (அஜீவன்) : இவை புத்கலம், தர்மம், அதர்மம், காலம், ஆகாயம் என்னும் ஐந்து வகைப் படும். அஜீவன் அநாதியானவை. இவைகள் கடவுளால் படைக்கப்படாதவை.

புத்கலத்தில் ஐந்து புலன்களும் அவற்றினால் அறியப்படும் பொருள்களும் இருள், ஒளி, வெயில், நிழல், ஒளி நிலம், நீர், நெருப்புக் காற்று என்னும் பூதங்களும் அடங்கும். புத்கலம் நுண்ணிய அணுப் பொருட்களாகவும் பெரிய பருப்பொருட்களாகவும் மாறும் தன்மையுடையது. உயிர்கட்கு

உடம்பு, மனம், வாக்கு, சுகம், துக்கம், பிறப்பு. வாழ்வு, இறப்பு இவற்றைப் புத்கலம் கொடுக்கின்றது.

தர்மம், அதர்மம் என்பவைகளை பாவம், புண்ணியமாகக் கருதுதல் கூடாது. இவைகள் நுண்ணிய அணுப்பொருட்கள். உயிர்கள் இயங்குவதற்கும் தங்குவதற்கும் இடமாக உள்ளவை. மீன்கள் நீந்துவதற்கும், ஓய்வு கொள்ளவும், நீர்நிலை எவ்வாறு உதவுகிறதோ அவ்வாறு உயிர்கள் இயங்குவதற்கு இவைகள் உதவுகின்றன. நடத்தல், ஓடுதல் முதலிய இயக்கங்கள் தருமம் என்னும் அணுக்களின் உதவியினாலும் இருத்தல், நிற்றல், கிடத்தல் முதலியவை அதர்மம் என்னும் அணுக்களின் உதவியினாலும் நடைபெறுகின்றது. இதனை மணிமேகலை

"தருமத்தி காயம் தானெங்கும் உளதாய்ப்
பொருள்களை நடத்தும் பொருந்த நித்தியமாய்
அப்படி தாகி அதன்மாத்தி காயமும்
எப்பொருள் களையும் நிறுத்தல் இயற்றும்"

மணிமேகலை. 27 : 187-190

இவ்வணுக்கள் ஆகாயம் பறந்துள்ள வரையில் நிறைந்திருக்கின்றன.

காலம் : இமைத்தல் முதலான சிறு கால அளவையும் கற்ப காலம் முதலியவை பெரிய கால அளவையும் குறிக்கும்.

"காலம் கணிகம் எனுங்குறு நிகழ்ச்சியும்
மேலும் கற்பத்தின் நெடு நிகழ்ச்சியும் ஆகும்."

மணிமேகலை 27: 191-192.

ஆகாயம் : இது பூதங்களுள் ஒன்று அல்ல. இவை தருமம் அதருமம், காலம், உயிர்கள், புத்கலங்கள் இவை தங்கும் இடம் ஆகாயம் பௌதீகப் பொருள் நிறைந்த லோகாகாசம் என்றும் அதற்கு மேற்பட்ட அலோகாகாசம் என்றும் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படுகின்றது. அலோகாகாசம் இயக்கமற்றது.

3;4 புண்ணியம், பாவம் (நல்வினை, தீவினை)

மனத்தினால் நினைப்பதும், வாக்கினால் சொல்வதும் காயத்தால் செய்வதும், பாவ புண்ணியங்களாக உயிருடன் கலக்கின்றன. நல்வாய்மை, நற்செய்கை, நல்லெண்ணம் இவற்றினால் கிடைக்கப் பெறும் புண்ணியம் உயிர்களை மனிதராகவும், தேவராகவும் பிறக்கச் செய்து, அறிவு செல்வம் இன்பம், புகழ் மேன்மை முதலிய சிறப்புக்களை அளிக்கின்றது. தீய எண்ணம்

தீய செய்கை, தீயசொற்கள் உயிர்களை, நரககதி, விலங்கு கதி களில் பிறந்து துன்பம் இகழ்ச்சி, வறுமை, சிறுமை முதலிய துன்பங்களை அடையச் செய்கிறது.

பசியாயிருப்பவருக்கு உணவளித்தல், தாகமாய் இருப்ப வருக்கு நீர் அளித்தல், ஏழைகட்கு ஆடை அளித்தல் இருப்பி டம் அளித்தல், துறவிக்கு இருக்கை அல்லது படுக்கை அளித் தல், மற்றவர்கட்கு, நல்வாழ்த்துக் கூறுதல், மற்றவர்கட்கு வேலை செய்வதின் மூலம் தன்னைத் துன்புறுத்திக் கொள்ளுதல், மற்றவர் களின உணர்வுகளைப் பாதிக்காத வண்ணம் பேசுதல், சமயக் குரவர்கட்கு வந்தனம் செய்தல் ஆகிய ஒன்பது வழிகளில் புண் ணியங்களை அடையலாம் என்று சமண சமயம் கூறுகின்றது. சமண சமயம் பதினெட்டு வகையாகப் பாவங்களைப் பற்றிக் கூறுகின்றது.

ஆஸ்ரவம்

5. **ஊற்று**: செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப நீர் ஊற்றுக் களில் நீர் சுரப்பது போல் நல்வினை தீவினை உயிரில் சுரப்பது ஊற்று எனப்படும். மனம், சொல், செயல் இவற்றின் வழியாக ஊற்றுக்கள் உயிரிடம் வந்து சேருவதை கன்மத் தொடர்ச்சி, அல்லது பொறிவழி சேரல் என்பர். இதனை இரத்தின பிரபை என்ற சாரணர் சீவகனுக்குப் பின் வருமாறு அறிவுறுத்துகின்றார்.

''அறிவிய மனத்தராகி ஆருயிர்க் கருணை செய்யின்
பறவையும் நிழலும் போலப் பழவினை உயிரோடாடி
மறவியொன்றுனு மின்றி மனத்ததே சுரக்கும் பால!
கறவையிற் கறக்குந் தம்மால் காமுறப்பட்டவெல்லாம்''
(சீவகசிந்தாமணி 2877)

ஏறக்குறைய நாற்பத்திரண்டு வகைகளில் கருமாக்கள் ஜீவனை அடைகிறது என்று சமண சமயம் கூறுகின்றது.

6. **செறிப்பு** (ஸம்வரை) - நல்வினை, தீவினை சுரக்கும் ஊற்றி னது வழியை அடைத்து விடுவது செறிப்பு ஆகும். பழைய வினைகளினல் வரும் பலனை அனுபவிக்கும் போது நம் மனம், வாக்கு, காயம் புதிய வினைகளைச் செய்கின்றன. அவ்வாறு புதிய கன்மங்கள் வந்து சேராதபடி தடுப்பது தான் செறிப்பு. குளத் திற்கு நீர் வரும் கால்வாய்களை அடைத்து நீர் பெருகாமல் தடுப்

பது போன்று மனம், வாக்கு காயத்தை அடக்கி உயிரினிடத்தில் மேலும் வினைகள் பரவாது தடுத்து, ஒழுக்க நெறியில் நின்று விரதங்களை மேற்கொண்டு தியானத்தில் ஆழ்ந்து படுவதே கன்மத்தை தடுப்பதற்குரிய சிறந்த வழி. சமணசமயம் ஐம்பத்தேழு வகைகளில் கன்மங்கள் உயிருக்குள் உட்புகுவதைத் தடுக்கலாம் என்று இயம்புகின்றது.

7. **உதிர்ப்பு :-** (நிர்ச்சரை). இருவினை பெருகாது தடுத்தப் பின்னர் அனுபவித்துக் கழியாமல் எஞ்சி நிற்கும் வினைகளைக் களைந்து விடுவது உதிர்ப்பு.

> ''வரும் பாவம் எதிர் காத்து மன்னுந்தம் பழவினையும்
> ஒழுங்காக உதிர்த்தக்கால் உயிர்தூய்மை வீடென்றார்.''
> (நீலகேசி 312)

இதனைச் சிந்தாமணிப் பாடல் ஒன்று நன்கு தெளிவு படுத்துகின்றது.

> ''புணிரிபோல் சிறு புண் கேள்விப்
> படையொடு புகைந்து பொங்கி
> உணர்வொடு காட்சி பேறென்(று)
> இடையுறு கோக்கள் ஏற்றார்
> இணரெரி முழக்கம் அன்ன
> சுக்கிலத் தியானம் என்னும்
> கணையெறிந் துகைப்ப வீழ்ந்து
> காற்படை சூழப்பட்டார்''
> (சீவக சிந்தாமணி 3081)

''உணர்வு, காட்சி, பேறு என்னும் பகையரசர் படையெடுத்து வந்து புகைந்து பொங்கிப் பொருதார்கள். அவர் தம் படைகள் கடல் போலப் பெரியவையாயினும் அற்ப அறிவு உடையவை. ஆனால் அப்பகைவர்கள் சீவகனின் கிளைத்தலையுடைய நெருப்பினது முழக்கம் போன்ற சுக்கிலத்தியானம் என்னும் அம்பு பட்டுத் தம் காலாட் படையோடு வீழ்ந்து இறந்தனர்'' என்பது இதன் பொருள்.[1]

1. தா. எ. ஞானமூர்த்தி — சமணம் p. 43 - 44

இப்பாடலுக்கு நச்சினர்க்கினியார் பின்வருமாறு பொருள் விளக்கம் தருகின்ருர்.

உணர்வாவது; மதி ஞானுவரணீயம், சுருத ஞானுவரணீயம், அவதி ஞானுவரணீயம், மனப்பரியய ஞானுவரணீயம், கேவல ஞானுவரணீயம் என்பனவற்றைக் குறிப்பதாகும். இவற்றுள் மதிஞானு வரணீயம், சுவபாவபுத்தியை மறைப்பது; சுருத ஞானுவரணீயம் சுருத ஞானத்தை மறைப்பது. அவதி ஞானுவரணீயம், அதீதகதமான பரிஞானத்தை மறைப்பது - அதாவது தனது முற்பிறப்பையறியும் அறிவை மறைப்பது; மனப்பரியய ஞானுவரணீயம் மனப்பரியய ஞானத்தை மறைப்பது – அதாவது தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியும் அறிவை மறைப்பது; கேவல ஞானுவரணீயம் திரிகால ஞானத்தையும் மறைப்பது.

காட்சியாவது, சக்குதரிசனுவரணீயம், அசக்கு தரிசனுவரணீயம், அவதி தரிசனுவரணீயம், கேவல தரிசனுவரணீயம், என்பனவற்றைக் குறிப்பதாகும். இவற்றுள் சக்கு தரிசனுவரணீயம் என்பது கண்ணுல் அறியும் அறிவுக்கு முன் காணுங் காட்சியை மறைப்பது; அசக்கு தரிசனுவரணீயம் என்பது கண்ணெழிந்த நான்கு இந்திரியங்களினுலும் அறியும் அறிவுக்கு முன் காணுங் காட்சியை மறைப்பது; அவதிதரிசனுவரணீயம் என்பது அவதி ஞானத்துக்கு முன் காணும் காட்சியை மறைப்பது.

பேறு என்பது, தானுந்தராயம், இபாபாந்தராயம், போகாந்தராயம், உப போகாந்தராயம்; வீரியாந்தராயம், என்பனவற்றைக் குறிப்பதாகும். இவற்றுள் தானுந்தராயமாவது கொடையினை விலக்குவது; இலாபாந்தராயமாவது இலாபத்தை இடையிலே விலக்குவது, போகாந்தராயமாவது துய்த்தற்குரிய போகங்களை விலக்குவது; உபபோகாந்தராயமாவது அனுபவிக்கும் பொருள்களை விலக்குவது: வீரியாந்தராயமாவது வீரியத்தை விலக்குவது.

காலாட்படை என்பது பரிசேந்திரியம், நயனேந்திரியம் முதலியவற்றைக் குறிக்கும்.

சுக்கிலத்தியானமாவது எல்லாக் கருமங்களும் நீங்கிய பரமான்மாவாகத் தன்னைப் பாவித்தல். இது பரமான்ம பாவனை எனப்படும்.

8. **கட்டு:-** (பந்தம்) சொல், செயல், சிந்தை இவற்றினுல் உண்டான வினைகள் உயிருடன் ஒன்றிக் கலப்பது கட்டு எனப் படும். பழுக்கக் காய்ச்சிய இரும்பு தண்ணீரை உறிஞ்சிக் கொள்வது போலவும், பாலுடன் கலந்த நீர் அதனுடன் ஒன்று படுவது போலவும் வினைகள் உயிருடன் கலக்கின்றது.[1]

9. **வீடு:** (மோட்சம்)

> "வருவழி இரண்டையும் மாற்றி முன் செய்
> அருவினைப் பயன் அனுப்பித் தறுத்திடுதல்
> அது வீடாகும்."
>
> (மணி மேகலை 27: 199-201)

ஐம்புல ஆசைகளினையும் அறித் தெரியும் உயிர் இருவினை களினின்று நீக்கம் பெற்று கடையிலா காட்சி, கடையிலா அறிவு, கடையிலா இன்பம் (கேவ தரிசனம்), கடையிலாவீரியம் (கேவல ஞானம்) இவற்றினை எய்தி (கேவல அகம்) வீட்டுல கத்தை அடைவது (கேவல வீரியம்) அருகந்த நிலை எனப்படும்.

இந்த ஒன்பது பொருட்களே (நவபதார்த்தங்கள்) சமண சமயத் தத்துவத்தின் அடிப்படையாகும். இவ் வொன்பது பொருட் களின் உண்மையை அறிந்து கொள்வது நல்ஞானம். இவற்றின் தன்மையை ஐயப்பாடின்றி உணர்ந்து கொள்வது நற்காட்சி. இவற்றின் அடிப்படையில் ஒழுகுவது நல் ஒழுக்கம். இவற்றை இரத்தினத்திரயம் அல்லது மும்மணி என்பர்.

சமண ஒழுக்கம்

துறவற ஒழுக்கம்:- (யதி தர்மம்)

சமண சமயம், துறவிகள் தமது வாழ்க்கையை மேற் கொண்டு ஒழுக வேண்டிய ஒழுக்கங்கள் இருபத்துஎட்டு என்று குறிக்கின்றது. இதனை மூலகுணங்கள் என்றும் கூறுகின்றன. அவைகள் மகாவிரதங்கள் ஐந்து, சமிதி ஐந்து, ஐம்பொறி அடக்கம் ஐந்து, ஆவஸ்யகம் ஆறு, துறவிகள் உடலை வைத் திருக்கவேண்டிய வழிகள் ஏழு.

---

1. சீவக சிந்தாமணி 2830-31.

மகா விரதங்கள் ஐந்து

1 அகிம்சை:- அகிம்ஸா பரமோதர்மா என்பது சமணர்களின் அடிப்படைத்தத்துவம். இவற்றில் இன்னு செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை. புலால் மறுத்தல் ஆகியவை அடங்கும். எவ்வறிவுயிர் ஆயினும், சிறியனவாயினும் பெரியன வாயினும் கொல்லமாட்டேன். கொல்லச் சொல்லவும் மாட்டேன், சொல்ல நினைக்கவும் மாட்டேன், மற்றவர்கள் கொலவதற்கும், மனம் மொழி மெய்யால் உடன்படவும் மாட்டேன் என்ற விரதத்தை சமண முனிவர்கள் மேற்கொள்ள வேண்டும். எல்லா உயிர்களுக்கும் ஆன்மா உண்டு. எல்லா உயிர்களும் வாழ் வதற்கு சம உரிமை உண்டு என்பதின் அடிப்படையில் அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும்.[1]

சுவிட்சர் என்பார் அகிம்சை கொள்கைத் தோற்றத்தினை பின்வருமாறு விளக்குகின்றார்.

"அகிம்சைக் கொள்கை தொடக்க காலத்தில் இரக்க உணர்வின்று பிறந்ததாகத் தெரியவில்லை. ஆன்மா உலகியலில் ஈடுபட்டுக் கறைபடக் கூடாது என்ற கருத்திலிருந்து அக் கொள்கை உண்டாகியது. ஒருவன் செய்யும் நல்வினைத் தீவினைப் பயன்கள் அவன் தன் ஆன்மாவோடு கலந்து மறுமையில் அவற்றிற்கேற்ப பிறவியை நல்குகின்றன. ஆன்மா பேரின்ப நிலையை எய்துவதற்குப் பிறவியை அறுத்தொழிக்க வேண்டும் பிறவி அறுதற்கு இருவினைப்பயன்களைப் போக்க வேண்டும் அதற்கு செயலற்று அல்லது வினையற்று இருத்தல் இன்றியமை யாதது. வன்முறை ஒரு செயல் அல்லது வினையாகும். அகிம்சை அல்லது இக்கு செய்யாமை செயலற்றதாகும். நாளடைவில் அஹிம்ஸைக்கு இரக்க உணர்வு அடிப்படையாகிவிட்டது.

2. **வாய்மை** அல்லது பொய்யாமை:- பொய்யாமையாவது தீமைபயக்கும் சொற்களைக் கூறுமை, சமண முனிவர்கள் "நான் எப்பொழுதும் மெய்மையே பேசுவேன்; ஒரு பொழுதும் பொய் பேசமாட்டேன்; பிறரைப் பொய் பேசத் தூண்டவும் மாட்டேன்; பிறர் பொய் பேசுவதற்கு உடன்படமாட்டேன். மனம் மொழி

---

1. டா.எ.ஞானமூர்த்தி — சமணம் P. 35

மெய்யால் முக்காலங்களிலும் மெய்மையே பேசுவேன் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மை பேசுவதுடன் அன்பாகவும் நன்மையாகவும் முனிவர்கள் பழகுதல் வேண்டும்.

3. **அஸ்தீயம்** அல்லது கள்ளாமை:- எவ்வகையான சிறிய பொருளாக இருந்தாலும் அப்பொருளுக்கு உரியவர் கொடுத்தாலன்றி மனத்தினாலும் அப்பொருளை அடைய நினையாமை. தான் எடுத்துக் கொள்ளாததுடன் பிறர் எடுத்துக் கொள்ளவும் உடன்படுதல் கூடாது. மனம் மொழி மெய்களால் கள்ளாமையயை மேற்கொள்ள வேண்டும். எல்லா உடைமைகளும் பரிசுத்தமானது. அனைவருக்கும் உடைமைகளை ஏற்றுக் கொள்ள சம உரிமை உண்டு என்பதே அடிப்படைத் தத்துவம்.

4. **பிரம்மச்சரியம்** அல்லது கற்பு:- புணர்ச்சி விழையாமை தெய்வங்களுடனாவது மனிதர்களுடனாவது விலங்குகளுடனாவது சிற்றின்பத்தை மனம் வாக்கு காயத்தால் அணுகாமை.

5. **அபரிகிரகா** அல்லது அவாவறுத்தல்:-
உலகப் பற்றினின்று நீங்குதல், முற்றும் துறத்தல். உயிருள்ள பொருளாயிருந்தாலும் உயிரற்ற பொருளாயிருந்தாலும் சிறியதாயினும் பெரியதாயினும் எல்லாப் பொருட்களையும் துறந்து அவற்றின் தொடர்பை நீக்கிக் கொள்ளுகிறேன்: இதனை மனம் மொழி மெய்களால் முக்காலத்திலும் செய்வேன் என்று உறுதி எடுக்கவேண்டும்.

சமிதிகள் ஐந்து

6. **இரியாசமிதி** முனிவர்கள் நடக்கும் போது மூன்று முழதூரம் பார்த்தும் எறும்பு, புழு, பூச்சி முதலியவைகள் மிதிபடாது நடத்தல் வேண்டும். இது பற்றியே முனிவர்கள் இரவில் பிரயாணம் செய்யார். சிற்றுயிர்கள் காலில் மிதிபடாது இருக்க, மயிர்பீலி குஞ்சத்தைக்கையில் வைத்திருப்பர்.

கவுந்தி அடிகள் வழியில் நடக்கும் போது தன் கையில் மயிர் பீலி கொண்டிருந்தார் என்பதை சிலப்பதிகாரம்,

"கவுந்தி ஐயைகைப் பீலியுங் கொண்டு......." என்று குறிப்பிடுகின்றது.

7. **பாஷாசமிதி:-** நாவடக்கம் அல்லது வாக்கடக்கம், பழித்துப் பேசுதல், புகழ்ந்து பேசுதல், கோபமாகப் பேசுதல், கடுஞ்சொல் கூறல் இவற்றை ஒழித்து இனிமையாக தர்மத்தை எடுத்துக் கூறுதல் வேண்டும்.

8. **ஏஷணசமிதி:-** நாற்பத்தாறு வகைக் குற்றங்களை நீக்கி சரியான உணவை உண்ணுதல் வேண்டும். இவ்வுணவையும் யாசித்துப் பெற்று அளவாக உண்ணல் வேண்டும்.

9. **ஆதான நிக்ஷேபண சமிதி:-** துறவிகளுக்குரிய நூல், குஞ்சம், கமண்டலம் ஆகிய பொருட்களை எடுக்கும் போதும் வைக்கும் போதும் சிறு உயிர்கள் இறந்து போகாதவாறு மெல்ல எடுத்து மெல்ல வைக்க வேண்டும்.

10. **உத்சர்க்க சமிதி:-** முனிவர்கள் காலைக் கடன் கழிக்கும் போது ஊருக்குப் புறத்தே எவரும் இல்லாத இடத்தில், எவரும் நடமாடாத இடத்தில், புழு பூச்சிகள் முதலியவைகள் இல்லாத இடத்தில் கழிக்க வேண்டும்.

ஐம்பொறி அடக்கம் ஐந்து

நாலாடி நானூறு என்னும் சமண நூல் பின்வருமாறு ஐம்பொறி அடக்கத்தைப் பற்றிக் கூறுகின்றது.

"மெய்வாய் கண் மூக்கு செவி எனப் பேர் பெற்ற
ஐவாய வேட்கை அவாவினை - கைவாய்
கலங்காமல் காதனுய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்."

நல்வினைத் தீவினைகள் உயிரோடு கலப்பதற்கு ஐம்பொறிகள் வாயில்களாக அமைகின்றன. ஆகவே அதனை அடக்க வேண்டுவது துறவிகளின் கடமை.

11. **நாட்டியம், நடனம், களியாட்டம்** முதலியவைகளைக் காணாமை.

12. **பாட்டு, யாழ், வீணை** முதலியவற்றைக் கேளாமை.

13. **சந்தனம், பூ, நறுமணத்திரவியம்** முதலியவற்றை முகராமை.

14. அறுசுவை உணவை உண்ணாமை.

15. இன்பமளிக்கும் பொருட்களைத் தொடுதல், தேய்த்தல் இல்லாமை, இவை ஐந்தினையும் மனம் வாக்கு காயத்தால் ஒழுகுதல்.

ஆவஸ்யகம் ஆறு

16. **சாமாயிகம்:-** நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு, இன்ப துன்பம்; அனைத்தையும் சமமாகப் பாவித்தல்.

17. **துதி:-** இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களையும் அருகப் பெருமானையும் போற்றித் துதித்தல்.

18. **வணக்கம்:-** அருகர், சித்தர், தீர்த்தங்கரர்கள் ஆகியோரின் திருவுருவங்களையும், சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்தோரையும், பெரியவர்களையும், சொல் செயல் சிந்தையால் வணங்குதல்.

19. **பிரதிகிர்மணம்:-** பாவத்திற்குக் காரணமானவை தன்னிடத்தில் நேராதபடி சொல், செயல், சிந்தையைக் காத்துக் கொள்ளுதல்.

20. **விசர்க்கம்:-** தவம் செய்யும் பொழுது ஏற்படும் துன்பங்களைப் பொறுத்து, உடலும் உயிரும் வேறு வேறு என உணர்ந்து உடலின் மீது உள்ள பற்றை ஒழிப்பது விசர்க்கம் அல்லது காயோத்சர்க்கம் எனப்படும்.

21. **கழுவாய்:-** "ஒன்றியும் ஒன்றுலும் தான் செய்த தீவினையை நின்று நினைத்திரங்கள் பாற்று" என அருங்கலச் செப்பு, கழுவாய் அல்லது பிராயச்சித்தத்தைக் குறிக்கின்றது விரதத்தில் குற்றம் ஏற்படின் சொல் செயல் சிந்தையால் தம்மையே ஆய்ந்து, நொந்து குற்றத்தைக் கழுவுதல்.

துறவிகள் உடலை வைத்திருக்கும் வழிகள் ஏழு

பிறப்பறுக்க விழைந்து துறவிகளுக்கு உடம்பினுல் ஒரு பயனும் இல்லை என்பதினை மனதில் கொண்டு கீழ்கண்ட ஏழு வழிகளை சமண முனிவர்கள் / கடைப்பிடிப்பர்.

22. **லோசம்** அல்லது தலைமயிர் களைதல் :- முனிவர்கள் துறவு ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் தீட்சை பெறுவர். அவ்வமயத்தில்

உண்ணு நோன்பிருந்து, தலைமயிரைக் கத்தியால் அழிக்காது கையினால் பிடுங்கிக் களைவர். மீண்டும் மீண்டும் மயிர் வளர அதனைப் பிடுங்குபவர். இச்செய்கை துறவிகளின் மனவலிமையையும் துன்பத்தைப் பொறுக்கும் ஆற்றலையும், காயத்தின் மீது பற்று அற்றவர்கள் என்பதினையும் விளக்கும்.

23. **திகம்பரம்:-** ஆகாயமே உடையெனக் கொண்டு ஆடையையும் நீக்குதல், ஏனெனில் ஆடை உடம்பின் மீது உள்ள பற்றைக் குறிக்கும். மேலும் தேகம் வெயிலின் வெம்மை குளிர் முதலினவற்றையும், எறும்பு, கொசு முதலியவற்றினால் உண்டாகும் துன்பத்தினையும், தாங்கிக் கொள்ளும் திண்மை பெறுகின்றது.

24. **நீராடாமை:-** உடம்பில் உண்டாகும் வேர்வை, அழுக்கு முதலியவைகளைக் கழுவி போக்குதல் உடம்பின் மீது உள்ள பற்றையே குறிக்கும். புறத் தூய்மையை விட அகத்தூய்மையே சாலச் சிறந்தது. மேலும் நீராடலின் போது நீரில் உள்ள சிறு உயிர்கள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இதனைக் கருதியே முனிவர்கள் நீர் அருந்துவதற்கு முன் அதனை ஏழு முறை வடிகட்ட வேண்டும் என்ற விதியும் அவர்கட்கு உண்டு.

25. **பல்தேய்க்காமை:-** உடம்பின் மீது பற்று அறுத்தவர்கள் பற்களைத் தேய்த்து சுத்தம் செய்யின் அங்குள்ள சிறு உயிர்கள் அழிந்து படுமோ என்று அச்சம் கொண்டு பற்களை சுத்தம் செய்ய மாட்டார்கள்.

26. **தரையிற் படுத்தல்:-** பாய் முதலிய சுகம் தரும் படுக்கைகளை நீக்கித் தரையில் படுத்தல் வேண்டும். இடம் அல்லது வலப்புறமாகப் படுத்தல் வேண்டும். குப்புறப் படுப்பதும், மல்லாந்து படுப்பதும், எறும்பு புழு பூச்சிகள் இறவாதபடி அவை உள்ள இடங்களில் படுத்தலைத் தவிர்த்தலும் வேண்டும்.

27. **நின்று உண்ணல்:-** முனிவர்கள் உணவைப் பிச்சை எடுத்துக் கையில் வாங்கி உண்ணுதல் வேண்டும். இருக்கை உண்கலம் முதலியவை உடலைப் பேணுதலாகும்.

28. **ஏகபுக்தம் அல்லது ஒருவேளை உண்ணுதல்:-** முனிவர்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை உண்ணுதலே நன்று.

சூரியன் புறப்பட்ட நேரத்தில் மூன்று நாழிகைக்கு பின்னரும், சூரியன் மறைவதற்கு மூன்று நாழிகைக்கு முன்னரும் முனிவர்கள் சாதாரணமாக உணவு உட்கொள்ளுவர்.

முனிவர்கள் மேற்குறிப்பிட்ட மூலகுணங்களாகிய இருபத்தெட்டினையும் தம் உடல் நிலைக்கு ஏற்றவாறு கைக்கொள்வர். இவ்வொழுக்கங்கள் இரு வினையை அகற்றி, வீடு பேறு எய்துவதற்கு உறுதுணையாகும்.

இல்லற ஒழுக்கம் (சாவக தர்மம், சிராவக தர்மம்)

சமண சமயம், இல்லறம், துறவறம் இரண்டு வகைப்பட்ட அறங்களை கூறுகின்றது. துறவிகள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய 28 வகைக் குணங்களை மேலே சுருங்கக் கண்டோம். இல்லறத்தோர் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களும் துறவறத்தோர் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைப் போன்று கடினமானதே. அவையாவன

1. **அகிம்சை** (கொல்லாமை)

துறவறத்தோர் மட்டுமின்றி இல்லறத்தோரும் அகிம்சையைக் கடைபிடிக்க வேண்டும். பிற உயிர்க்கு இரங்கும் பண்பும் இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் சால்பும் சமண சமய இல்லறத்தோரிடம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. கோவலனையும் கண்ணகியையும் எள்ளி நகையாடியவர்களை கவுந்தி அடிகள் சபிக்க, கோவலன் சபிக்கப்பட்ட அம்மக்கள் அறியாமையினாலே அவ்விதம் எள்ளி நகையாடினர் என்று கூறி அவர்களுக்காக பரிந்துரைத்தலை சிலப்பதிகாரம் எடுத்து இயம்புகிறது.

கொல்லாமையும், சிறப்பாக, எல்லா உயிர்க்கு இரங்குதலையும் சமண சமயம் சிறப்பித்துக் கூறுகிறது. பல வகையான இறைச்சிகளை உண்ணுதல் பொருட்டு விலங்கினங்களை வதைத்துத் தின்பவர்கள் நரகத்தில் அவரவர் தம் கைகால் முதலிய உறுப்புக்களை ஒவ்வொன்றாக அரிந்து தின்னும்படி வற்புறுத்தப்படுவார்கள் என்று சூளாமணி எடுத்துரைக்கின்றது.

2. **பொய்யாமை:-** தீமை பயக்கின்ற எந்த ஒழுக்கமும் பொய்யே. பொய் பேசுவது தவறு என்று இயம்பும் சமணம், உயிர்க்கொலைத் தடுக்கப் பொய் கூறலாம் எனக் கூறுகின்றது.

ஆகையினுல் பொய்யாமையைக் காட்டிலும் அகிம்சையே சிறந்தது எனலாம்.

3. **கள்ளாமை:-** பிறர் பொருளை வஞ்சித்தல் கள்ளாமை ஆகும்.

4. **பிறன்மனை விரும்பாமை:-** சீவக சிந்தாமணியில், சச்சந்தன் என்னும் அரசன் மிகுந்த காமத்தால் தன் நாட்டை இழந்து துன்புற்றதையும், சீவகன் காம அடக்கத்தினுலும் பிறன்மனை நோக்காப் பேராண்மையினுலும் சிறிப்புப் பெற்றதைக் கூறுகின்றது.

5. **பொருள் வரைதல்:-** இல்லறத்தோர் ஒவ்வொருவரும் இவ்வளவுதான் பொருள் ஈட்ட வேண்டும் என்று வரையறுத்து கொண்டு அவ்வரையறைப்படி ஈட்டி வாழ்தல், சிறப்பாக நில புலம், வீடு வாசல், பணம் காசு, பொன் பொருள், தானிய தவசம், ஆடு மாடு இவைகளை வரையறுத்தல் ஈட்டியப் பொருளை மற்றவர்களோடு பகுத்து உண்ணுதல் தலையாய அறமாகப் போற்றப்படுகிறது.

6. **தேன் உண்ணாமை**

7. **கள் உண்ணாமை**

8. **ஊன் உண்ணாமை**

9. **இரவு உண்ணாமை**

10. **பெரியவர்களை வணங்குதல் :-** இவைகளும் வற்புறுத்தப் படுகிறது. இதனைத் திருக்கலம்பகம் என்னும் சமண சமய நூல் பின் வருமாறு கூறுகிறது.

> ''விரையார் மலர்மிசை வருவார் திருவறம்
> விழைவார், கொலையினை விழையார்; பொய்
> உரையார்; களவினை ஒழுகார்; பிறர்மனை
> உவவார்; மிகு பொருள் உவவார்; வெம்
> சுரையாள் உணர்வினை அழியார்; அழிதசை
> துவ்வார்; விடமென வெவ்வானும்
> புரையார்; நறவினை நுகரார்; இரவுணல்
> புகழார்; குரவரை இகழாரே''

இவையல்லாது இன்னும் பிற ஒழுக்கங்களை இல்லறத்தோர்க் கடைப்பிடிக்க வேண்டுமென மேரு மந்திர புராணச் செய்யுள் (பத்திர மித்திர அறங் கேள்வி சுருக்கம் 133) பின்வருமாறு கூறுகின்றது.

குண விரதங்கள் மூன்று.

1. **திசைவிரதம்** :–எட்டுத் திசைகளிலும் வரையறை செய்து அதற்கப்பால் செல்வதில்லை என்ற விரதம்

2. **அனர்த்ததண்ட விரதம்:–** பிறருக்குத் தீங்கு நினையாமை. அசட்டையினுல் பிராணிகள் இறக்காது காத்தல், கத்தி முதலிய ஊறு விளைவிக்கும் ஆயுதங்கள் வைத்திருப்பதைக் குறைத்தல், தமது செல்வாக்குப் பலத்தால் பிறருக்குத் தீங்கு விளையாது காத்தல்.

3. **போகோப போகப் பரிமாண விரதம்:–** போகப் பொருட்களை வரையறுத்தல். உண்ணும் உணவுப் பொருட்கள், உடுக்கும் உடை, நறுமணப் பொருட்கள், ஊர்திகள், இன்பப் பொருட்கள் –இன்னின்னவற்றைப் பயன்படுத்த மாட்டேன் என விரதம் எடுப்பது.

சிட்சா விரதங்கள் நான்கு

1. **தேசாவதாசிகம்:–** ஒரு திசையில் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் குறித்துஅதற்கு அப்பால் செல்வதில்லை என்று விரதம் எடுத்தல்

2. **சாமாயிக விரதம்:–** குறைந்த அளவு நாற்பத்தெட்டு நிமிடங்களாவது தியானத்தில் அமர்தல். இதனை மூன்று வேளையும் செய்வது சிறப்பு. இவ்வேளைகளில் பாவ காரியங்களை நினைத்தல், பேசுதல் செய்தல் இவற்றைத் தடுக்க வேண்டும்.

3. **புரோஷதோப வாசம்:–** இரவும் பகலும் ஆகிய ஒரு நாள் முழுவதும் உணவு, நீர் அருந்தாது உயர்ந்த ஆடை அணிகலன்கள் அணியாது, இணைவிழைச்சு இல்லாது விரதம் காத்தல், இவ்வாறு மாதத்தில் நான்கு நாட்கள் செய்வது சிறப்பு.

4. **அதிதி சம்விபாக விரதம்** :–சமண முனிவர்கள் இல்லறத தாரிடமிருந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருள்கள் உணவு,

நீர், பழம், கமண்டலம், மருந்து. கம்பளி, உடை, போர்வை ஆசனம் போன்ற பதினன்கு வகையானப் பொருட்களில் எதையாகிலும் கொடுப்பேன் என்று விரதம் எடுத்துக் கொள்ளுதல். இப்பொருட்களில் சிலவற்றை முனிவர்கள் பயன் படுத்தியபின் திருப்பிக் கொடுத்துவிடுவர். இவ்வகையான ஒழுக்கங்களை இல்லறத்தோர் கடைபிடிக்க வேண்டும் என்று சமண சமயம் கூறுகின்றது.

கி. பி. 6ம் நூற்றுண்டில் அரும்பிய சமண சமயம் கி. பி. 3ம் நூற்றுண்டிலே தென்னுடு புகுந்து ஒரு காலத்தில் அது தமிழ் நாட்டில் சீரும் சிறப்பும் பெற்று இருந்தது. ஆனல் கி. பி. 7-ம் நூற்றுண்டில் இச்சமயம் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இந்து சமயத்தில் தோன்றிய பக்தி இயக்கங்கள் அல்லது அன்பு இயக்கங்கள் இதற்கு அ'டிப்படைக் காரணம் எனலாம். ஆழ்வார்கள், நாயன் மார்கள் பக்தி வழிபாட்டின் மூலம் இறைவனை அடையலாம் எனவும் அதற்கு சிறப்பாக இறைவனின் அருள் தேவை எனவும் கூறினர். துறவிகள் ஆயினும் இல்லறத்தார் ஆயினும் பெண் மகளிர் ஆனலும் மோட்சம் அடையலாம் என்றும், அதற்கு பக்தி மட்டுமே தேவை என்றும் கூறினர். மேலும் ஆழ்வார்கள் நாயன் மார்கள் சமண சமயத்தைக் கடிந்துரைத்தலை அவர்களது பாடல் திரட்டிலிருந்து அறியலாம். பிற்காலத்திய தமிழரசர்கள் சைவ வைணவ சமயங்களை ஏற்றுக் கொண்டு சமணர்களை துன்புறுத்தியதையும் நாடு கடத்தியதையும் இப்பாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இதைத்தவிர்த்து புத்த சமயம் சமண சமயம் இவற்றிற்கிடையே இருந்த உட்பூசலும் சமண சமயம் குன்றியதற்கு சிறப்புக் காரணம் எனலாம். சமண சமயம் வலியுறுத்திய கடுமையான விரதங்கள் சாதாரண மக்களினுலும் துறவிகளாலும் கடைப்பிடிக்க முடியாமல் போனதினல் பொய்யும் வஞ்சனையும் சூதும் புரட்டும் அவர்களிடையே மலியத் தொடங்கியது. மனிதனை மையமாகக் கொண்டு எழும்பிய சமண சமயம் எல்லா மனிதர்களும் தங்கள் முயற்சியினுலே இறுதிநிலையை அல்லது நிர்வாண நிலையை அடைய முடியாத இயலாமையை உணர்ந்து கொண்டது. இதனையே இந்து சமயத்தின் பக்தி இயக்கங்களும் சுட்டிக் காட்டியது எனலாம்.

கி. பி. முதல் நூற்றுண்டிலே சமண சமயம் இரு கிளைகளாகப பிரிந்து விட்டது. இவற்றிற்கிடையே மிக சில வேற்றுமைகளே நிலவின.

திகம்பரர்	சுவேதாம்பரர்
1. பாடலிபுரத்துத் திருநூற் திரட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.	1. பாடலிபுரத்துத் திருநூற் திரட்டை ஏற்றுக் கொள்கிறார்கள்.
2. வர்த்தமான மகாவீரர் சமணசமயத்தைத் தோற்றுவித்தார். அவருக்குத் திருமணமாகவில்லை. அவர் அனுஜா என்ற மகவைப் பெற்றெடுக்கவுமில்லை.	2. வர்த்தமான மகாவீரர் தீர்த்தங்கரர்களில் ஒருவர். அவர் திருமணம் செய்து அனுஜா என்ற மகவை ஈன்றெடுத்தார்.
3. பெண் துறவிகள் கடும் தவம் ஆற்ற இயலாததாலும், ஆடை களைந்துத் துறவறம் ஏற்க இயலாததாலும் அவர்கள் ஆண் பிறவி எடுத்துதான் விடுதலை அடைய முடியும்.	3. பெண் துறவிகளும் பெண் மகளிரும் வீடுபேற்றை அடைய முடியும்.
4. முனிவர்கள் உடை உணவு அறவே துறந்து வாழ்வது சிறப்பு. துறவிகள் இரண்டு உடைமைகள் மட்டுமே வைத்திருக்க முடியும். ஒன்று மயில்பீலி இரண்டு தூரிகை.	4. துறவிகள் பதினான்கு உடைமைகள் வைத்திருக்கலாம்.
5. பெண்மக்களுக்கு மோட்சம் இல்லை. அவர்கள் மோட்சம் அடைய விரும்பினால் முதலில் ஆணாகப் பிறந்து துறவு பூண்டு கடுமையாக நோன்பிருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் மோட்சம் அடைவார்கள்.	5. பெண்கள் துறவு பூண்டு மன உறுதியோடு முயல்வார்கள் எனில் மோட்சம் அடைய முடியும்.

சமண சமயம் இறைவனை அனுமானத்தின் மூலமே அடைய முடியும் என்று கூறுவது சிறப்பு. இறைவனுக்கு ஏற்றுக் கூறப்படும் எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர் போன்ற பண்புகளும் சந்தேகத்திற்குரியவை எனக் கூறுகிறது. இறைவனை முழுமையாக ஒருவரும் அறிந்து கொள்ள முடியாது

ஏனெனில் ஒவ்வொருவரும் தன் தன் நிலையிலிருந்தே இறைவனைக் காண்பதால் தன் கோணத்திலிருந்தே இறைவனைச் சித்தரிக்கின்றார் (எடுத்துக் காட்டாக ஒரு மலையைப் பல இடங்களிலிருந்து காண்பவர்கள் அதனைப் பல்வேறு வகையாகச் சித்தரிப்பது போன்று) மீட்புப் பெற்ற அகங்கள் தூய்மை பெற்ற பின் கடவுளாக மதிக்கப்டுகின்றது. ஹாப்கின்ஸ் அவர்கள் கூறுவது போன்று சமண சமயத்தின் சிறப்புக் கருத்து மனிதனைத் தொழுவதே எனலாம்.

BIBLIOGRAPHY:

1) Besant, Annie — Seven Great Religions, pp 83 - 104

2) Ernest Robert Hume — The worlds, living Religions, A Historical Sketch, pp 41 - 58.

3) Gopalan S — Outlines of Jainism (Tamil)

4) Jaising, Herbnt — My Neighbours pp 46 - 55

5) Macnicol, Nicol — The Living Religions of the Indian people pp 175 - 189.

6) Manuel D. Albert (Ed) — Religions of the Indian people pp 166 - 189.

7) Sarma D. S. — Hinduism Through the Ages pp 15 - 18.

8) Washburn, Edward Hopkin — The Religions of India, pp 280-297.

இஸ்லாம்

இஸ்லாம் என்ருல் பணிந்து அடங்குதல் என்று பொருள். இறைவனின் திருச்சித்தத்திற்கு பணிந்து அடங்குதல் இச்சமயத்தின் சிறப்பு. சிலர் இச்சமயத்தை முகமதிய மார்க்கம் என்று குறிப்பிடுவர். அது தவறு என்பார் கென்னக் கிராக். இஸ்லாம் சமயத்தையறிந்துக் கொள்வதற்கு அக்கால சமய பின்னணியை ஆய்வது அவசியம். 13ம் நூற்ருண்டுக்கு முற்பட்ட காலத்தில் அரேபியா வாணிபத்தில் சிறந்து விளங்கிய நாடு. சீரியா, மெஸபத்தோமீயா, பாரசீகம், இந்தியா ஆகிய நாடுகளுடன் அவர்களுக்கு வாணிக தொடர்பு இருந்தது. பல்வேறு நாட்டு மக்களும், வாணிபத்தின் நிமித்தமாக அரேபியாவில் குடியேறி வசித்து வந்தனர். அக்காலத்தில் ரோம, யூத, கிறிஸ்தவ மக்கள் அரேபியாவில் குடியிருந்ததாகக் கூறுவர். ஆகையினுல், இங்கு கலாச்சார கலப்பு இருந்தது. மக்களிடையே பலவகையான வேறு நாட்டு பண்பாடுகள் பழக்கத்திற்கு வந்தது. ஆவி வணக்கமும், பல தெய்வ வணக்கமும் சிறப்பாக மக்களிடையேயிருந்தது. அக்காலத்தில் ஒரே தெய்வக் கொள்கையை உடைய அரேபியர் சிலர் இருந்தனர். அவர்கள் ஹனிஃபுகள் என்றுக் குறிக்கப்பட்டார்கள். இதுவே இஸ்லாம் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்த சமூக சமயப் பின்னணியாகும்.

முகமது நபிகளின் காலம் சற்றேறக் குறைய கி. பி. 570 முதல் 632 வரை என்பர். நபி அவர்களின் இளவயது வரலாற்றைக் குறித்து அதிகமாக அறிந்துக் கொள்ள முடியவில்லையாகினும், அவர் சமயப்பற்று மிக்கவர் என்பதை மட்டும் அறிய முடிகிறது. இவருக்கு, 25 வயதிலேயே 'அமீன்' (உண்மையுள்ளவர்) என்ற பட்டப் பெயர் கிட்டிற்று. வாணிபத் துறையில் அவருக்கிருந்த நாட்டமும், தான் பணிபுரிந்த சீமாட்டியிடம் கொண்டிருந்த உண்மையும், அச்சீமாட்டியையே திருமணம் புரிந்துக் கொள்ள உதவி புரிந்தது. அவர் மணம் புரிந்த கதீஜா என்பவள் அவரைக் காட்டிலும் 15வயது மூத்தவளாய் இருப்பினும் அது ஒரு தடவையாக அமையவில்லை. செல்வ சீமாட்டியை மணந்தமையால் அவருக்கு நிறைய ஓய்வு நேரம்

கிட்டிற்று என்பர். அக்காலத்தில் அவர் தம் நாட்டில் நிலவிய ஒற்றுமைக் குறைவைப் பற்றி சிந்திக்கலானர். இக்காலத்தில் இவருக்கு ஹனிஃபுகளிடம் தொடர்பு இருந்தது. ஓய்வு நேரத்தைக் கழிக்க இவர் ஹிரா என்னும் மலைக்குகைக்கு சென்று வருவது வழக்கம், இவர் 40வயதினராக இருக்கும் பொழுது சமய சமுதாய புனரமைப்புக்கு இறைவன் தன்னையழைத்து அனுப்பியதாக வெளிப்பாடு கிட்டிற்று. முதலில் இதைக் குறித்து இவருக்கு சந்தேகம் ஏற்பட்டிருந்தும், அவரது மனைவியும், அவரது மனைவிக்கு நெருங்கிய உறவினரான வராக்கா என்பாரும் அவரை பலப்படுத்தினர். நபியவர்கள் அக்காலத்தில் நிலவிய பலதெய்வ வழிபாட்டைக் குறித்து கடிந்து பேசிய போது அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது. சிலர் அவரை பித்து பிடித்தவன் என்றும், குறி சொல்லுகிறவன் என்றும், மற்ற சமயங்களில் இருந்து போதனைகளை எடுத்தியம்புகிறார் என்றும் குற்றம் சாட்டினர். ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகட்கு பின்னும் அவரைப் பலர் பின்பற்றினர். இச்சமயத்தில் அவரின் உயிருக்கு ஆபத்து நேரும் என்ற நிலைமை ஏற்பட்டபோது அவர் தாம் வாழ்ந்த மக்காவை விட்டு மதீனாவிற்கு சென்றார். இதனை 'ஹஜிரா' என்பார்கள். இதன் காலம் கி. பி. 672. மதீனாவில் அவருக்கு பெரிய வரவேற்பு இருந்தது. அங்கு அவருக்கு அரசியல் தலைமை ஏற்கும் வாய்ப்பு கிட்டியது. இக்காலத்தில் அவருக்கு பல அரசியல் பற்றிய வெளிப்பாடுகள் கிட்டியது. மதீனாவில் யூத மக்களோடு உடன்படிக்கை செய்து கொண்டு நட்புறவோடு வாழ்ந்தார். தன் மனைவி இறந்துவிட்டமையால் அக்கால நிலைமையையொட்டி அவர் மறுமணங்களைப் புரிந்து கொண்டார். ஆனால் யூத மக்களோடு அவர் கொண்டிருந்த நட்புறவு வெகுகாலம் நீடிக்கவில்லை. யூத மக்கள் முகமது படிப்பறிவில்லாதவர் என சுட்டிக்காட்டி அவரை தீர்க்கதரிசிகள் பட்டியலில் சேர்க்க முடியாது என்றனர். முகமது அவர்களும், யூதர்கள் திருமறையை மூடி மறைத்து விளக்கம் தருகின்றனரென்றும், தொழுகையின் போது எருசலேமை நோக்கியல்ல, மக்காவை நோக்கி தான் திரும்ப வேண்டும் என்று போதித்தார். இதனடிப்படையில் முகமதுவிற்கும் யூதருக்குமிடையே பகைமையுணர்ச்சி பெருகியது. பொருளாதார தட்டுப்பாடு காரணமாக, முகமது படைத்திரட்டி மக்காவின் வணிகர் கூட்டங்களைப் பறிமுதல் செய்தார். மக்காவினர் படைதிரட்டிக் கொண்டு வந்து போர் தொடுத்த போது முகமதுவே வெற்றி பெற்றார். அவ்வாறே யூத மக்களையும்

பானி நாதிர் என்ற மரபினரையும் ஒடுக்கினர். ஆனல் அடுத்த ஆண்டில் மக்கா மக்கள் முகம்மதுவை வெற்றிக் கண்டனர். இது முகமதுவிற்கு பாடமாக அமைந்தது. ஆகையினல் இவர் மறுபடியும் யூத, அரேபிய மரபினரோடு சேர்ந்துக் கொண்டு மதீனவை முற்றுகையிட்டு வெற்றிப் பெற்ருர். கி. பி. 629ல் மத ஆசாரங்களுடன் மக்காவில் புகுந்தார். மதீனவிலிருந்து கொண்டு வந்த ஆறு உறுதிகளை மக்காவில் நிலை நாட்டினர். அவையாவன: ஒரே கடவுளை ஆராதிப்பேன்; களவு செய்ய மாட்டேன் விபசாரம் செய்ய மாட்டேன்; குழந்தைகளைக் கொல்ல மாட்டேன்; பிறரைக் குறித்து தவறுதலாக பொய் சொல்ல மாட்டேன்; தீர்க்கர்களுக்கு கீழ்படிவேன். அக்காலத்தில் காபாகல் சிறப்புப் பெற்றிருந்தமையால் அதனையொட்டி வாணிபம் சிறப்பு பெற்றிருந்ததினலும், காபாகல்லைத் தவிர மற்ற தெய்வ வணக்கங்களை அழித்தார். காபாகல் ஓரிறை வழிபாட்டு சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. காபாகல் பரதீசிலிருந்து வந்தது, அது பாலிலும் வெண்மையாக இருந்தது. ஆதாமின் மக்களுடைய பாவங்கள் அதை கறுப்பாக்கி விட்டது என்றும் கூறப்பட்டது. அருகிலிருந்த ஆலயத்திற்கு பைத்துல்லா (இறைவனின் இல்லம்) என்று பெயர் பெற்றது. இக்காலத்தில் எல்லைப்புறத்திலிருந்த யூத கிறிஸ்தவ மக்களையடக்கி தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தார். ஜிஸியா என்னும் மதவரியை அவர்கள் கட்டும்படி பணித்தார். சிறிது காலம் நோய்வாய்பட்டு தமது அறுபத்து மூன்ருவது வயதில் இயற்கை எய்தினர். இஸ்லாமியர்கள் முகமது நபிதான் கடைசி தீர்க்கர் எனவும் அவருக்குப் பின் குர்ஆன் முத்தரிக்கப்பட்டது எனவும் கூறுவர்.

முகமதுவின் மரணத்திற்குபின், முஸ்லீம்கள் தங்களுக்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கினர். மதீன மக்கள் தங்கள் வட்டாரத்திலிருந்தும், குவாரிஷ் மரபினர் தங்கள் மரபிலிருந்தும், தலைவர் வரவேண்டும் என்றும் விரும்பினர். ஆகையினல், அபூபக்கர், முதல் கலீஃபாவாக நியமிக்கப்பட்டார் இவருக்குப்பிறகு உமாரும், அவருக்குப்பின் உத்மானும் கலிஃபா ஆனர்கள். உத்மான் தம்முடைய உம்மயா வகுப்பினருக்கு பதவிகளை அளித்தமையால் ஹாசீம் மரபினர் அவரை வெறுத்தனர். இதற்கிடையில் கலகம் தோன்றி உத்மான் கொலை செய்யப்பட்டார். மதீன மக்கள் அலீ என்பரை தலைவராக நியமித்தனர். சீரியாவிற்கு தலைவராய்

இருந்த முவாவியா இவரை எதிர்த்து தோல்விகண்டார். அலிக்கு பிறகு ஹசனும், அதற்குப்பிறகு ஹுசயினும் கலிஃபாவானார்கள். இக்கலிஃபாக்களனைவரும் இஸ்லாமிய செல்வாக்கை நிலைநிறுத்த பாடுபட்டார்கள். 1924ல் கலிஃபாக்களின் ஆட்சிமுறை முடிவுற்றது.

I. விசுவாச பிரமாணம்

இஸ்லாமியர்களின் விசுவாசப்பிரமாணம் ஆறு பகுதிகளையுடையது. இதற்கு இமான் என்றுப் பெயர். இதன் சுருக்கத்தை இன்றும் மசூதிகளிலிருந்து ஐந்து முறை ஒலிக்கும். கீழ்கண்ட வாக்கியங்களில் காணலாம்.

லா இல்லா இல்லல்லா
முகமது ரஸூல் உல்லா

இதன் பொருள் அல்லாவைத் தவிர வேறு கடவுளர் இல்லை, (கடவுளுக்கு இணையில்லை, மனைவி மக்களில்லை, கடவுள் அனாதி, எங்கும் நிறைந்தவர்). முகமது அல்லாவின் தூதுவர் என்பது ஆகும்.

1) ஒரே கடவுளில் நம்பிக்கை: இஸ்லாமியர்களின் விசுவாசப் பிரமாணம், 'நான் விசுவாசிக்கிறேன்' என்று இல்லாமல் 'நான் சாட்சி பகறுகிறேன்' என்று துவங்குகிறது. கடவுளின் பண்பை அவருடைய 99 திருநாமங்கள் வெளிப்படுத்துகிறது. இறைவனுடைய தனித்தியங்கும் தன்மையை வெளிப்படுத்தும் திருநாமங்கள்: அல் வஹீத் (நிலையாக இருப்புக் கொள்வர்),ஹமீத்(முதன்மையும் இறுதியுமானவர்), மஜீத் (மகிமைக்கு உரியவர்), இறைவனின் பேராற்றலை வெளிப்படுத்தும் நாமங்கள்: காதீர் (அனைத்தையும இயங்கிட செய்கிறவர்), ரஸாக் (அனைத்தையும் அனைவருக்கும் அருளுபவர்), இதைப் போன்று இறைவனின் அருட் தன்மையையும் கடப்புத்தன்மையையும் குறிக்கும் நாமங்கள் பல உண்டு வாய்மை நெறியை நிறுவுவதற்காக இறைவன் இவ்வுலகைப் படைத்தார்(5: 16-25) ஆணும், பெண்ணுமாக மனித இனம் படைக்கப்பட்டது (36: 30-40); பிறக்கடவுளர்கள் செத்தவை அவற்றிற்கு வாழ்வு கிடையாது (14: 21) போன்றக் கருத்துக்களை காணலாம்

2) தேவ தூதரில் நம்பிக்கை: தேவ தூதர்கள் அறிவிப்பாளராகக் கருதப்பட்டனர். காபிரியேல் தூதன், பரிசுத்த ஆவி, முங்கர், நக்கிர், போன்ற தூதர்கள் சிறப்புப் பெறுகின்றனர்

தூதர்கள் ஒளியினின்றும், ஜின் நெருப்பினின்றும், பேய்கள் புகையினின்றும் உருவாக்கப்பட்டது என்பர்.

3) கடவுளின் தீர்க்கர்களில் நம்பிக்கை: தீர்க்கர்கள் எச்சரிப்பவர்கள். கடவுள் தம்முடைய தூதர்களை பல்வேறு நாடுகளுக்கு பல்வேறு சூழல்களில் அனுப்பிக் கொண்டேயிருக்கிறார். ஆதாம் முதல் முகமது வரை 1, 24, 000, தீர்க்கதரிசிகள் உளர் என இஸ்லாம் நம்புகிறது. குர்ஆன் 28 தீர்க்கர்களை சிறப்பாகக் குறிக்கிறது. ஆதாமை ஸஃபியுல்லா (கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டவர்) என்றும், நோவாவை நஜியுல்லா (கடவுளின் இரட்சிப்பு) என்றும், ஆபிரகாமை கலீலுல்லா (கடவுளின் நண்பர்) என்றும், மோசேயை கலீமுல்லா (கடவுளோடு பேசியவர்) என்றும், இயேசுவை கலிமதுல்லா (கடவுளின் வார்த்தை) என்றும், முகமதுவை ரஸூ உல்லா (கடவுளின் தூதுவர்) என்றும் கூறுவர்.

4) அவருடைய புத்தகத்தில் நம்பிக்கை: தூதர்களின் மூலம் பெற்று தீர்க்கர்கள் எழுதினார்கள். இஸ்லாம் பழைய ஏற்பாட்டு பஞ்சாகமங்கள் (தோரா), சங்கீதங்கள் (ஜபூர்) போன்றவற்றை ஏற்கின்றது. ஒரு ஆற்றல் வெளிப்பட்ட இரவு குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டது என்பர். இந்நூலை, அஷ்ஷிபா (அருமருந்து) என்றும், அந்நூர் (பேரொளி) என்றும், அர் ரஹ்மத் (அருட்கொடை) என்றும், அழைப்பர். இந்நூல் 114 சுராக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மற்ற நூல்களின் கருத்தை குர்ஆன் மேற்கொண்டதாலும் அல்லது மற்ற நூல்களின் கருத்தை குர்ஆன் உள்ளுரையாக அடக்கிக் கூறுவதாலும் மற்ற நூல்கள் சிறப்பிக்கப்படுவதில்லை. குர்ஆனில் பலசமயக் கருத்துக்கள் காணப்படுகின்றது.

5) கடைசி நாளின் நியாயத்தீர்ப்பு: இஸ்லாம் நியாயத்தீர்ப்பின் நாளில் எக்காளம் ஊதப்படும் என்றும், நல்வினை தீவினை குறிக்கப்பட்ட புத்தகம் மேலிருந்து இறங்கி வருமென்றும், அதன்படி அனைவரும் நியாயம் தீர்க்கப்படுவோம் என்றும் குறிப்பிடுகின்றது. பரதீசு (ஜம்மாத்) ஏதேன் தோட்டம் போன்றது. அங்கு எல்லா வசதிகளுமுண்டு இங்கு நேர்மைக்காகப் போராடியவர்கள் இறை வேண்டல் நிரம்பிய வாழ்க்கை வாழ்ந்தோர், அன்புள்ளவர்கள், தருமம் செய்தவர்கள், அல்லாவுடன் வாழ்வார்கள். நரகம் ஜாஹன்னன் என்றுக் குறிக்கப்படுகிறது. ஏழு நரகங்கள்

உள. முதல் நரகத்தில் முஸ்லீம்கள் குறிக்கப்பட்ட காலம் இருக்க வேண்டும் இரண்டாவது நரகம் கிறிஸ்தவர்களுக்கும், மூன்ருவது நரகம் யூதருக்கும், நான்காவது நரகம் நட்சத்திரவழிபாடு செய்யும் சபியர்களுக்கும், ஐந்தாவது நரகம் மாகியருக்கும், ஆருவது நரகம் உருவ வழிபாடு செய்பவர்களுக்கும், ஏழாவது நரகம் மாய்மாலம் செய்பவர்களுக்கும் உரியது.

6) முன்னியமம் பற்றிய நம்பிக்கை: நன்மையும் தீமையும் கடவுளால் முன்னியமம் பெற்று நடைபெறுகிறது. அல்லா ஒவ்வொரு உயிருக்கும் முன் குறித்து இருக்கின்ருர். ஆகையால் விண்ணுலக, மண்ணுலக உயிர்கள் விருப்பம் இருப்பினும் இல்லாவிடினும் அல்லாவைத் தான் வாழ்த்தி வழிபட வேண்டும் (13,14)

II ஐந்து தூண்கள்

இஸ்லாமிய மத ஒழுக்கம் ஐந்து தூண்களையுடையது. (அர்காம் - உல் - தின்). அவையாவன:

1) **சாட்சியிடுதல்** அல்லது **கலீமாவைக் கூறுதல்** (தஷ்ஷாஹீத்) உண்மையாகவும், பிழையற உணர்ந்தும், 'அல்லாவே அதிதூயர், அவரே எல்லா புகழுக்கும் உரியவர், வணக்கத்திற்குமுரியவர், ஆகையால் அவரிடம் காவல் தேடுகின்றேன், என்று சான்று பகர வேண்டும். இதனை தய்யிபு, ஷஹாத், தம்ஜ்து, தவ்ஹீது, ரத்தல் குஃபர், என்றுக் குறிப்பர்.

2) **நமாஸ்:** ஒவ்வொரு முகமதியனும் ஒரு நாளைக்கு ஐந்து முறை இறைவேண்டுதல் செய்யும் படியாக அழைக்கப்படுகின்றனர். இறைவேண்டுதலில் பெரும் பகுதி அல்லாவின் துதியாலும் குர்ஆன் பகுதிகளாலும் நிறைந்துள்ளது. இது பல பகுதிகளையுடையது. முதலாவதாக பாங்கொலி கொடுக்கப்படும் இதனை 'அதான்' என்பர். இதனை யொட்டி முகமதியர்கள் ஆலயத்திற்கு சென்று தங்கள் உடலின் பாகங்களைக் கழுவுவார். இதனை 'ஒலுவு' என்பர். இதற்குபின் தொழுபவர் பல வகையான நிலைகளை கடைபிடிப்பர், இதனை ரக்காத் என்பர். இதற்குபின் அருளுரை (குத்பா) தியானம் (திக்ர்) உண்டு.

3) **நோன்பு:** (ரோஸா) ரம்சான் மாதத்தில் ஆசரிக்கப்பட வேண்டியது. சூரியன் எழும் நேரத்திலிருந்து பொழுது சாயும்

நேரம் வரை ஒரு நாளாகக் கொள்வர். கர்பிணிகள் நோயாளிகள், மாதவிலக்கானவர்கள் மூடர்கள் இந்த உபவாசத்தை அனுசரிக்க வேண்டியதில்லை.

4. ஜக்காத்:-(ஐயமிடுதல்)முஸ்லீம்கள் தங்கள் வருவாயில் ஒரு பகுதியைக் கண்டிப்பாக தருமமாக கொடுக்க வேண்டும். இது அவர்களின் சகோதரத்துவத்தை விளக்குகிறது. நிலத்தின் விளைச்சலில் பத்தில் ஒரு பகுதியோ, வெள்ளியும் பொன்னும் வைத்திருப்பின் நாற்பதில் ஒரு பகுதியோ செலுத்தவேண்டும் வரிசெலுத்தும் முஸ்லீம் அல்லாதோர் பணக்காரர்கள், உறவினர்கள், கணவன் மனைவி, பணியாள் இவர்களுக்கு ஜக்காத் செலுத்தப் படக்கூடாது.

5. புனிதயாத்திரை (ஹஜ்) ;—முஸ்லீம்கள் புனிதயாத்திரையாக மக்காவிற்கு செல்வது ஒரு கடமை. இதன்மூலம் முஸ்லீம்கள் தங்கள் ஒருமைப்பாட்டை நிலைநாட்டிக் கொள்கின்றனர். மக்காவிற்கு செல்லும் ஒருவரின் மூலம் அந்தக் குடும்பம் முழுவதுமே அப்பயனை யடைகின்றனர். என்றக் கருத்தும் உண்டு.

III அடித்தளம்

இஸ்லாத்தின் அடித்தளம் நான்கு. அவையாவன;

1. **குர் ஆன்:**

2. **ஹடீத்:** (பாரம்பரியம்): இது முகமது நபியின் பாரம்பரியம் பற்றியது. முகமது நபியின் நண்பர்கள் இதனை தொகுக்க துனை செய்தனர்

3. **குவ்வியா:** இஸ்லாமியச் சட்டங்கள்

4. **இஜ்மா :** திருக்குர்ஆனிலும் பாரம்பரியத்திலும் சொல்லப் பட்டவை இக்கால வாழ்க்கைக்கு. பொருந்தாமல் இருக்கலாம் மேற்கோளாக, குடிப்பது தவறு என்று குர்ஆன் போதிக்கின்றது. தற்கால முகமதியர் ஒருவர் பிராந்தி குடிப்பது தவறா? அல்லது திராட்சைரசம் குடிப்பதுதவறா? என்ற வினவை எழுப்பலாம். இதற்கு விடையளிக்க குர்ஆனில் உள்நோக்கத்திலிருந்து விவாதிப்பது அவசியம். இதனையே இஜ்மா என்று குறிப்பிட்டனர்,

இஸ்லாமியர்களுக்கு குர்ஆனே அடிப்படை ஆதாரம் மற்றவை இரண்டாந்தர ஆதாரம். ஆகையினல் மற்றவை

கூறும் கருத்துக்கள் குர்ஆனிலிருந்து வேறுபட வேண்டுமானுல் குர்ஆனே முடிவான விடையளிக்கவல்லது.

IV கிளைச்சமயங்கள்

இஸ்லாத்தின் தலைமைப் பதவி வகிக்கும் படியாக அலியும், மூவாவியும், போரிட்ட நேரத்தில் அலியின் போக்கைக் கண்டித்தவர்கள் 'காரிஜ்கள்' எனப்பட்டனர். இவர்கள் தலைமை பதவி தகுதியும் திறமையும் வாய்ந்தவருக்கே வழங்கப்பட வேண்டுமென்றும் அது குடும்ப வழி முறையாய் வருவதன்று என்றும்கூறிஞர்கள். இவர்களுக்கு எதிரான கொள்கையையுடையவர்கள் மூர்ஜிகள். இவர்கள் ஆளும் கலீஃபாவிற்கு அடங்கி நடக்க வேண்டுமென்றும், சிறந்த தலைமை வரும்வரை காத்து இருக்கவேண்டுமென்ற கொள்கையையுடையவர்கள். இவர்கள் உமாரின் ஆட்சி காலத்தில் சிறப்புப் பெற்றனர், கதரிகள் என்போர் மனித சுயாதீனத்தையும் பொறுப்பையும், வலியுறுத்தினர். ஜபாரிகள் இறைவனுக்கே முழுவல்லமை உண்டு என்றும் அனைத்தையும் ஆண்டு நடத்துகின்றவர் அவரே என்றும் கூறினர். முதாஸிலிகள் தங்களை 'ஒருமையும் நீதியும் கூறும் மக்கள்' என்றுக் கூறிக் கொண்டனர். குர்ஆன் நித்தியமானது அல்ல நித்தியமானது எனின், கடவுளின ஒருமை சிறப்புக் குலையும் என்பது இவர்களது வாதம். குர்ஆன் ஒரு படைப்புப்பொருள். கடவுள் நீதியுள்ளவர், மனிதன் சுயபொறுப்புள்ளவன், என்று வலியுறுத்தினர்.

ஷீயாக்கள்: முதலில் அரசியல் கட்சியினராக இருந்து பின்பு கிளைச்சமயமாகி விட்டனர். கிறிஸ்தவ சமயம், யூதசமயம், செரதுஸ்திரிய சமயக் கருத்துக்கள் இவ்வியக்கத்தில் காணப்படுகின்றது. மதத்தலைமை நபிகளிடமிருந்து அலி வழியாக இமாம்களுக்கு கிடைத்தது என்பர். பன்னிரண்டு இமாம்கள் மறைந்த பின்பு, அவர்கள் தம்மதிகாரத்தை, இறையியல் வல்லுநர்களுக்கு (முஜ்தாஹத்கள்) வழங்கினர் என்பர். இவர்கள் இமாம்களின் பிரதிநிதிகள், தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள், பாவக்கறை அற்றவர்கள் எனக்கருதப்பட்டனர். தலைமைப் பதவிக் காரணமாக இக்கிளைச்சமயம் பல உட்கிளையாகப் பிரிந்தது. ஸுன்னி இய்க்கத்தினர் இஜ்மா என்ற பாரம்பரிய பகுதியை ஏற்றுக் கொள்வர் அலியும் அவர் வழி வந்தவர்கள் போற்றும் நெறியும், முகமது உலகத்திற்கு தோன்றுமுன்பே கடவுளுடன் ஒளியாக இருந்து

வந்தார் என்ற கொள்கையையும், முகமதுவும் பிற நபிகளும் பாவக்கறை அற்றவர்கள் என்றக் கருத்தும் ஸுன்னி, ஷியா, இவர்களுக்கு பொதுவானவைகளாகும்.

ஸுஃபிகள் இயக்கத்தை தோற்றுவித்தவர் அல்ஹசன் என்பவர் ஸுஃபி என்றால் கம்பளி என்றுப் பொருள். இவர்கள் துறவு நிலையை சிறப்பித்தனர். எளிய வாழ்க்கை முறைமையை ஏற்றனர். ஆராய்ச்சிக் காலத்தில் பலர் பக்தி நெறியை தழுவினர். பரவச நிலையைச் சிறப்புப் படுத்தினர். இவர்களில்மன்ஸுர் என்பார் பக்தி நெறிக்கு இயேசுவை வழிகாட்டியாக கொண்டார், இவர்கள் நிலை பேறு அடைந்த காலம் பத்தாம் நூற்றாண்டு எனலாம். இக்காலத்தில் அல் – கஸாலி என்பவர் சிறப்புப் பெற்றவர். இவர் உண்மைக்கு அளவு கோலாக நக்கல் (வழங்கப்படுவதை அப்படியே ஏற்றுக் கொள்வது) அக்கல் (அறிவின்துணை) கஷ்ர் (ஆன்மீக ஞானம்) இவற்றை வலியுறுத்தினர். இறைவனின் திருநாமத்தை அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நெறி என்றியம்பினர். ஸுஃபி இயக்கத்தின் உச்ச நிலை மௌனம்.

இந்திய இஸ்லாத்தில் சிறப்புப் பெற்றது அகமதிய இயக்கம். இவர்கள் இஸ்லாமின் நெறிகளை புது உலகிற்கு ஏற்ற முறையில் எடுத்தியம்பினர். இவ்வியக்கத்தைத் தோற்று வித்தவர் குலாம் அகமத் மிர்ஸா என்பவர். இவர் தன்னை இமாம் என்றும் மேசியா என்றும், பத்தாவது அவதாரம் என்றும் கூறிக் கொண்டார். இவர் இயேசு சிலுவையில் மரணமடையவில்லை, சீடர்களின் மூலம் குணமடைந்து பின்பு காஷ்மீரத்தில்தான் இறந்தார் என்றக் கொள்கையை ஏற்றார்.

இவர் 1908ல் மரணமடைந்தார். இவருக்குப்பின் மிர்ஸாவை நபியாக ஏற்றவர்கள் கதியானிகளென்றும் அப்படி ஏற்காதவர்கள் லாஹீரிகளென்றும் அழைக்கப்பட்டனர்.

BIBLIOGRAPHY

1. Abdul Latif Syed — Towards a Reorientation of Islamic Thought.
2. Ali Adullah Yusuf — The mesage of Islam
3. ,, Fundamentals of Islam.

4. Alfred Guillaume — Islam

5. Alfred Guillaume — The Life of the Mohamed

6. Alfred Manuel (Ed) — Religion of the Indian people pp. 69 - 121. (Tamil)

7. Bevan James — The people of the Mosque.

8. Dayanandan Francis — Two Great Religion p. p. 1 - 72 (Tamil)

9. Sell E. — The Faith of Islam studies in Islam.

10. Smith W. Cantwell — Modern Islam in India.

11. Zwemer S. M — Studies in popular Islam.

12. ,, The muslem Christ

13. ,, The muslam Doctrine of God

சீக்கிய சமயம்

பின்ணனி:- சீக்கிய சமயம் உருவாவதற்கு பின்ணணியாக அமைந்தது முகமதியர்களின் படையெடுப்பினுல் பாதிக்கப்பட்ட இந்தியா. இஸ்லாம் ஸூஃபிஸம் என்ற இணை உணர்வு நிலையை சிறப்பித்தது. சற்றேறக் குறைய கி. பி. 12 ம் நூற்ருண்டில் ஜெய்தேவ் அவர்கள் வெளிப்படையான சடங்குகள் ஆசரிப்புக் இவற்றை எதிர்த்தார். கி. பி. 14ம் நூற்ருண்டில் ராமானந்தர் என்ற வைணவர் குலபாகுபாடுகளை எதிர்த்தார். பக்தி வழி பாட்டினை சிறப்பித்தார். இவர் வடஇந்திய பக்தி பாரம்பரிய இயக்கங்களுக்கு அடிகோலின. இச்சூழலில் தான் சீக்கிய சமயம் தோன்றியது.

சீக்கியர் யார்? என்ற வினுவிற்கு பலவகையான விடைகள் கொடுக்கப்படுகின்றன. கி. மு. 1500க்கு முன் இந்தியாவிற்கு வந்து வடமேற்குப் பகுதியில் குடியேறிய ஆரிய குலத்தினர் இவர் என்பர். ஆரிய, சத்திரிய மரபினர் என்பர் சிலர். சத்திரிய வகுப்பி லிருந்து தோன்றிய கட்ரி வகுப்பினர் என்பர் சிலர். சீக்கியரில் ஒரு சிலர் ராஜபுத்திர வழி வந்த ஜாட் இனத்தைச் சார்ந்தவர் என்பர்.

சீக்கிய சமயம் உருவாக அடிகோலியவர் கபீர் அவர்கள். சீக்கிய சமயத்தை தோற்றுவித்த குருநானக் அவர்களின் குரு. கபீர் அவர்கள் இந்து சமய, இஸ்லாம் சமயக் கருத்துக்களை இணைத்துப் போதித்தார். இவரின் போதனைகள் குருநானக் அவர் களை சிந்திக்க வைத்தது எனலாம். பத்து குருக்களின் போதனை களின் தொகுப்பே சீக்கிய சமயத்தின் போதனையாக விளங்கு கிறது.

II குருக்கள்

1 **குரு நானக் (1469-1539):** தென் லாகூரில் தால்வந்தி என்ற இடத்தில் ஷிவ்ராம், திரிப்தா என்பாருக்குப் பிறந்தார் இவர் எளிய வாழ்வும் மதப்பற்றும் உடையவர். 19வது வயதில் சுலக்காநி என்பவரை மணந்தார்.30வது வயதில் மனைவியையும் இரண்டு புதல்வர்களையும் விட்டு துறவறம் பூண்டார். இந்து,முஸ்லீம்,பார்சி,

யூதர், கிறிஸ்தவர், இவர்களோடு கலந்து உரையாடினர். 'சத்நாம்' என்ற மெய்கடவுளின் நாமத்தை விசுவாசித்து உச்சரிக்க வேண்டும் என்று போதனை செய்தார். கடைசி நாட்களில் கார்ட் டார்பூரில் தங்கியிருந்தார். இவர் மரித்த பின் இவர் உடலை அடக்கம் செய்வதா அல்லது எரிப்பதா என்ற விவாதம் நிகழ்ந்ததாகவும், மறுநாள் அவ்வுடல் எவரும் அதிசயிக்கும்படி மறைந்து போனதாகவும் கூறுவர். இவரது சுயசரிதை நூல் ஜனம் சக்கிஸ் எனப்படும்.

இவருடைய போதனைகளின் தொகுப்பு ஜப்ஜி அல்லது ஜப்ஜிசாஹிப் என்ற நூலில் தெளிவாகக் கூறப்படுகிறது. இந் நூலில் 38 பாடல்கள் உள்ளன. இவர் மூட பழக்க வழக்கங் களை வெறுத்தார். கடவுள் மேல் பற்று, மன்னிப்பு, நேர்மையான வாழ்வு, தூய்மையான பக்தியின் அவசியத்தை போதித்தார். குருவே கடவுளையும் மனிதனையும் இணைப்பவர் என்றுக் கருதி னர். குலப்பாகுபாடு, விக்ரக வணக்கம், புண்ணிய ஸ்தலங் களுக்கு யாத்திரை செய்தல் இவற்றை வெறுத்து ஒதுக்கினர். சத்நாம் என்னும் மெய்க்கடவுளின் நாமத்திற்கு கீழ்படிந்து நடக்க வேண்டும் என்றுக் கூறினர். துறவு வாழ்வினல் பய னில்லை, இல்லற வாழ்விலும் கடவுளின் நாமத்தை உச்சரித்து இரட்சிப்பு அடைவது மனிதனின் நோக்கமாய் இருக்கவேண்டு மென்றுக் கருதினர். இவருடைய போதனைகள் சில :

'ஒரே கடவுள், அவர் உண்மையுள்ளவர், பயமும் குரோ தமும் இல்லாதவர், அழியாதவர், பிறவாதவர், தன்னில் நிலைத் திருப்பவர், மெய்ப் பொருளானவர், ஆதி முதல் இருப்பவர், அவரே இன்றும் என்றும் நிலைத்திருப்பவர், மனிதர் கடவுளின் கிருபையால் இரட்சிக்கப்பட்டு, மறுபிறப்படைந்து, ஆனந்தத்தின் இருப்பிடமாகிய அவரோடு ஐக்கியமானவர்கள்'. 'இந்து என்பா ரும் இல்லை, முகமதியன் என்பாரும் இல்லை'. 'சமயம் வெறும் வார்த்தைகளில் இல்லை'. 'எல்லா மனிதர்களையும் சமமாக பாவிப் பவனே சமய சார்புடையவன்'.

உ. குரு அங்கத் (1504 - 1552)

இவர் பஞ்சாப் மாவட்டத்தில் மெட்டடிசரி என்ற கிராமத் தில் ஃபெரி என்ற வணிகனுக்கும் ராமோ என்ற பெண்மணிக்

கும் கி.மு. 1504ல் பிறந்தார். குழந்தைப் பருவத்தில் இவர் லாஹூனு என்று அழைக்கப்பட்டார். லாஹானு ஹிவி என்றப் பெண்ணை தக்கப் பருவத்தில் மணம் புரிந்தார். அவருக்கு ஆம்யோ என்ற மகளும் டாசு, டாட்டோ என்ற இரண்டு மகன்களும் இருந்தார்கள். மொஹலாய அரசியின் கொடுமையினுல் லாஹானு குடும்பத்தார் காடூர் என்னும் சீக்கிய நகரத்திற்கு சென்று வாழ்ந்தனர். அங்கு அவர்கள் ஏற்கனவே துர்க்காவை வணங்குவதற்கு வருடத்திற்கு ஒரு முறை யாத்திரை செய்வது வழக்கம். காதூரில் ஜோத்தா என்ற சீக்கியர் வாழ்ந்தார். அவர் காலையில் எழுந்ததும் பாட்டுப்பாடி இறைவனே வழிப்படுவது வழக்கம்.

இப்பாடலினுல் கவாப்பட்ட லஹானு அவரிடம் சென்று அப்பாடலே பாடியவர் குருநானக் என்பதை அறிந்தார். அப்பாடலினுல் தான் அடைந்த சமாதானத்தினுல் மகிழ்ச்சியடைந்தார். பின்பு லஹானு குரு நானக்கிடம் சென்று அவருக்குப் பல உதவிகள் புரிந்து அவரிடம் மூன்று வருடங்கள் தங்கியிருந்து ஆன்மீக வளர்ச்சிப் பெற்ருர். குரு நானக் இவருடைய முதிர்ச்சியைக் கண்டு இவரை அங்கத் என்று அழைக்கலானுர். குருநானக்கின் காலத்திற்குப் பின் இவர் இரண்டாவது குருவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குருநானக் நிறுவியுள்ள சீக்கிய பொது மடப் பள்ளியை மக்கள் யாவருக்கும் பொது வானதாக மாற்றி பல மதத்தினரும், பல இனத்தவரும், ஐக்கியப்பட்டு உணவு உண்ணும் வாய்ப்பை அளித்தார். முன்னமே பேச்சுப் பழக்கத்திலிருந்த 'குருமுக்கி' என்னும் சீக்கிய மொழிக்கு எழுத்துக்கள் கண்டுபிடித்து, நெடுங்கணக்கு நாலொன்று அமைத்தார். இதனுல் சீக்கியருக்குத் தனி மொழி உண்டு என்று எவருக்கும் எடுத்துக் காட்டினுர். பக்திப்படல்களே இலகுவாக எழுதவும், பாடவும் இம்மொழி அவசியமென்று நிருபித்தார். குருநானக் அவர்களின் போதனேகளைச் சேகரித்தார். குரு அங்கத் 1552ம் ஆண்டு உயிர் நீத்தார்.

3. குரு அமர்தாஸ் (1479 - 1574)

இவர் தனது எழுபத்துமூன்ருவது வயதில் குருவானுர். சதீ என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். சீக்கியர்களே இருபத்திரெண்டு சபை

களாக பிரித்து, தலைவர்களை நியமித்தார். கோயிந்த்வால் என்ற இடத்தில் பவோலி என்ற கிணறெடுத்து புண்ணியஸ்தலம் ஆக்கினார். சீக்கிய திருச்சபைகளை நிறுவினார். சீக்கிய திருமுறைப்படி திருமணச் சடங்குகள் அமைத்தார். திருவிழாக்கள் கொண்டாட ஏற்பாடு செய்தார். இவர் 1574ம் ஆண்டு இறந்தார்.

4. குரு இராம் தாஸ் (1534 - 1581)

லாகூரின் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்த ஹரிதாஸ், அனுப் தேவி தம்பதியருக்குப் பிறந்தவர். இவர் வளரும் போதே தூயவர்களுடன் பழகி தன் பெற்றோர்கள் தனக்குக் கொடுப்பதையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து வந்தார். இவரிடம் உதவி பெற்ற சில துறவிகள் இவரை குரு அமர்தாஸிடத்தில் அழைத்து சென்றார்கள். அங்கு அவருடன் தங்கியிருந்து பொறுமையுடன் பணிபுரிந்தார். அமர்தாஸின் இரண்டாம் புதல்வி பீபிமானிக்கும் இவருக்கும் திருமணம் நடந்தது. கணவனும், மனைவியும் இருவரும் பவோலி துறவு அமைக்க சேவை புரிந்தனர். குரு அமர்தாஸின் சார்பாக அரசர் அக்பரிடம் புகார் செய்த இந்து சமய மக்களின் குற்றச் சாட்டுகளுக்கு பதிலளித்தார்.

அக்பரிடமிருந்து நிலம் பெற்று இராம்தாஸ்பூர் என்ற அழகிய நகரை நிர்மானித்தார். அதுவே பின்னர் அம்ரிட்சார் எனப் பெயர் பெற்றது. மீட்புப் பெறுவதற்கு பெருமையை ஒழித்து தாழ்மையை தரித்து பொல்லாங்கு உரைக்காமல் தீய ஒழுக்கததை விட்டொழியுங்கள் என்றார். இவருடைய காலத்தில் தான் குருபதவி பரம்பரையாக ஒரு குடும்பத்திற்குரியது ஆயிற்று. தன்னுடைய மூன்றாவது குமாரன் அர்ஜன் என்பாரை குருவாக நியமித்தார்.

5. குரு அர்ஜன்: (1563-1606)

அம்ரிட்சாரில் பொற்கோவிலொன்றைக் கட்டினார். தார்ன் - தாரன் என்னுமிடத்தில் குருதுவாரம் ஒன்றை 1590ல் கட்டினார். ஆதிகிரந் என்னும் சீக்கிய வேத நூலைத் திரட்டினார். சீக்கியரிடம் வரி வசூலித்து பொற்கோவிலை சேர்த்து வைத்தார். தனது முயற்சியால் அக்பரின் தீன் இலாஹி என்னும் சமயத்தை மக்கள் தழுவாது பாதுகாத்தார். ஜஹாங்கீர் மகன் குஸ்ரு இவரை சிறையிலிட்டுத் துன்புறுத்தினன். அவ்வமயம் அவருக்கு நீண்ட நாள்

கழித்துப் பிறந்த மகன் ஹார் கோபிந்தை அழைத்து ஆயுதம் தரித்தவனாக இருக்கக் கட்டளையிட்டு மரணம் அடைந்தார்.

6. குரு ஹார் கோபிந்த்: (1606-1645)

தனது பத்தாவது வயதில் குரு பதவியை ஏற்றார். தந்தையின் கட்டளைப்படி படை ஒன்றை நிறுவினார். ஜஹாங்கீர் மன்னன் இவருடைய அறிவுத்தன்மையை அறிந்து இவருக்கு மதிப்பளித்தான். ஆனால் ஷாஜஹான் காலத்தின், சீக்கிய முஸ்லீம் விரோத மனப்பாங்கு அதிகமாயிற்று. ஆனால் இவர் நிறுவிய போர்ப்படை சீக்கியர் தங்களை காத்துக் கொள்ள உதவியது. தமது தந்தை அம்ரிட்சாரில் துவங்கி வைத்த அகால் தாஹ்ட் ஆலயத்தை கட்டி முடித்தார் – தனது பெயரால் நகரொன்றையும் நிறுவினார்.

7. குரு ஹார் ராய்: (1630-1661)

தமது பதினான்காவது வயதில் குரு பதவியை அடைந்தார் ஔரங்கசீப் அரசப் பதவிக்குப் போட்டியிட்ட போது, தாரா என்னும் அவரது மூத்த குமாரனுக்கு உதவி செய்து தோல்வி கண்டார். இதனால் ஔரங்கசீப் இவரை பகைவராகவே கருதினார். இவரது காலத்தில் முகமதிய சீக்கிய விரோதம் மேலும் அதிகமாயிற்று.

8. குரு ஹார் கிஷான்:(1661-1664)

ஔரங்கசீப் ஆதிகிரந்தின் ஒரு பகுதியான வார் அசா என்பதற்கு விளக்கம் கேட்க, முசல்மான் என்ற வார்த்தையை நீக்கி, பி– இமான் (நம்பிக்கையற்றவன்) என்று திரித்துக் கூறியதால் குரு இராம்இராய் என்பாரை அவரது தந்தை குருஹார் ராய் சமயத்திற்குப் புறம்பானவர் என்று தள்ளி விட்டார். ஆனால் ஔரங்கசீப்பினிடத்தில் நிலம் பெற்று குருதுவாரம் அமைத்து, இவருடன், சீக்கிய திரிபுக் கொள்கையினர் குடியேறினர். ஆகையினால் 8வது குருவாக ஹார்கிஷான் என்பாரே சிறப்புப் பெற்றார். இவர் மிகக் குறுகிய காலமே குருவாக இருந்தார்.

9. குருதேஜ் பகதூர் (1621-1675)

இவர் ஹார் கோபிந்தின் இளைய மகன் தமது 44ஆம் வயதில் குருவாக மாறினார். 12 வருடங்கள் பணியாற்றி இரத்த

சாட்சியாக மரித்தார். அனந்தப்பூரைச் சுற்றிலும் பலத்த அரணும், மதிலும் அமைத்தார். சீக்கிய சமயத்தை இந்து சமயத்தோடு ஒட்பிட்டுப் பேசினர். சிறப்பாக ஹரியும் சதநாமும் ஒன்று என்று போதித்தார். ஹரியே தூயபிரம்மன், நாராயணன், இராமன் என்றும் உலகத்தில் உள்ள துன்பத்தையும் பயத்தையும் போக்கி எமனை வெல்ல கடவுளின் அருளால் சீக்கிய குருவாக வந்தார் என்று போதித்தார்.

10. குரு கோபிந்த் சிங் (1675-1708)

இவர் காலத்தில் சீக்கியர்கள் ஒன்று பட்டனர். தனது 15வது வயதில் பதவி ஏற்ருர். இவரது மனைவி ஜிட்டா அம்மையார் இவருக்கு உற்ற துணையாகவும் பெண்களுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கினர். அனந்தபூரில் சீக்கிய நீதிமன்றம் ஒன்றை நிறுவினர். இந்திய கவிஞர்களை நியமித்து புராணக்கதைகளை இந்தியில் மொழி பெயர்த்தார் பெருவெள்ளத்தின் போது அடித்து செல்லப்பட்டு மிகுதியானவர்களை 'தசம் கிரந்த்' என்னும் வேத நூலில் சேர்த்து வைத்தார். கால்சா என்னும் ஒரு குழுவை நிறுவினர். இக்குழுவினர் பல்வேறு குலத்தைச் சார்ந்தவர்கள் இவர்களனைவரும் ஒரே சமயத்தில் தீட்சைப் பெற்றனர். திரு. D. இபட்சன் என்பார் கீழ் கண்டவற்றை கால்சா குழுவினருக்கு குரு நியமித்ததாகக் கூறுவார்.

1. ஐந்து விசுவாசிகளினுல் தண்ணீர் தெளிக்கப் பட்டிருக்க வேண்டும்.

2. குருநானக் அவர்களையும் அவர்களது வழிதோன்றல்களையும் மதிக்கவேண்டும்.

3. "குருவே வாழ்க" என்பது அவர்களது முக்கிய வார்த்தையாக இருக்க வேண்டும். குருவிற்குப் பதிலாக அவர்களுக்குக் கிடைத்துள்ள கிரந்த் என்னும் வேதநூலை வணங்க வேண்டும்.

4. அமிர்தசரத்திலுள்ள குளத்தில் அவர்கள் அடிக்கடி நீராட வேண்டும்.

5. படைக்கலங்கள் வைத்திருக்க வேண்டும். அவர்களைப் போர் செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

'கால்சா' என்ற சொல் தூய்மை என்று பொருள்ப்படும். கால்சா குழுவினர் பிறர் தங்களை அறிந்துகொள்ளும் வகையில் ஐந்துபொருட்களை வைத்துக் கொள்ளவேண்டும். அவையாவன

1. கேஷ்—தலை முடியை வெட்டாமலும், சிரைக்காமலும் ஒன்று சேர்த்துக்கட்டி உச்சந் தலையில் முடிக்க வேண்டும் (தலைமுடி)

2. கங்கா— அந்தத் தலைமுடியின் மேல் மரச்சீப்பு ஒன்று குத்திவைக்க வேண்டும். (சீப்பு)

3. காரா — இரும்புக்காப்பு ஒன்று இடது கையில் அணிய வேண்டும். (காப்பு)

4. காக்—அரையில் நிஜார் தரித்து எப்போதும் இடுப்பை மூடியிருக்க வேண்டும். (நிஜார்—அரைக்காற்சட்டை)

5. கிர்பான் — இருபுறமும் கருக்குள்ள சிறுகத்தி ஒன்றினைக் கயிற்றில் கட்டித் தோளில் தொங்கவிடவேண்டும். (கத்தி)

ஆதிகிரந்த்தை முற்றிலும் முடிவடைந்த வேத நூலாக மாற்றினார். இவர் ஹைதராபாத்தில் பகைவரால் குத்திக்கொலை செய்யப்பட்டபோது ஆதிகிரந் வேதநூலே இனிசீக்கிய குருவாகும், சீக்கியருக்கு இனி அதுவே வழிகாட்டி என்றுக் கூறிஉயிர்நீத்தார்.

III சீக்கியர்களின் திருமறை

(i) **ஆதிகிரந்த்:** இது ஒரு தொகுப்பு நூல். இது நான்கு பகுதிகளாக தொகுக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது: காலை மாலை பிரார்த்தனைக்கும் வழிபாட்டிற்கும், திருமண வைபவங்களுக்கும் மற்றும் பலமுக்கிய காரியங்களுக்கும் வேண்டிய பாக்கள்.

இரண்டாவது பகுதி: ஜப்ஜி சீக்கிய மதப்போதனைகளின் சுருக்கம் என அழைக்கப்படும். ஒவ்வொரு சீக்கியரும், தினம் காலையும் மாலையும் ஜப்ஜியின் பாகங்களைப் படித்து மனதில் நன்கு பதித்துக் கொள்ளல் வேண்டும்.

மூன்றாவது பாகம், இராகங்கள் என வழங்கப்படும் ஸ்ரீ ராகம், மஜ்ராகம், கௌரி ராகம், ஆசா ராகம், எனப்படும், நால்வகையான இராகங்களுக்கு ஏற்றப்படி பாக்களை பாட வேண்டும்.

நான்காவது பகுதியில் சிறு நூல்கள் அடங்கியுள்ளன. அவை மொத்தம் இருபத்தாறு ஆகும். அவை மேலே கூறப்பட்ட இராகங்களின் திருத்தம் அல்லது திரிபு என்றுக் கூறப்படும். இராகங்கள் ஆசிரியருக்கு ஏற்பவும் இராகத்திற்கேற்பவும் தொகுக் கப்பட்டுள்ளன. முதல் பாகம் முதற்குருவே இயற்றியுள்ளதாத லின், மாகாலா I என்றழைக்கப்படும். அதை அடுத்து வரும் இரா கங்களும் மாகாலா என்றே அழைக்கப்படும். ஒவ்வொரு மாகா லாவும் கடைசி வரியில் குரு நானக்கின் பெயரோடு பொருந்தி முடிகின்றது. ஒரு விளக்கிலிருந்து ஏனைய விளக்குகளை கொளுத்து வது போல் குரு நானக் என்னும் சுடரொளி விளக்கிலிருந்து கொளுத்தப் பட்ட விளக்குகளே ஏனைய குருக்கள்.

ஆகவே இராகமும், செய்யுள் நடையும், இப்பாக்களுக்கு ஏற்ப அமையாவிடின் அவை பயன் அற்றவை என்று தள்ளப் படும்.

ஆதி கிரந்த் இரண்டு பதிப்புக்களை கொண்டதாகும். ஒன்று குரு அர்ஜுனால் தொகுக்கப்பட்டது. இத்தொகுதி கார்ட் டார்பூரில் இன்றும் இருப்பதாகக் கூறுகின்றனர். மற்றொன்று குரு கோவிந்த் தொகுத்தது. இத்தொகுதியில் தேஜ் பகதூரின் பாக்களும், தாம் இயற்றிய பாக்களும் இடம் பெற்றுள்ளன. இது மிகப்பெரியதன்று. இந்நூல் தென் பஞ்சாப்பில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

(ii) தசம்கிரந் அல்லது பத்தாவது குருவின் வேதம்: சீக்கியர் ஒன்றுக்கு பதில் இரண்டு வேதங்களை வைத்திருப் பது நமக்கு வியப்பையே அளிக்கும். ஆதிகிரந்த்தைப் போல் சம அளவுள்ள இந்நூல் ஆதிகிரந்த் இயற்றிய 125 ஆண்டுக்குப் பிறகும், குருகோவிந்த் இறந்து 26 ஆண்டுகளுக்குப் பின்பும் இயற்றப்பெற்றது. சுமார் 1428 பக்கங்களையுடைய இந்நூலில் நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்கள் குரு கோவிந்த் இயற்றிய பாக்கள் அடங்கியன. ஏனையவை இராமன், கிருஷ்ணன் முதலிய வர்களின் சாகசச் செயல்களையும், துர்க்கா தேவியைப் போற்றிப்

பாடும் பாடல்களையும், தேவர்களும், பிசாசுகளும் போர்புரிந்ததைக் கூறும் கதைகளையும், ஆயுதங்களைக் குறித்து விடுகதைகளையும், ஔரங்கசீப்பிற்கு எழுதப்பட்ட ஜாபர்நாமா என்ற கடிதத்தையும் கொண்டுள்ளது. பத்தாவது குருவின் போதனைகளை தவிர ஏனைய குருக்களின் போதனைகள் திருமறையில் புகுத்தப்படவில்லை.

IV. சீக்கிய சமயத்தின் இன்றைய நிலை:

குரு கோவிந்த் 1708ம் ஆண்டு இறந்த பின்பு சீக்கியர்கள் ஒரு கையில் கத்தியும் மற்றொரு கையில் கலப்பையும் பிடித்து வாழ்ந்தனர். நிலைவரமான விவசாய வாழ்க்கை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சீக்கியர்கள் 'கால்சா இளைஞர் கழகம்' அமைத்து செயல் படுகின்றனர். அம்ரிட்சாரில் கால்சா கல்லூரி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பத்தே சிங் என்பார் சீக்கியர்களின் தனி உரிமையைக் கோரி போராடினார். தற்போது சீக்கியர்களும், இந்துக்களும் திருமணத்தில் கலக்கின்றனர் என்பது சிறப்புக்கருத்து.

BIBLIOGRAPHY:

1. Besant, Annie — Seven Great Religions pp.27-36.
2. Ernest, Robert Hume — The World living Religions pp. 33 - 107.
3. Jaising, Herbert -- My Neighbours pp 27 - 36.
4. Macnicol, Nicol — The living Religions of Indian people pp. 263 - 288
5. Machlifre M A — The sikh Religion (6 Volume)
6. Manuel, D. Albert — Religions of the Indian people pp. 219 - 244.

சரதுஸ்திரிய சமயம்

அக்காலச் சூழலில் பல தெய்வ வழிபாடு, இயற்கை வணக்கம் சட்டங்களுக்கு கீழ்படியும் பண்பு இவை மலிந்திருந்தன. விவசாயம், மரம் நடுதல் இவை சிறப்பிக்கப்பட்டிருந்தன. அவஸ்தாவின் அடிப்படையில் பார்க்கின்ற வேளேயில் சமய ஆசாரிகள், போர்வீரர்கள் விவசாயிகள் என்ற மூன்று வகுப்பினர் சமுதாயத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர் எனலாம். அடிமைகளும் இருந்தனர். இச்சமயத்தைத் தோற்றுவித்தவர் ஸ்பிற்றமா சரதுஸ்தர். இதன் பொருள் பொற்சுடர்வெள்ளி, மஞ்சள் ஒட்டகம், உயிருடை விண்மீன் என்பதாகும். இவர் ஈரானுக்கு மேற்கே பிறந்தவர் என்பர். இவர் பிறந்தபொழுது அழாமல் சிரித்தாராம். தனது பதினேந்தாவது வயதில் தூயநூல் தரித்தார். முப்பதாவது வயதில் சமயப் பணியைத் துவங்கினர். விஸ்டாஸ்ப் என்ற மன்னரிடம் பணி செய்தார். பல இடங்களில் ஆலயங்களே ஏற்படுத்தினர். பணம் படைத்தோர் ஏழைகள் இவர்களிடையே காணப்பட்ட ஏற்றத் தாழ்வை வெறுத்தார். அற்புதங்கள் பலவும் செய்ததாகக் கூறப் படுகிறது. ஆலயத்தில் வழிபாடு செய்யும் பொழுது பகைவரால் வெட்டிக் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் அவரின் மருமகன் ஜமாஸ்பா சமயப் பொறுப்பை ஏற்ருர்.

I சமயபோதனேகள்:

அகுரமஸ்தா இச்சமயத்தின் முழுமுதற் கடவுள். இவர் பிறப்பறியாதவர், ஒளிமயமானவர், என்றும் மாருதவர், இருப்பவர், இறந்தவர், இருந்தவர், நித்தியப்பிதா, எல்லாவற்றையும் படைத்தவர், நியாயாதிபதி, ஆவியாய் இருப்பவர். இவரின் மற்ருெரு பெயர் **ஸ்பென்ட்மைன்யு**. ஓரிறைக்கோட்பாடு வலியுறுத்ததப்பட்டது. இவருக்குக் கருவியாக வேலே செய்யும் ஆறு துணைத் தூதர்கள். உண்டு.

1. நல்மனம் (Vohumanah.)
2. நீதியிடையவர் (Asha)
3. அரசாட்சி விரும்புகின்றவர் (Khshathra Vairya)

4. வழிபாடு அல்லது பக்தி (Armaiti)

5. முழு நிறைவானவர் (Haurvatat)

6. சாகாமை யுடையவர் (Amerctat)

நல்ல ஆவி (Spenta Mainya), தீய ஆவி(Angra Mainya) இவற்றிற்கிடையே எப்பொழுதும் போர் நடந்துக்கொண்டே இருக்கிறது. முடிவில் வெற்றிப்பெறுவது நல்ல ஆவியே. தீமை எல்லாம் வல்லது மல்ல, எங்கும் நிறைந்ததுமல்ல; அவை இருளில் இருப்பவை, ஆற்றல் அற்றவை. நன்மை தீமை இவற்றில் ஒன்று தெரிந்துக் கொள்ள சுய உரிமை யுண்டு

மனிதனின் ஆள் தன்மையில் ஐந்து மூலப்பொருட்களுண்டு அவையாவன:

1. உயிர்வீரியம் (A A V)

2. நான் என்றும் முனைப்பு (DAENA)

3. புலனுணர்வு (BAODHA)

4. அகம் (VRVAN)

5. உண்மையான ஆன்மீகப் பகுதி (FRAVASHI)

மனித உள்ளத்தின் சக்திகள் (Psychological Powers) பல உண்டு.

உயிர் (JAN)
ஆன்மா அல்லது அகம் (RAVAN)
பாதுகாக்கும் ஆவி (FAROHAR)
உணர்வு நிலை (BOD)
திறனுய்வுப் பண்பு (AKHO)
அறிவுத்திறன் அல்லது விவேகம் (KHART)
ஆய்ந்தறியும் பண்பு (VIR)
நினைவு (HOSH)
சமயம் (DINO)
உளச்சான்று (VAKSH)

எஸ்னு என்றும் நூல் மனிதனின் தனித்தன்மை பலவகைப் பண்புகளின் கூட்டு என்கிறது. மூன்று சடத்தன்மையும், மூன்று

உயிர்தன்மையும், மூன்று ஆவிக்குறிய தன்மையும் உள்ளது. அவை பின்வருமாறு :

கற்று	— சடப்பொருள் (GAEOA)
தனு	— சரீரம் (TANV)
அஸ்தி	—எலும்புக் கூடு (ASDI)
உஸ்டான்	— சுவாசம் (VSTANA)
கெயர்ப்ப	—ஆட்சம சரீரம் (KAHRP)
டவிசி	—உருவாகும் தனிப்பட்டத்தன்மை (TAVISI)
பௌடங்கா	—உள்ளுணர்ச்சி (BAODAMK)
உறுவான்	—ஆன்மா (URVAN)
பிரவாசி	—ஆவியின் தெய்வீகப் பொறி (FRAVASHI)

சரீரமரணத்தின் போது சடப்பகுதியில் உள்ள மூன்றும் அழிந்து விடுகின்றன உயிர்ப் பகுதிகள் மரணத்திற்குப் பின் சிலகாலம் நிலைத்து நின்று அழிந்து விடுகின்றன. கடைசியாக ஆவிக்குரிய பகுதி நிலைத்து என்றும் நிற்கிறது. ஆவிக்குரிய தன்மை வாய்ந்த மனிதன், உள்ளுணர்வால் உயர்ந்து, எங்கும் நிறைந்திருக்கும் தூய ஆவியோடு இரண்டறக் கலந்து, பேரின்பத்தை அடைய இவ்வுலகில் வாழ்கின்றான். ஆன்மாவின் முதல் மனிதன் நன்மை தீமைகளைப் பகுத்தறிகிறான். நன்மை செய்த ஆன்மாக்கள் மரணத்திற்குப் பின் சின்வெட் என்ற நியாயத் தீர்ப்புப் பாலம் விரிந்துக் கொடுப்பதால் கடந்து சென்று சரதுஸ்தரின் உதவியோடு அவ்வுலகம் சேர்கின்றன. தீமை செய்த ஆன்மாக்கள் பாவத்தைக் கடக்க முடியாமல் நரகத்தில் விழுகின்றன. மனிதன் தன் எண்ணம் சொல், செயல், இவற்றால் தானே தன் விதியை தீர்மானிக்கின்றான். மோட்சம் நீதி மான்களின் உறைவிடமாகவும், இன்னிசையின் இருப்பிடமாகவும் சித்தரிக்கப்படுகின்றது. நரகத்தில் ஆன்மாக்கள் பேய் பூதங்களாலும், அவியாத அக்கினியினாலும், கொடிய விஷ ஜந்துக்களினாலும், துன்புறுத்தப்படுகின்றன. சரதுஸ்திரிய சமயம் உயிர்தெழுதலும் நியாயத் தீர்ப்பும் உண்டு என்று போதிக்கின்றது. நியாயத்தீர்ப்புக்குப்பின்